# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 08
குவிப்பு - 01
பக்கங்கள் - 14

விலை ரூபா 15.00

ஜனவரி 2005

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


# கடலன்னையின் சீற்றம்

## பல்லாயிரம் பேரைப் பலிகொண்ட பேரழிவு


## தமிழர் தாயகமெங்கும் சோகம்!


உள்ளே

- தன்னார்வ பணியாளர்!
ஓர் சிறப்புப் பார்வை. பக். 7

- திருத்தந்தையின் பிரதிநிதி!
நினைவுப் பதிவுகள். பக்.11


சுனாமி எனப்படும் பேரலையின் கோரத்தாண்டவத்தினால் ஆசியாக் கண்டமே அதிர்ச்சியில் உறைந்துபோய் உள்ளது. கடந்த 26.12.2004 அன்று சுமாத்ரா தீவில் கடலில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் தாக்கம் சுனாமி எனப்படும் பேரலையாக உருவெடுத்து இந்தனோசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து போன்ற 13 ஆசிய நாடுகளின் கரையோரங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதுவரையில் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இறந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 9ம் பக்கம்)



## மன்னாரில் நிலவிய பதட்டம் - நகரம் வெறிச்சோடியது!

## பல்லாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

சுனாமி அலையின் தாக்கம் நேரடியாக மன்னார் கரையோரங்களைத் தாக்காவிடினும் அதன் அச்சம் காரணமாக மன்னார் நகரமும் அதனைச் சூழவுள்ள கிராமங்களும் பெரும் அல்லோல கல்லோலப்பட்டன. திடீர் எனப் பரவிய வதந்திகளும் மக்களை கிலிகொள்ளச் செய்து இடம்பெயர வைத்தன. பல மக்கள் தமது இல்லிடங்களைவிட்டு பாதுகாப்பான தூர இடங்களை நோக்கிச் சென்றனர். முருங்கன், வவுனியா போன்ற இடங்களுக்கு சென்ற பலர் அங்கே தமது உறவினர்களின் வீடுகளிலும் பாடசாலைகளிலும் தங்கியிருந்தனர். அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்டன.




சுனாமி அலையின் தாக்கத்திற்கு உள்ளாகி உயிரிழந்தவர்களும் தமது அருமைக் குழந்தைகளை பறிகொடுத்து அலறித்துடிக்கும் பெற்றோர்களும்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் விரைந்த உதவி

## யாழ் ஆயர் நன்றி தெரிவிக்கிறார்

### வாழ்வுதய இயக்குனர் மன்னாவுக்கு பேட்டி



சுனாமி அலையின் தாக்கத்திற்குள்ளாகி நிற்கதியாய் நிற்கும் மக்களுக்கு உதவுவதற்காக மன்னார் ஆயர் விடுத்த வேண்டுகோளை ஏற்று மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பல பங்குகளில் உதவி நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இவை பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்த நிவாரண உதவி தொடர்பாகவும் தான் நேரில் கண்ட நெஞ்சை உருக்கும் சம்பவங்கள் தொடர்பாகவும் வாழ்வுதய இயக்குனர் யேசுறாஜா அடிகளார் மன்னாவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது. (9ம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான புதிய நியமனங்கள்

அருட்பணியாளர்கள்-

பெப்பி சோசை - பங்குத்தந்தை - வவுனியா, வவுனியா மறைக்கோட்ட முதல்வர்
அருள்நாதன் - பங்குத் தந்தை - விடத்தல்தீவு, ஆசிரியர் - விடத்தல்தீவு பாடசாலை
எட்மன்ட் மைக்கல் (அமதி) பங்குத்தந்தை கோமரசன் குளம் (தற்காலிகம்)
ஜெயபாலன் குரூஸ்- விரிவுரையாளர், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி
இராயப்பு - நிதியாளர் - ஆயர் இல்லம், மன்னார், ஆசிரியர்- பள்ளிமுனைப் பாடசாலை
ஞானாதிக்கம் - பங்குத்தந்தை - தாழ்வுபாடு, ஆசிரியர் - தாழ்வுபாடு பாடசாலை
அவிதப்பர் - இயக்குனர் - திருத்தந்தையின் மறைபோதக சபைகள் (P.M.S)
யோகராஜா - பங்குத் தந்தை - ஓமந்தை
இராஜநாயகம் - பங்குத்தந்தை - அடம்பன்


புதிய பணிப்பொறுப்புக்களை ஏற்கின்ற அருட்பணியாளர்களை மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது! - பதிப்பாசிரியர்

## மன்னார் மறைமாவட்ட அருட்பணி மாநாடு ஒத்திவைப்பு

நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத பேரழிவு காரணமாக ஜனவரி 3 தொடக்கம் 5ந் திகதி வரை நடைபெறுவதாக இருந்த மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாடு ஜனவரி 20ந் திகதி தொடக்கம் 22ந் திகதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. *நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும்* என்ற கருப்பொருளில் இடம்பெற உள்ள இந்த மாநாடு 2005ம் ஆண்டுக்கான மறைமாவட்டத்தின் அருட்பணிகளைப் பற்றி விவாதித்து முடிவுகளை மேற்கொள்ளும். குருக்கள், பங்குப் பிரதிநிதிகள், பக்திச் சபைகளின் பிரதிநிதிகள், ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், துறவற சபைகளின் பிரதிநிதிகள், துறைசார் வல்லுனர்கள் எனப் பல்வேறு தரப்பினர் இதில் பங்கேற்க உள்ளனர்

## பாதிப்புற்ற மக்களுக்கு 'செவி மடுக்க' 'உடன் இருக்க' குருக்கள் குழு வன்னி விரைவு

சுனாமியினால் பாதிப்புற்று உயிர்களையும் உடமைகளையும் பறிகொடுத்து நிர்க்கதியாகி விரக்தியின் விளிம்பில் நிற்கும் மக்களுக்கு இன்றைய அவசரத்தேவை உணவு உடை உறையுள் போன்றவற்றோடு ஆன்மீக - உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தலும் ஆகும். இந்தப்பணியைச் செய்ய மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து குருக்கள் குழு ஒன்று முல்லைத்தீவுப் பகுதிக்கு சென்றுள்ளது. இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களோடு இருந்து அவர்களின் சோகக் கதைகளுக்கு செவிமடுத்து தமது ஆன்மீக உளவியல் ரீதியிலான ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றனர்.



திருத்தந்தையின் பிரதிநிதி திறந்த வாகனத்தில் மன்னாருக்குள் அழைத்து வரப்படுகின்றார்.

"ஆண்டவரே உம் மக்களின் சபை நடுவே உம்மை புகழ்ந்து பாடுவேன்!" (திருப்பாடல் 22: 26 - 32)

# மன்னா

## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## உள்ளத்தை உறைய வைத்த வெள்ளத்தின் கோரம்

இயற்கை நம்மை மிகக்கொடுமையாக வஞ்சித்து விட்டது. கடலுக்குள்போனால்தான் ஆபத்து என்று நினைக்கும் மக்களை கடல் வீடு தேடி வந்து அவலக்குரல் எழுப்ப இழுத்துச்செல்லும் கோரக் காட்சி நெஞ்சை நெகிழ வைத்து விட்டது. எல்லாமே ஓரிரு நிமிடங்கள்தான். ஆசிய நாடுகள் பலவற்றின் - குறிப்பாக இலங்கையின் - கரையோரப் பிரதேசங்கள் சிதைக்கப்பட்டு சுடுகாடாகி விட்டது. உயிர்களையும் உடமைகளையும் பறிகொடுத்த மக்கள் விரக்தியின் விழிம்பில் நின்று மௌனமாக மனதுக்குள் அழுகின்றனர்.

### பாராட்டப்படவேண்டிய பக்குவமான மனநிலை

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசரமான மனிதாபிமான உதவிகளைச் செய்ய தனிநபர்களும் அமைப்புக்களும் விரைந்து முன்வந்து செயற்பட்டமை உண்மையில் பாராட்டப்பட வேண்டியதே! இப்படியான ஒரு தேசிய அனர்த்தத்தின்போது இன மத பிரதேச வேறுபாடுகளைக் கடந்து மக்கள் அனைவரும் சகோதர மனப்பான்மையோடு தம்மால் இயன்ற உதவிகளை துரிதமாக வழங்கியமை குறித்து பலரும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்கள். இன முரண்பாடுகளால் பிளவுண்டு கிடக்கும் இலங்கை மக்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக இது அமைந்திருந்தது. இந்த சகோதர மனப்பான்மை எல்லா வேளைகளிலும் எல்லா சந்தர்ப்பத்திலும் தொடரப்பட வேண்டியதொன்றாகும்.

### துரிதமாக்கப்பட வேண்டிய தொடர் உதவிகள

பாரிய மனித அவலங்கள் நடைபெறும்பொழுது அவற்றை தொலைக்காட்சிகளில் பார்த்த உடனே அல்லது அவை பற்றி செய்திகளில் கேள்விப்பட்ட உடனே அனுதாபப்படுவதும் உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்று உதவி செய்ய முற்படுவதும் வழமை. ஆனால் சில நாட்களிலேயே அந்த அனுதாப அலை அடங்கி ஒடுங்கி வற்றிப்போய் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி சிந்திக்கவே நேரமில்லாமல் நமது நாளாந்த கடமைகளில் நாம் மூழ்கி விடுவோம். ஆனால் இந்த அனர்த்தம் விளைவிக்கும் நீண்டகாலப் பாதிப்புக்கள் பற்றி பாதிக்கப்படாத அனைவருமே சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது மிகவும் முக்கியம்.

சிதைக்கப்பட்ட மனித உயிர்களை மீளப் பெறமுடியாது. ஆனால் சின்னாபின்னமாக்கப்பட்ட உடமைகளை நீண்ட காலத் திட்டத்தில் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மீளவும் கட்டியெழுப்ப முயற்சிக்கும். இம்முயற்சிக்கு கை கொடுக்கும் அதேவேளை பாதிக்கப்படாத மக்கள் பாதிப்புக்குள்ளான மக்கள் மட்டில் செய்யவேண்டிய இன்னுமொரு முக்கியமான உதவி உள்ளது. அதாவது உள்ளத்தில் ஆறாத வடுக்களை ஏற்படுத்திச் சென்ற இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களோடு 'உடன் இருந்து' அவர்களின் சோகக் கதைகளுக்கு 'செவிமடுத்தல்' ஆகும்.

### எதிர்கால முன்னெச்சரிக்கை.....!

மிகப் பெரிய மனித அவலம் ஒன்று நடைபெற்று முடிந்த பின்னர் அதை எவ்வாறு தடுத்திருக்க முடியும் என்று புத்திசாலித்தனமாகப் பேசுவது மிகவும் சுலபம். மேற்குலக நிலவியல் வல்லுனர்கள் இப்பேரனர்த்தம் தொடர்பாக தெரிவித்து வரும் கருத்துக்கள் பற்றி இன்றைய எமது சூழ்நிலையில் இவ்வாறுதான் நம்மைச் சொல்ல வைக்கின்றன. ஆயினும் அவர்களின் கருத்துக்கள் கவனத்துக்குரியவை.


ஆசியாவில் ஆயிரக்கணக்கான உயிர்களை கணப்பொழுதில் பலிகொண்ட கடற்கோளைப் போன்ற இயற்கை அனர்த்தங்களில் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இயன்றவரை குறைக்கக்கூடிய முன்னெச்சரிக்கை அறிவிப்பு அமைப்பு முறைகள் (Early Warning Systems) நிர்மாணிப்பதற்கு உலக அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். ஆசியாவின் கரையோரத்தில் கடந்த டிசம்பர் 26ம் திகதி மலைக்க வைக்கும் ஆபத்தைத் தரக்கூடிய பூமியதிர்ச்சியொன்றைக் கண்டுபிடித்த அமெரிக்க அதிகாரிகள் இராட்சத அலைகள் நகர்ந்துகொண்டிருந்தது குறித்து எச்சரிக்கை செய்ய அவதிப்பட்டுக்கொண்டிருந்தபொழுதிலும், இப்பிராந்திய நாடுகளில் உத்தியோகபூர்வ முன்னெச்சரிக்கை அறிவிப்பு அமைப்பு முறை (Official Alert System) எதுவுமே இல்லாத காரணத்தினால் அவர்களின் முயற்சி பலனளிக்காமல் விபரீதம் ஏற்பட்டுவிட்டதாக அமெரிக்காவின் கவாய் தீவில் உள்ள பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையத்தின் (Tsunami Warning Centre) இயக்குனர் தெரிவித்திருந்தார்.

எனவே இதுவிடயத்தில் இனிமேலும் ஆசிய நாடுகள் மெத்தனமாக இருக்க முடியாது. விரைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே பாதிப்புற்ற மக்களின் துன்பத்தை நம்முடையதாக எண்ணி சிந்திப்போம் செயற்படுவோம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை

அன்புடன் - அருட்பணியாளர் நேசன்,
பதிப்பாசிரியர்.



# வாசகர் எண்ணங்கள்

### இல்லங்கள் தோறும் நற்செய்தி!

உன்னதமான மன்னாவே உனது சேவைகள் பற்பல
மாதம் தவறாமல் வந்து மனதை இதமாக்குகின்றாய்
இல்லங்கள் தோறும் நற்செய்தியைப் பொழிகின்றாய்
குடும்பங்கள் செழித்திடவே தென்றலாக வீசுகின்றாய்
சின்னஞ் சிறுவருக்கு அறிவினையே ஊட்டுகின்றாய்
உன் சேவை பாரெல்லாம் பரவி இன்னும் புகழ் சேர்க்க
மனமார வாழ்த்துகின்றேன், இறைவனை வேண்டுகின்றேன்..

*ஆ. பேள்சினி, வெளிக்குளம், வவுனியா.*

### காலத்தோடு காலடி வை!

அன்பின் மன்னா, எங்கள் மண்ணில் தவழும் உன்னை அன்போடு அணைத்துக்கொள்கின்றோம். பல சுவையான அம்சங்களைச் சுமந்து வரும் மன்னாவே, நீ காலத்தோடு எம்மிடம் காலடி வைத்தால் என்ன? நாங்களும் நீ சுமந்து வரும் போட்டிகளில் கலந்து பரிசு பெறலாம் அல்லவா?

தொடர்ந்து உன் பணிகள் மனித நேயத்தை வளர்க்கட்டும், இறையரசுக்கான வழிகளை ஆயத்தம் செய்யட்டும் என வாழ்த்தி விடை பெறுகின்றேன். *உன் அன்பு வாசக நெஞ்சம்,*

*திருமதி. பற்றீசியா, பிரான்ஸ்.*

பதிப்பாசிரியர் குறிப்பு: மன்னாவை நேரகாலத்தோடு வெளிக்கொணர படாத பாடுபடுகின்றோம். ஆனாலும் சில வேளைகளில் தவிர்க்க முடியாமல் தாமதமாகி விடுகின்றது. முயற்சிக்கின்றோம்.

### மனங்களைக் கொள்ளை கொள்கின்றாய்!

மணம் வீசும் மன்னாவே, உன் புகழ் ஓங்குகவே. திக்கனைத்தும் தெவிட்டாத அமுதமாக உன்னை ருசித்து ரசித்து மகிழ்கின்றோம். நீ பல மனித மனங்களைக் கொள்ளை கொண்டுவிட்டாய். மன்னாவே, பலரும் உன்னால் பயன்பெற்றிட சிறப்பான தகவல்களை மாதமொருமுறை நீ தாங்கி வலம் வருகின்றாய். உன்னில் பொதிந்துள்ளவை (ஆக்கங்கள்) என்னையும் கவர்ந்துள்ளன. 'மன்னா' என்னும் என் மன்னவா! உன் புகழ் எத்திசையும் ஒலிக்க வாழ்த்துகின்றேன். உனை வித்தாக - விருட்சமாக - விழுதாக உருவாக்கி பலரும் பயன்பெற்றிட அயராது உழைக்கும் அன்புசால் இறை பணியாளர்கள் யாவருக்கும் என் நன்றிகள் - வாழ்த்துக்கள் உரியனவாகுக. மென்மேலும் நீ மணம் கமழ்ந்து வளர்ந்திட வாழ்த்துகின்றேன். உன் மணம் எங்கும் வீசட்டும்.

*செ. மரியதாசன்,*
*பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.*

### ஒவ்வொரு வீட்டிலும் மன்னா

நாம் வாழுகின்ற பிலிப்பைன்ஸ் நாட்டில் நாம் படிக்கின்ற ஒரேயொரு தமிழ்ப் பத்திரிகை உங்கள் மன்னா பத்திரிகைதான் என்பதை தங்களுக்கு தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஓர் அந்நிய நாட்டில் - நமது தாய் மொழியில் மண்ணின் செய்திகளை அறிந்துகொள்வதில் நாம் பேருவகை கொள்கின்றோம். கடந்த யூலை மாதம் நான் லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய இடங்களுக்கு சென்றிருந்தேன். இந்நாடுகளில் நான் சென்ற ஒவ்வொரு வீட்டிலும் மன்னா பத்திரிகையைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். அங்குள்ளவர்கள் மன்னா பத்திரிகையை ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருப்பதையும் கண்டேன்.

உங்கள் பணி சிறக்க உங்கள் பணியகத்தில் பணி செய்யும் அனைவருக்காகவும் ஆண்டவரிடம் வேண்டுகின்றேன். எனது நத்தார் புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

*அருட்சகோதரி கத்தறின் கூஞ்ஞு,*
*பிலிப்பைன்ஸ்*



# உண்மையின் எண்ணங்கள்



## வழிபாட்டின்போது கவனிக்க வேண்டியவை!

### வழிபாட்டின்போது முக்காடு அணிதல்

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்தில் 11ம் அதிகாரத்தில் "பெண்கள் இறைவேண்டல் செய்யும்போது அல்லது இறைவாக்குரைக்கும்போது தலையை மூடிக்கொள்ள வேண்டும் என்றும், அப்படிச் செய்யாதவர் தம் தலைவரை இகழ்ச்சிக்குள்ளாக்குகிறார்" என்றும் கூறியுள்ளார்.

நாம் நடைமுறையில் பார்க்கும்போது கழுத்தில் அணிந்திருக்கும் கிலோக் கணக்கான நகைகளும் காதில் அணிந்திருப்பவையும் தலையில் மாட்டி இருக்கும் பல நிறக் கிளிப்புகளும் பின்னால் இருப்பவர்களை காந்தம் இரும்பை இழுப்பதுபோல சுண்டி இழுக்கின்றன. இது வழிபாட்டில் ஈடுபடுவதற்குப் பெரும் தடையாக இருக்கிறது. குளிக்கப்போய் சேறு பூசும் செயலாக இது மாறுகிறது. எல்லோரும் வசதி படைத்தவர்கள் அல்ல. சிலரின் பகட்டான செயற்பாடு வசதியற்றவர்களை வழிபாடுகளுக்கு வரமுடியாமலே செய்துவிடுகின்றது. வந்தவர்களையும் திசை திருப்புகிறது. வெளிநாட்டு வெள்ளைக்காரப் பெண்கள் முக்காடு அணிவதில்லை என்கிறீர்களா? அவர்கள் தலையிலையோ கழுத்திலையோ இருந்து கவர்ந்திழுக்கும் பொருள் எதுவும் மின்னுவதில்லை. வழிபாட்டின்போது பெண்கள் முக்காடு அணியும் திருச்சபையின் வழக்கத்தை மீண்டும் (கண்டிப்பாக?) நடைமுறைப்படுத்தினால் நமது வழிபாட்டின்போது இடம்பெறக்கூடிய பல அசௌகரியங்களை நாம் இல்லாமல் செய்யலாம் அல்லவா?

### நாய்களின் தொல்லை அதிகரிக்கின்றது!

வழிபாட்டு நேரத்தில் நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது. சிலர் வழிபாட்டுக்கு வரும்போது நாய்களையும் அழைத்து வருகின்றனர் அல்லது நாய்கள் சேர்ந்து வந்துவிடுகின்றன. பல நாய்கள் ஒன்றாகக் கூடினால் என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியும். வழிபாட்டுக்கு - கோவிலுக்கு வரும்போது நாய்களை சங்கிலியில் கட்டி விட்டு வருவது நல்லது. நயிலோன் கயிற்றினால் கட்டிவிடுவதால் கயிற்றை அறுத்துக்கொண்டு வந்து கோவிலை அசுத்தம் செய்கின்றன.

### ஆலயத்தில் ஓடித் திரியும் சிறுவர்கள்

பிள்ளைகள் கோவிலில் ஓடித் திரிகிறார்கள். பூசை முடிந்தவுடன் கோவில் ஒரு களியாட்ட இடம்போல் இருக்கிறது. கதையும், சிரிப்பும் அமர்க்களமாய் இருக்கிறது. கோவில் புனிதமான இடம் என்பதை சிறுவர் உள்ளத்தில் பதியவைக்க வேண்டும். தேவநற்கருணையில் இயேசு உயிருடன் இருக்கிறார் என்ற உணர்வு பிள்ளைகளில் இருந்தால் ஓடுதல், அடித்தல், பிடித்தல், சத்தம் போடுதல் போன்ற செயல்கள் இருக்காது. கோவிலை ஒரு விளையாட்டு இடமாக உபயோகித்தால் வழிபாடுகளின் போது பக்தி இருக்க மாட்டாது. இதையே இயேசுவும் "இறைவனின் இல்லத்தை ஏன் கல்வர் குகையாக்குகிறீர்கள்" என்றார். பி. ஜெயம், வவுனியா

### சிரிக்க சிந்திக்க..! *செய்தியில் அக்கறை*



அந்த அம்மாள் அடிக்கடி தொலைக்காட்சிக்கு முன் உட்கார்ந்து செய்தி வாசிப்பதை மிகக் கூர்மையாக பார்த்துக்கொண்டிருப்பார்கள். இதை அவதானித்த நண்பனொருவன் அவளுடைய மகனிடம் கூறினான் "உங்க அம்மாவுக்கு உலக நடப்புக்களில் எவ்வளவு அக்கறை பார். செய்தியை எவ்வளவு கவனமாக கேட்கிறார்கள் என்று"

"சரியாப் போச்சி, எங்க அம்மா செய்தி வாசிக்கிற பெண்ணின் ஆடை அலங்காரத்தையும் நகைகளையும் அல்லவா பார்க்கிறாங்க" என்றான் அருமை மகன்.

### சிந்திக்க..... சிந்திக்க.....



அனேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கலை, அறிவியல், கணிதம், போன்ற பாடங்களைப் படிப்பதற்கு எவ்வளவோ பணம் செலவளித்துக் கஸ்ரப்படுகின்றனர். சுவாமியார் எவ்வளவுதான் பிரசங்கத்தில் சொன்னாலும் மறைக்கல்வி மற்றும் வேத பாடங்களுக்கு அவர்களை அனுப்ப முழு முயற்சி எடுப்பதில்லை.

இதை அவர்கள் தனியாக வயோதிபர் இல்லங்களிலோ அல்லது அனாதை ஆஸ்பத்திரிகளிலோ இருக்கும்போதுதான் உணர்கிறார்கள். *(நன்றி - வாழ்வு தரும் வார்த்தை)*

### புனிதர் பொன்மொழி

"நம்முடைய அன்பின் மீட்பர் அவருடைய வாழ்வின் கடைசி இரவில் ... மனிதர் மீதிருந்த அன்பிற்காக இறப்பதை அறிந்து. நம்மை தனிமையாக விட்டுவிட மனமில்லாதவராய்... தம்மை முழுவதுமாய் நமக்காக பலிப்பீடத்தின் திருவருட்சாதனத்தில் விட்டுச் சென்றார். தம் அன்பை வெளிப்படுத்த இதைத்தவிர வேறெதைச் செய்ய முடியும்"

- புனித அல்போன்ஸ் லிகோரியார் -



### புனிதர் பொன்மொழி

"நற்கருணையில் உம்முடைய உண்மையான பிரசன்னத்தை நான் சந்தேகிப்பதில்லை. அவர் வாழ்ந்தபோது நானில்லை என்று ஏங்கி அந்த ஏக்கத்தை என்னிடம் வெளிப்படுத்தியவர்களைக் கண்டு நான் பரிதாபப்படுகின்றேன். காரணம் இந்த உயிருள்ள நற்கருணையில் உம்மை நான் மெய்யாகவே பெற்றுக் கொள்கிறேன். இதைவிட மேலானது வேறென்ன வேண்டும் எனக்கு?"

- புனித அவிலா திரேசா -

# யுத்தம் அழிவிற்கு வழிசமைத்தது


## தொடர்ந்தும் நாம் பாதிப்புக்களை சந்திக்க முடியாது

### மாமக்கள் நிகழ்வில் மன்னார் ஆயர்

கடந்த கால யுத்தத்தினால் நாம் பல வகையில் பாதிப்புக்குள்ளானோம். பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இவ் இழப்புக்களை ஈடுசெய்வதனால் மட்டுமே விரக்தி மன நிலையினையும் வெறுப்பு மனநிலையினையும் இல்லாதொழிக்க முடியும். இதன் மூலம் நாம் நிரந்தர சமாதானத்தை பெறமுடியும் என மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாமக்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப்பு ஆண்டகை தெரிவித்தார்.


மேலும் அவர் தமது உரையில், யுத்தம் அழிவுக்கு வழிசமைத்தது, தொடர்ந்தும் நாம் பாதிப்புக்களை சந்திக்க முடியாது. விரைவாக சமாதானம் ஏற்படவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒருமித்து செயற்படுவோம் என்றார். கடந்த 20 வருடகால யுத்தத்தின்போது உயிர்களை பறிகொடுத்த குடும்பங்களை கௌரவிக்கும் முகமாகவும் இறந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களது ஆன்ம சாந்திக்காக செபிக்கவுமே இந்நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



மாமக்கள் நிகழ்வில் பங்கேற்ற சர்வமதத் தலைவர்கள்

## பங்குத் தள சங்கதிகள்



### வஞ்சியன்குளத்தில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல்நாட்டு விழா





வஞ்சியன்குளம் புனித இராயப்பர் ஆலய அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த 27.08.2004 அன்று நடைபெற்றது. புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை ஆசீர்வதிப்பதையும் நறுவிலிக்குள ஆலயத் தலைவர் திரு. ச. ஜெகநாதன், வஞ்சியன்குளம் சித்த வைத்தியர் திரு. சீமான் மற்றும் புதுக்கமம் ஆலயத் தலைவர் திரு. குணரெத்தினம் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டுவதையும் படத்தில் காணலாம்.

### யோசவ்வாஸ் நகரிற்கு சிங்கப்பூர் ஆயர் வருகை

யேசுசபை அகதிப் பணியினரால் ஜோசவ்வாஸ் நகரிலே நடைபெற்றுவரும் மாலை நேர வகுப்புகளில் கல்வி பயிலும் பிள்ளைகளையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பிள்ளைகளின் பெற்றோரையும் தரிசிக்க வந்த சிங்கப்பூர் ஆயர் அவர்களையும் யேசுசபை அகதிப்பணி நெறிகாசிய இயக்குனர் அருட்பணி அமல்றாச் அவர்களையும் அருட்பணி கொலின்ரன், அருட்சகோதரி கெரமி, யார்ட் அவர்களுடன் இணைந்து வந்த சகோதரர்களையும் மாலை நேர வகுப்பில் கல்வி பயிலும் பிள்ளைகள் மாலை அணிவித்து மலர்கள் தூவி வருக வருகவென அன்போடு வரவேற்றனர். எல்லோரையும் ஒன்றாகக் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்று கூறிய ஆயரவர்கள் இறைவனைப் புகழ்ந்து ஒன்றாக வாழுங்கள் என்று கூறி இறை ஆசீரையும் மக்களுக்கு வழங்கினார். அதன்பின் இக்குழுவினர் ஜோசவ்வாஸ் நகரிலுள்ள சில குடும்பங்களைத் தரிசித்து மகிழ்ந்தனர்.

### பூவரசன் குளத்தில் நல்லாயன் சகோதரிகள் இல்லம்

நல்லாயன் அருட்சகோதரிகளுக்கான புதிய இல்லம் வவுனியாவில் உள்ள பூவரசன்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் 22ந் திகதி இந்த இல்லம் ஆசீர்வதிக்கப்பட்டு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பல குருக்கள் துறவியர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

### விவிலியக் கற்கைநெறி சான்றிதழ் விழா

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 2004ம் ஆண்டு நடாத்தப்பட்ட விவிலிய கற்கை நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் டிசம்பர் மாதம் 22ந் திகதி புதன் கிழமை காலை 10.00 மணியளவில் குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளாரின் தலைமையில் பொதுநிலையினர் பணியகத்தில் இடம்பெற்றது. இயக்குனர் விக்ரர் சோசை அடிகளார் இந்நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

### மன்னார் ஞானோதயம் ஆன்மீகக் கல்வி மையத்தின் கருத்தமர்வு பற்றிய விபரங்கள்

**தை 2005**

திகதி: 08.01.2005 சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை.
தலைப்பு: "நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும்" பங்கேற்போர்: பொதுநிலையினர், பக்திச் சபையினர், மறையாசிரியர்கள். விண்ணப்ப முடிவு திகதி: 31.12.2004. உணவிற்காக அன்பளிப்பு: 50/=

திகதி: 15.01.2005 சனிக்கிழமை காலை 8.30 மணி - மாலை 4.00 மணிவரை.
தலைப்பு: "இறைவெளிப்பாடு" (இறையியல் கற்கை நெறி ஆரம்பம் (தை 2005 - மார்கழி 2005 வரை) பங்கேற்பாளர்: பொது நிலையினர், மறையாசிரியர்கள். விண்ணப்ப முடிவு திகதி: 03.01.2005. உணவிற்காக அன்பளிப்பு: 50/=

**மாசி – 2005**

திகதி: 12.02.2005 சனிக்கிழமை காலை 8.30 மணி - மாலை 4.00 மணிவரை.
தலைப்பு: "பழைய ஏற்பாடு" (இறையியல் கற்கை நெறி)

திகதி: 19.02.2005 சனிக்கிழமை காலை 8.00 மணி - மாலை 4.00 மணிவரை.
தலைப்பு: "நற்கருணையும் துறவறவாழ்வும்" பங்கேற்பாளர்: எல்லா ஆண், பெண் துறவியர். விண்ணப்ப முடிவு திகதி: 10.02.2005. உணவிற்காக அன்பளிப்பு: 50/=

திகதி: 26.02.2005 சனிக்கிழமை காலை 8.30 மணி - மாலை 4.00 மணிவரை.
ஞாயிறு காலை 8.30 மணி - மாலை 4.00 மணிவரை.
தலைப்பு: "பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும;" பங்கேற்பாளர்: உயர்தர வகுப்பு மாணவர்கள். விண்ணப்ப முடிவு திகதி: 20.02.2005. உணவிற்காக அன்பளிப்பு: 100/=

### புலம்பெயர் நாட்டில் வாழும் உடன் பிறப்புகள் கவனத்திற்கு

ஏற்கனவே சில நாடுகளில் எமது மன்னா பத்திரிகையை எடுத்து விநியோகம் செய்யும் முகவர்கள் உள்ளனர். இந்நாடுகளில் உள்ளவர்கள் புதிதாக சந்தாதாரராக சேர விரும்பினால் இவர்களோடு தொடர்பு கொள்ளுங்கள். ஏற்கனவே சந்தாதாரராகி சந்தாவை புதுப்பிக்காதவர்களும் இவர்களோடு தொடர்புகொண்டு சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

எமது முகவர்கள்

MR. A. M. THEOPHILAS,
HOTTAOIKGAGEN – 14
4048 HAFRSTJORD
NORWAY

MR. N.M. JEYARATNAM,
110, AVE PDT WILSON,
93100 MONTREUIL,
FRANCE.

MR. THOMAS RAJANAYAGAM,
PROVST DRESLERSVEJ 28, 3TH,
9900 FREDERIKSHAVAN,
DENMARK


MR. S. GANESAN,
GIEBENACHER STR. 53,
CH 4133 PRATTELN,
SWITZERLAND.

MR. M. GABRIEL,
ANTFELDER STR. 16,
59929 BRILON,
GERMANY


தமிழ் மக்கள் வாழும் ஏனைய இடங்களிலும் நாடுகளிலும் மன்னாவை விநியோகிக்கக்கூடிய நல்லுள்ளங்களை எதிர்பார்க்கின்றோம்.

நீங்கள் வாழும் நாடுகளில் மன்னா பத்திரிகை பெறாத பலர் உள்ளனர். நீங்கள் பெற்ற இன்பத்தை நீங்கள் வாழும் இடங்களில் உள்ள ஏனையவர்களும் பெற நீங்கள் ஏன் உதவி செய்யக் கூடாது? மன்னா பத்திரிகை விநியோகம் என்பது நற்செய்திப் பணியில் பங்கெடுக்கும் ஓர் முயற்சியாகும் என்பதை மறக்காதீர்கள். - பதிப்பாசிரியர்

மன்னா முகவர்களாக செயற்பட விரும்புகின்றவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளவும்.



## தைத் திருநாள் வாழ்த்துக்கள்



மன்னா வாசகர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்து நிற்கின்றோம்.


பதிப்பாசிரியர் மற்றும் மன்னா பணியகத்தினர்

# சிறுவர் பொழிவு

## பேராசை பெருநட்டம் சிறுவர் கதை

தென்நாட்டிலே குமரபுரம் என்னும் சிற்றூர் ஒன்று உண்டு. அவ்வூரிலே ஏழை உழவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் நெடுமாறன் என்னும் பெயருடைய ஒருவன் இருந்தான். நெடுமாறனின் மனைவி பெரிய நாயகி. நெடுமாறனும் பெரிய நாயகியும் பூவும் மணமும் போல, நகமும் சதையும் போல இணைந்து வாழ்ந்து வந்தனர். நெடுமாறன் அதிகாலையில் எழுந்து எருதுகளை நடத்திக்கொண்டு வயலுக்குச் செல்வான். அவற்றை புல் உள்ள இடங்களில் கட்டுவான். செடி கொடிகளுக்கு தண்ணீர் இறைப்பான். முற்றிய காய்பிஞ்சுகளை பறித்து ஓரிடத்தில் சேர்ப்பான். பெரிய நாயகி காலை உணவை எடுத்துக்கொண்டு வயலுக்குச் செல்வாள். கணவனுக்கு உணவைக் கொடுத்துவிட்டு காய் பிஞ்சுகளை கடகத்தில் எடுத்துக்கொண்டு வீடு திரும்புவாள். அயலில் உள்ள சந்தையில் கொண்டு சென்று விற்பாள்.

நெடுமாறன் பாடுபட்டு உழைத்தும் தோட்டத்தில் இருந்து கிடைக்கும் வருவாய் குறைவாக இருந்தது. பயிர்ச் செய்கையுடன் கோழி வளர்த்தால் என்ன என்று நினைத்தான். ஒரு நாள் வீட்டு வாசலில் நின்றபோது அங்கு ஒரு முதியவர் வந்தார். சோதனையோ வேதனையோ அறியோம்! முதியவர் கையில் இருந்த கோழியை குறைந்த விலை கொடுத்து பெற்றுக் கொண்டான் நெடுமாறன். கூட்டிலே சேர்த்தான். அந்த விசித்திரமான கோழி ஒரு நாள் பொன் முட்டை ஒன்றை இட்டது. அதனைக் கண்ட நெடுமாறன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். துள்ளிக் குதித்தான். அதிஸ்ட தேவதையே முதியவர் வடிவில் வந்திருக்க வேண்டும் என்று எண்ணி ஆசை மனைவியை அழைத்தான். "அடி! அடி! அதிசயம் அதிசயம்! நான் வாங்கிய புதிய கோழி பொன் முட்டை போட்டிருக்கு"



என்று கூறினான். பெரிய நாயகியின் கண்கள் அகல விரிந்தன. ஒன்றும் புரியாதவளாகி தவித்தாள்.

கல்வி அறிவு குறைந்த நெடுமாறன் ஒரே நாளில் பெரும் பணக்காரனாகி விட எண்ணினான் "அந்தக் கோழி பத்துத் தினங்களில் இடும் முட்டைகள் அனைத்தையும் ஒரே நாளில் பெற்றுக்கொண்டால் எடுத்த எடுப்பில் பெரும் பணக்காரனாகி விடலாம்" என்று எண்ணினான். நீண்ட நேர ஆலோசனையின்பின் அவனுக்குப் புதியதொரு எண்ணம் தோன்றியது. அதனை பெரிய நாயகிக்குக்கூட சொல்லவில்லை. செயலில் இறங்கி விட்டான். பாவம்! துரதிஸ்டம் அவனைத் துரத்திக்கொண்டு வந்தது. கூரிய கத்தியைக் கொண்டு கொல்லைப் பக்கம் சென்றான். எல்லா முட்டைகளையும் ஒரே நாளில் எடுக்கும் எண்ணத்தோடு கோழியின் வயிற்றைக் கத்தியால் கீறினான். பாவம் அங்கே அவன் எதனைக் கண்டான்? கோழியும் இறந்தது. பொன் முட்டைகளும் கிடைக்கவில்லை. அலறினான், நிலத்தில் வீழ்ந்தான், புரண்டான், "ஐயையோ பேராசை பெருநட்டமாகி விட்டதே" என்று கலங்கினான். மூர்ச்சையுற்றுக் கிடந்தான்.

*த. சியாமளா பறுனாந்து,7ம் வட்டாரம், பேசாலை*

## கவிதைப் பூக்கள்



### பிறர் சிநேகம்

வான் மழை பொழியும் நேரம்
வயலெல்லாம் நிரம்பும் நேரம்
ஓலையின் குடிசை ஒன்றில்
ஒழுகிய மழையால் நொந்து
ஓலைப்பாய் நனைந்து போக
ஓரமாய் ஒதுங்கி நின்று
தேம்பியே அழுது நின்ற
வயோதிப மாதை எண்ணி
விரைந்து வந்தவளைத் தூக்கித்
தன்னில்லம் சேர்த்துக் காத்து
காலையில் கிடுகு கொண்டு
கொட்டிலை வேய்ந்து கட்டி
மாதையும் கொடு போய் வைத்து
மகிழ்ந்தனன் அயலான் தானும்
இறைவனும் மகிழ்ந்தான் அந்த
அயலானின் செயலில் தானே.

*நா. எட்வேட் அலோயன்,*
*மன். நானாட்டான் ம.வி, கங்காணிதீவு.*



### கடவுள்

கடவுள் மிகவும் நல்லவராம்
கருணை உள்ளம் கொண்டவராம்
உலகத்தையே படைத்தவராம்
ஆதாம் கையில் கொடுத்தவராம்
எம்மை என்றும் காப்பவராம்
மக்கள் மனதில் இருப்பவராம்
அனாதைகளைக் காப்பவராம்
ஆதரவு எமக்குக் கொடுப்பவராம்
புதுமைகள் பல செய்பவராம்
புத்துயிர் எமக்கு அளிப்பவராம்.

*ஜே. சகாய சுகன்யா, மாதாகோயில்,*
*தலைமன்னார்.*

### வறுமைதான் காரணம்

கருகக் கூடாத எனது இனிய நினைவுகளும்
மறையக் கூடாத புனித ஆற்றல்களும்
விடியக் கூடாத இருளாகவே இருக்கின்றன!

உற்றாரும் உறவினரும் என்னை விட்டொதுங்கவும்
பெற்றோரும் பெரிய சுமையாக நினைக்கவும்
நான் செத்தாலும் எனது மனம் சாகாதிருக்கவும்
கற்று விட்டேன் அழியாத அனுபவத்தை!
வறுமைதான் காரணம்!

*ப. கமலகுமாரி, முள்ளிக்குளம், பாலம்பிட்டி.*

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார் — அங்கம்-04

13. அவர்களிருவரும் இத்தாலி நாட்டிலிருந்து வந்திருந்தார்கள். போர்த்துக்கல் மன்னனின் அனுமதியுடன், கோயிம்ரா அருகிலேயே ஒரு மடத்தைத் துவங்கியிருந்தார்கள். "உங்கள் மடம் எங்கிருக்கிறது?" என்றார் அந்தோனியார் ஆச்சரியத்துடன். "வெகு தொலைவில் இல்லை. இங்குதான் அருகே ஒரு காட்டில்" – "எத்தகைய வீட்டில் வசிக்கிறீர்கள்?" – "மரப்பலகை, மண் ஆகியவற்றால் கட்டப்பட்ட ஒரு சிறிய குடிசையில்"

14. "எங்கள் தந்தை புனித பிரான்சிஸ் அசிசியார் ஏழ்மையின் சந்தோசத்தையும் எல்லாவற்றையும் இறைவனின் கைகளில் எதிர்பார்க்கவும் எங்களுக்குக் கற்பித்துள்ளார்". அந்தோனியாரின் மனது உருகியது. தனது மடத்தின் செல்வங்களையும், சுகபோகங்களையும் நினைத்து வருந்தினார். மிகவும் விலையுயர்ந்த துணியால் செய்யப்பட்ட அவரது அங்கி மிகவும் பாரமாகத் தோன்றியது. "ஏன் நான்கூட ஏழ்மை அசிசியாரின் சீடனாக ஆகக்கூடாது?" என்று தனக்குள்ளே எண்ணினார்.



15. சிறிது நாட்களுக்குப் பிறகு ஒருநாள் ஐந்து அசிசி சகோதரர்கள் அந்தோனியாரின் மடத்து வாசலில் வந்து நின்றார்கள். வட ஆபிரிக்காவில் உள்ள மரோக்கா எனும் நகருக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அதில் அவர்கள் வெற்றி பெறாவிடில், ஆண்டவருக்காக வேதசாட்சிகளாய் மரிக்கவும் தயாராய் இருந்தார்கள். இது அந்தோனியாரின் உள்ளத்தில் இருந்த அவரது இளம் வயது இரகசிய ஆசையைத் தூண்டியது.

16. மிக விரைவில் அந்த ஐந்து சகோதரர்களைப்பற்றிய செய்தி வந்தது. அவர்கள் மரோக்கா வாசிகளுக்குக் கிறிஸ்துவ விசுவாசத்தைப் போதிக்க முயன்றார்கள். ஆனால் அந்நாட்டு அரசன் அவர்களைக் கைதுசெய்து, இயேசுக் கிறிஸ்துவை மறுதலிக்க வற்புறுத்தினான். அவர்கள் அவ்வாறு செய்ய மறுக்கவே, வெகுண்ட மன்னன் தனது வாளால் அவர்கள் சிரசுகளைத் துண்டித்தான். (தொடரும்)

## கவிதைத் தூரங்கள்

### கல்வி

நாடி ஓடி வருவதல்ல கல்வி
தேடி நாடிக் கற்பதுவே கல்வி
வகுப்பறையில் கற்பதல்ல கல்வி
வாழ்க்கை முழுதும் கற்பதுவே கல்வி

### அன்பு

இறை வடிவானது அன்பு
குறைகள் மறப்பது அன்பு
நிறைகள் காண்பது அன்பு
நீடித்து நிற்பது அன்பு

### விடு

உழைப்பதைக் கூட்டிவிடு
ஊக்கத்தை பெருக்கிவிடு
தீயவற்றைத் துரத்திவிடு
இலட்சியத்தை வகுத்து விடு

### வேண்டும்

ஒற்றுமை ஓங்க வேண்டும்
வேற்றுமை ஒழிய வேண்டும்
சத்தியம் நிலைக்க வேண்டும்
சமாதானம் தளைக்க வேண்டும்

### எடு

நல்லவற்றைத் தேர்ந்து எடு
முயற்சியினால் வென்று எடு
சலிப்பானதைப் பிரித்து எடு
இரக்கத்தை வென்று எடு

### நிறுத்து

அவதூறு உரைப்பதை நிறுத்து
பழிவாங்கும் எண்ணத்தை நிறுத்து
பேராசைப் போக்கை நிறுத்து
ஊர் சுற்றித் திரிவதை நிறுத்து

*ம. சர்மலிற்றா, மன். ஆண்டான் குளம், அடம்பன்.*

## கொஞ்சமாச் சிரிங்க...!



பேரன்: தாத்தா, வாத்தியார் வாறார். சீக்கிரம் போய் மறைந்து கொள்ளுங்க.
தாத்தா: ஏண்டா....
பேரன்: போன கிழமை நீங்க இறந்ததாக நான் லீவு போட்டன் தாத்தா.

********

பையன்: ஆச்சி, நீங்க சொன்னீங்களே ஐந்தில் வளையாதது ஐம்பதிலயும் வளையாது எண்டு.
ஆச்சி: ஓண்டா உண்மைதான்.
பையன்: அப்ப நீங்க ஐந்தில வளையாம ஐம்பதில வளைஞ்சிற்றிங்களே.

*ஆ. அகிலா, வஞ்சியன்குளம், வங்காலை.*

குற்றவாளி: என் மனைவியைப் புரிஞ்சுக்கவே முடியலை யுவர் ஆனர்!
நீதிபதி: அதுக்கும் நீங்க இரண்டாவது கல்யாணம் செஞ்சுகிட்டதுக்கும் என்ன சம்பந்தம்?
குற்றவாளி: ஒரு பொண்ணோட மனசு இன்னொரு பொண்ணுக்குத்தான் தெரியும்னு சொன்னாங்க!

********

நண்பன்: உங்க கணவரைத்தான் விவாகரத்து பண்ணிட்டீங்களே, இன்னும் ஏன் அவர் உங்க கூடவே இருக்கார்?
மனைவி: ஒரு கட்சி கவிழ்ந்து மாற்றக் கட்சி வர்ற வரைக்கும் பழைய அமைச்சர்கள் இருக்கிறதில்லையா.... அந்த மாதிரித்தான்!

********

நண்பன்1: எதுக்காக நீயும் உன் சம்சாரமும் தினமும் சண்டை போடுறீங்க...?
நண்பன்2: அதைத்தான் நானும் கேட்கிறேன். சொல்லமாட்டேங்கிறா. அதனாலேதான் சண்டையே!.

### டிக்கற் வாங்காததற்காகக் கொலை!

ரயில் வண்டியில் டிக்கட் வாங்காமல் ஒருவன் பயணம் செய்துகொண்டிருந்தான். அந்தப் பெட்டியில் ஏறிய டிக்கட் பரிசோதகர் அவனிடம் 'டிக்கட்' என்று கேட்டார்.
சட்டைப் பைகளில் டிக்கட்டைத் தேடுவதுபோல நடித்தான் அவன். சிறிது நேரத்திற்குப் பிறகு "நான் டிக்கட் வாங்கினேன்' எங்கேயோ தொலைந்து விட்டது" என்றான். கோபம் கொண்ட பரிசோதகர், 'என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்"? என்று கத்திக்கொண்டே அவன் வைத்திருந்த பெரிய பெட்டியைத் தூக்கி வெளியே எறிந்தார்
"நான் டிக்கட் வாங்கவில்லை என்பதற்காகப் பெட்டிக்குள் இருந்த என் மகனை நீங்கள் கொலை செய்யலாமா?" ஏன்று அலறினான் அவன்.

**************

ஒருவர்: ஏம்பா இப்படி வீடு வீடாக ஏறிப் பிச்சை கேட்க உனக்கு வெட்கமா இல்லையா?
பிச்சைக்காரன்: என்ன செய்வது, என் வீடு தேடி வந்து பிச்சை போடணுங்கற தர்ம சிந்தை ஜன[illegible]ளுக்கு இல்லையே.

******

### குழப்பம் யாருக்கு?



நாயை இழுத்துக்கொண்டு மகன் வீட்டுக்குள் நுழைந்தான். தந்தை அவனைப் பார்த்து "இந்தக் கழுதையோடு எங்கே சுத்திட்டு வாறா" என்று கேட்டார். "அப்பா! நல்லாப் பாருங்க. இது கழுதை இல்ல நாய்" என்றான் அவன்.
"நான் உன்னோடு எதுவும் பேசவில்லை இந்த நாயிடம்தான் பேசினேன்" என்றார் அவர்.

### நான் வழக்கறிஞர் அல்ல




வழக்கறிஞர்: (நீதி மன்றத்தில்) அந்தக் கொள்ளை எப்பொழுது நடந்தது?
சாட்சி : நான் சிந்தித்துச் சொல்கிறேன்.
வழக்கறிஞர்: உனக்கு என்ன தெரியும் என்பதை இந்த நீதிமன்றத்திற்கு சொல். நீ என்ன சிந்திக்கிறாய் என்பது இங்கே தேவையில்லை.
சாட்சி : நான் சிந்தித்துப் பேசுவது உங்களுக்கு பிடிக்கவில்லை -என்றால் என்னை வெளியே செல்ல அனுமதியுங்கள். சிந்திக்காமல் இங்கே எதையும் பேச நான் உங்களைப் போல வழக்கறிஞர் இல்லை.

நற்கருணை ஆண்டு சிறப்புக் கட்டுரை

# நற்கருணைச் சமூகங்களாக மாறுவோம்

அருட்பணியாளர்
செ. அன்புராசா, அ.ம.தி,
வவுனியா



### முன்னுரை:

திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இவ்வாண்டை நற்கருணை ஆண்டாக பிரகடனம் செய்திருக்கிறார். கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமாகத் திகழ்வது நற்கருணை என 2ம் வத்திக்கான் சங்க ஏடும் மொழிந்திருக்கிறது (திருச்சபை இல 11).

பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைப் பேழை இறைவனின் பிரசன்னத்தை வெளிப்படுத்தி நின்றது (எண்ணாகமம் 10, யோசுவா 6). எப்போதெல்லாம் உடன்படிக்கைப் பேழை இஸ்ரவேல் மக்களோடு இருந்ததோ அப்போதெல்லாம் இஸ்ரவேலர் வெற்றியடைந்தனர் (எண் 14/44).

புதிய ஏற்பாட்டில் "நானே விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு" (யோவா 6/58) என்ற இயேசுவின் வார்த்தையானது நற்கருணைப் பிரசன்னத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. நற்கருணைப் பிரசன்னமானது *கடவுள் நம்மோடு இருக்கிறார்* என்பதைக் காட்டுகிறது. "இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்" (மத் 28/20) என்ற இயேசுவின் வார்த்தைகள் நற்கருணைப் பிரசன்னத்தின் ஊடாக கடவுள் நம்மோடு தங்கியிருக்கிறார் என்பதைப் பார்த்து தொட்டு சுவைத்து அனுபவிக்கக்கூடிய விதமாய் இருப்பதை அவதானிக்கலாம்.

### உணவின் அவசியம்

உயிர் வாழ்தற்கு உணவு தேவையானது, அவசியமானது. ஏன் இன்றியமையாதது என்றும் சொல்லலாம். ஏனெனில் ஓரிரு நாட்கள் உணவில்லாமல் வாழலாம். அதன் பின்னரும் உணவு இல்லையெனில் உடல் தளர்ந்து படிப்படியாக உறுப்புகள் இறக்க ஆரம்பிக்கிறது. எனவே உடல் ஊட்டம் பெற - உயிர் வாழ - உணவு அத்தியவசியமானது. அதனால்தான் *பசி வரப் பத்தும் பறந்துவிடும்* என்றார்கள். காரணம் பசி ஏற்பட்டதும் புசித்த பின்புதான் பொதுவாக எந்த வேலையையும் தொடர்கிறோம் அல்லது செய்ய ஆரம்பிக்கிறோம். இந்த உணவிற்காகத்தானே மக்கள் இன்று நாளும் பொழுதும் உழைக்கிறார்கள், சேமிக்கிறார்கள். படாத பாடுகளையெல்லாம் அன்றாடம் படுகிறார்கள்...!

### வறுமையின் கொடுமை

ஔவை "கொடிது கொடிது வறுமை கொடிது" என்கிறார். மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு என ஏறுவரிசையில் வரிசைப்படுத்தப்படுகிறது. இவற்றுள் உணவு முதன்மையானது என்பதையும் மிக மிக அடிப்படையான தேவை என்பதையும் நாம் அறிவோம். வறுமையால் முதலில் தோன்றுவது பட்டினியாகும். இது மோசமானது, கொடுமையானது. இன்றும் உலகின் பல பாகங்களில் பட்டினியால் பலர் மடிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது உணவின் அடிப்படைத் தேவை புரிகிறது.

எனவேதான் "தனியொருவனுக்கு உணவில்லை என்றால் இவ் ஜெகத்தினையே அழித்திடுவோம்" என்று புரட்சி செய்தான் மகாகவி பாரதி. இதே நோக்கிலேதான் "ஏழையின் பசிக்கு ஒருவேளை சோறு போடாத சமயம் எப்படி அவனுக்கு சொர்க்கத்தைக் காட்ட முடியும்?" என்று சமயங்களின் நாடிகளைப் பிடித்துப் பார்த்தார் சுவாமி விவேகானந்தர்.

ஏழை ஒருவன் "இறைவா நீ என்னைப் பணக்காரனாகப் படைக்கவில்லை. பரவாயில்லை. பைத்தியக்காரனாக மாற்று. ஏனென்றால் சிரித்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன" என்று தனது வறுமையின் கொடுமையால் இறைவனை நோக்கி கெஞ்சி மன்றாடுகின்றான்.

"போதிய உடையோ அன்றாட உணவோ தேவையானது ஒன்றையும் தேவையிலுள்ள உன் சகோதரனுக்குக் கொடுக்காமல், எப்படி 'நலமே போய் வாருங்கள் குளிர் காய்ந்து கொள்ளுங்கள். பசியாற்றிக் கொள்ளுங்கள்' என்று கூறமுடியும்?" என கிறிஸ்தவர்களின் அக்கறையை, கரிசனையைப் பற்றி கேள்வி எழுப்புகிறார் புனித யாகப்பர் (2:15)

ஒரு தடவை கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டிஸ் என்பவர் தன் சீடர்களிடம், "மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?" என்று கேட்டார். சீடர்கள். "மனிதன் சிந்திக்கிறான் சிரிக்கிறான்... மிருகங்கள் சிந்திப்பதில்லை சிரிப்பதில்லை..." என்று பதிலளித்தார்கள். சோக்கிரட்டிஸ், "மனிதர் ஒவ்வொருவரும் ஒருவர் ஒருவர்மீது அக்கறை கொண்டு வாழவில்லை என்றால் அவனும் தின்று கொழுத்து வளர்ந்த பன்றிதான்" என்றார்.

அன்றாட உணவு எமக்கு அவசியமானது. அதற்காக இறைத்தந்தையை மன்றாடும்படியாக இயேசு கற்பித்த இறைவேண்டலிலும் கற்றுக் கொடுப்பதை நற்செய்திகளில் நோக்கலாம் (மத் 6/11, லூக் 11/3)

### உறவை வளர்க்கும் உணவு

உணவு உடலுக்கு ஊட்டத்தையும் சக்தியையும் கொடுக்கிறது. உணவில்லாமல் உயிர்வாழ முடியாது. இந்த உணவிற்காகவே மக்கள் ஓடி ஓடி உழைக்கிறார்கள். எனினும் உணவு அளிப்பது, விருந்து கொடுப்பது உறவின் அடையாளமாகவும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவும் இருக்கிறது. உதாரணமாக நண்பன் ஒருவனை உணவிற்கு அழைக்கிறோம் என்றால் அவன் சாப்பிடாமல் பட்டினி கிடக்கிறான் என்றல்ல. மாறாக அவனுடனுள்ள உறவை மேலும் வளர்ப்பதற்காகவே ஆகும். இவ்வாறு உணவளித்தல், விருந்து கொடுத்தல் உறவை வளர்க்கவும், நட்பை உருவாக்கவும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தவும், மகிழ்ச்சியைப் பகிரவும் எனப் பல அருமையான இலக்குகளைக் கொண்டிருக்கின்றன. இவ்வாறுதான் ஆபிரகாம் மூன்று இறை மனிதர்களுக்கு விருந்தளித்து அதனால் ஏற்பட்ட உறவின் நெருக்கத்தினால் தனது மக்களுக்காகப் பரிந்துபேசுவதைத் தொடக்க நூலில் (18/16-33) பார்க்கிறோம்.

இதேபோல்தான் மீட்பு வரலாற்றில், இஸ்ரவேல் இனம் எதிரிகளால் அழிக்கப்படாதவாறு எஸ்தர் என்ற பெண்மணியினால் காப்பாற்றப்படுகிறது. பாரசீகப் பேரரசன் அகஸ்வேருக்கு எஸ்தர் விருந்தளித்து அவன் தயவைப் பெற்றுக்கொண்டதினால் அவனுடன் பரிந்து பேசி பேராபத்திலிருந்து தன் மக்களை விடுவிக்கிறான். இதற்கு எஸ்தர் என்ற நூல் சான்று பகர்கிறது. லூக் 15இல் இளைய மகன் திரும்பி வந்தபோது தந்தை ஏற்பாடு செய்த விருந்து இழந்த மகனைப் பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதோடு மகனுக்கான உரிமைப்பேற்றை மீண்டும் வழங்கி மகனுக்குரிய மதிப்பையளிக்கும் கொண்டாட்டமாகவும் அமைகின்றது.

### வாழ்வளிக்கும் வார்த்தை உணவு

உணவு மனிதனுக்கு அவசியமானது. அத்தியாவசியமானது. ஆயினும் உண்பதால் மட்டும் மனிதன் மனிதனாவதில்லை. ஒரு முறை மூன்று நண்பர்கள் சேர்ந்து தங்களது இன்னுமொரு நண்பனுக்குச் செய்த விளையாட்டைப் பாருங்கள். நல்ல சுகத்துடன் வேலைக்குப் புறப்பட்டவனை அம்மூவரில் ஒருவன் கண்டு "என்னடா ஒரு மாதிரியா இருக்கிறா? என்ன முகம் வீங்கி இருக்கு! மனநில சரியில்லையோ?...." எனக் கூறிவிட்டுப் போய்விட்டான். அடுத்தவன் வழியில் சந்தித்து, "நல்லாத்தானே இருந்தா?... அதுக்கிடையில இப்படிக் கேவலமா போயிற்றா!.. ஏதும் வருத்தமா?" என்றான். மற்றவன் அலுவலகத்தில் சந்தித்து, "நீ எண்டு மதிக்கவே இல்ல. நம்பவே முடியல்ல. ஏதோ உனக்கு சரியில்ல". என்றான். எண்ணி ஆறு நாளில் நோயாளியாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். மருத்துவ சோதனையில் அவனது உடல்நிலை நலமாகவும், நண்பர்கள் கூறியவையால் உளநிலை பாதிக்கப்பட்டும் இருப்பது தெரியவந்தது. நல்ல ஊக்கம் ஊட்டுகின்ற, உற்சாகம் தருகின்ற, மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற, நம்பிக்கையை உருவாக்குகின்ற ஆறுதலைக் கொடுக்கின்ற வார்த்தைகளால் மனிதர்கள் மனிதர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றால் அதில் எவ்வளவோ வாழ்க்கைத் தத்துவம் இருக்கிறது. யேசுவும் "மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுள் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர்வாழுகிறான்..." (மத் 4/4) என்கிறார். இதனால்தான் இயேசு எங்கெல்லாம் போதித்தாரோ அங்கெல்லாம் பெரும் திரளான மக்கள் கூடுவதை நற்செய்தி ஏடுகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

எப்படி உணவு உடல் இயக்கத்திற்கான ஊட்டத்தை அளிக்கிறதோ அப்படியே உள வளர்ச்சிக்கான, வாழ்வின் உயர்ச்சிக்கான ஆற்றலை நல்ல, உற்சாகமான, ஆறுதலான, நம்பிக்கையான, வாழ்வளிக்கும் வார்த்தைகள் வழங்குகின்றன.

### நற்கருணை உணவு

"வயது முதிர்ந்த காலத்திலும் என் வாழ்வுக்கு சக்தியையும் எம் பணிக்கு ஆற்றலையும் அளிப்பது நற்கருணை சந்திப்புத்தான்" என்று ஒரு தடவை குறிப்பிட்டார் அன்னை திரேசா. இன்னுமொரு முறை அன்னையின் பணிகளைப் பற்றிக் கேள்வியுற்ற பெருந்திரளான செய்தியாளர்களும் ஊடகவியலாளர்களும் அவரைக் கல்கத்தாவில் அவரது துறவற தலைமையக இல்லத்தில் சந்தித்தனர். அவ்வேளையில் அவர்கள் "அன்னையே உலகின் பல பாகங்களில் 124 நாடுகளுக்கு மேலாக உங்கள் பணி பரந்து விரிந்திருக்கிறது. இப்பணிகளுக்கெல்லாம் உங்களுக்கு சக்தியையும் வல்லமையையும் நம்பிக்கையையும் தருபவர்கள் யார்?" என்று கேட்டார்கள். அன்னை, "அன்பர்களே வாருங்கள் எனக்கும் எங்கள் பணிக்கும் ஆற்றலையும் சக்தியையும் தருகின்ற ஒருவர் உள்ளே இருக்கிறார். அவரை வந்து பாருங்கள். சந்தியுங்கள்" என்று அவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு போய் தம் துறவற இல்லத்தின் சிற்றாலயத்தில் எழுந்தேற்றம் செய்து வைக்கப்பட்டிருந்த நற்கருணையைக் காட்டினார்களாம்.

இந்த நற்கருணை அதீதமான சக்தியை ஆற்றலை மனிதர்களாகிய நம்மிதயங்களில் பிறப்பித்து செயல் வடிவத்திற்கும் இட்டுச்செல்கிறது. அதனால்த்தான் நட்புறவுடன் அப்பம் பிட்கையில் - பகிர்கையில் அப்பத்தில் பிரசன்னமாயிருக்கும் ஆண்டவரைக் கண்டுகொள்கிறோம். இயேசுவின் உயிர்ப்பின்பின் யோவான் 21ஆம் அதிகாரத்தில் குறிப்பிடுவதுபோல் கடற்கரையில் ஒரு நற்கருணை விருந்து இயேசுவால் ஆயத்தம் செய்யப்படுகிறது. அவரை ஆண்டவர்தாம் என்று அவர்கள் அறிந்துகொண்டதால் அவரை யாரென்று எவரும் கேட்கத்துணியவில்லை.

இதே போன்றதே லூக்கா 24ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் நிகழ்வுமாகும். இரண்டு சீடர்கள் ஜெருசலேமிலிருந்து 11 கிலோமீற்றர் தொலைவிலுள்ள எம்மாவு என்ற ஊருக்கு போய்க்கொண்டிருந்தபோது, இயேசுவும் நெருங்கி வந்து அவர்களுடன் நடந்து சென்றார். ஆனால் சீடர்கள் அவரைக் கண்டுகொள்ளவில்லை. ஆயினும் மாலை வேளை மூவரும் பந்தியமர்கையில் அப்பத்தைப் பிட்டடுக் கொடுத்தபோது சீடர்கள் இருவரும் இயேசுவை அடையாளம் கண்டுகொள்கின்றனர்.

இந்நற்கருணைப் பகிர்வைத் தாம் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டதாக தூய பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி 11/23) ஆதித்திருச்சபையும் இந்நற்கருணை விருந்தினையே தொடக்கத்திலிருந்து கொண்டாடி வருகிறது. இந்நற்கருணை அன்று திருப்பலிக் கொண்டாட்ட வடிவம் பெற்று எத்தகைய சக்தியைக் கொடுத்ததோ அதே வல்லமையை இன்றும் தந்து மனிதர்களை வாழ்வித்துக்கொண்டிருக்கிறது.

எனவேதான் நற்கருணை சமூகங்களாக நமது பங்குத் திருச்சபைகள் மாறவேண்டும். அதாவது இயேசுவை மையப்படுத்தியதாக எம் வாழ்வும் வழிபாடும் அமையவேண்டும். உதாரணமாக கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்காமல் புனிதருக்கும் அவர் பவனி வரும் கூட்டுக்கும் தேருக்கும் முக்கிய இடம்கொடுக்கும் நிலை மாறவேண்டும். எந்த பக்தி முயற்சியும் முறையானதாக பயனை விளைவிப்பதாக கிறிஸ்துவை ஒருவகையில் பிரசன்னப்படுத்த வேண்டும். ஆகவே, இவ் நற்கருணை ஆண்டில் குறிப்பாக நமது பங்குத்திருச்சபைகள் நற்கருணை சமூகங்களாக மாறட்டும், வாழட்டும்.

---

# தெய்வச் சிலையாக மறுத்த கல்

## சிந்தனைக் கதை



அது ஒரு புதிய கிராமம் அகதிகளாக இடம் பெயர்ந்து மீளக் குடியேறிய கிராமம். கோவில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாதல்லவா. மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கோவிலைக் கட்டத் தீர்மானித்தார்கள். கோவில் வேலை தொடங்கியதுமே ஊர்ப் பெரியவர்கள் சிலர் அவ்வூரிலே இருந்த சிற்பி ஒருவரிடம் சென்று தெய்வத்தின் சிலை ஒன்று செய்து தரும்படி கேட்டார்கள். சிற்பியும் சம்மதித்து சிலை செய்வதற்குப் பொருத்தமான கல்லொன்றைத் தேடிச் சென்றார். கிராமத்தைவிட்டு வெகுதூரம் செல்ல வேண்டிய தேவை ஏற்படவில்லை. பக்கத்திலேயே கற்களைக் கண்டார். பொருத்தமான கல்லொன்றிடம் சென்று பேசிப் பார்த்தார். "கல்லே! நீ இந்த வெளியிலே கிடந்து மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து கொண்டிருக்கிறாய். நான் உன்னைக் கடவுளின் சிலையாக வடித்து விடுகின்றேன். உனக்கு ஆலயத்திலே இடம் கிடைத்து விடும். மக்களெல்லாம் உன்னைக் கும்பிடுவார்கள். என்ன சொல்கின்றாய்?" என்று கேட்டார்.

அதற்குக் கல், "என்னை சிலையாக்குவதற்கு என்ன செய்வீர்கள்?" என்று கேட்டது. சிற்பி, "இந்தச் சிற்றுளியாலும், சுத்தியலாலும் தட்டித்தட்டி உன்னில் உள்ள வேண்டாத பகுதிகளை அகற்றி விடுவேன். நீ கடவுளுரு எடுத்து விடுவாய். மனிதனில் உள்ள தீய குணங்களை அகற்றிவிட்டால் அவன் தெய்வமாகி விடுவதில்லையா? அதுபோல" "ஐயா, உங்கள் சுத்தியலாலும், உளியாலும் நான் வெட்டுப்படவும் வேண்டாம், அடி வாங்கவும் வேண்டாம். எந்தத் துன்பமுமே எனக்கு வேண்டாம். நான் கடவுளாகவும் வேண்டாம். நான் கல்லாகவே இருந்துவிட்டுப் போகின்றேன்." என்றது. அதற்குச் சிற்பி, "கல்லே கொஞ்சம் யோசித்துப்பார்! சின்னஞ்சிறிய வேதனைகள் சிறிது காலத்திற்குத் தாங்கிக் கொண்டாயானால் உனக்கு பாலாபிசேகமும் கும்பாபிஷேகமும் தீப ஆராதனையுமாய் மகிழ்ந்திருப்பாய்" என்றார்.

கல்லு, "ஐயா நீங்கள் சொன்ன எந்த அபிஷேகங்களும் எனக்கு வேண்டாம். நான் உங்களிடம் கொத்தும் அடியும் வாங்கவும் வேண்டாம். ஆளை விடுங்கள்" என்றது. அந்தக் கல்லோடு பேசிப் பயனில்லை என்று அறிந்த சிற்பி வேறு ஒரு கல்லைத் தேடிச் செல்ல எழுந்தார். அப்போது முன் பேசிய கல்லுக்குச் சற்றுத் தொலைவில் இருந்த மற்றொரு கல், "ஐயா! பெரியவரே, நீங்கள் அந்தக் கல்லுடன் பேசிக்கொண்டிருந்ததை நான் இவ்வளவு நேரமும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். எனக்கு அந்தப் பாக்கியத்தைத் தாருங்கள். வாழ்வில் உயர்வதற்கு நான் சின்னச் சின்னத் துயரங்களைத் தாங்கிக்கொள்வேன்." என்றது.

சிற்பியும் அக்கல்லை வீட்டுக்குச் சுமந்து சென்று சிலையாக வடித்தார். கோவில் வேலையும் நிறைவுற்றது. கோவில் சிலையைப் பிரதிட்சை செய்தார்கள். அன்று ஊர் மக்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து திருவிழாக் கோலம் கொண்டார்கள். பக்தர்கள் கோயிலைச் சூழ்ந்து நின்றார்கள். பூசை நடைபெற்றது. தேங்காய் உடைப்பதற்குத்தான் கல்லைக் காணவில்லை. பூசாரி மக்களிடம் சொன்னார். இளைஞர் சிலர் கல்லொன்றைத் தேடி ஓடினார்கள். அவசர அவசரமாக ஒரு கல்லைத் தூக்கிக் கொண்டு ஓடோடி வந்தார்கள். அந்தச் சிலைக்கு முன்னால் சில அடி தூரத்தில் வைத்தார்கள். அன்று மட்டும் ஆயிரத்துக்கு அதிகமான தேங்காய்கள் உடைக்கப்பட்டன. சிலையாவதற்குச் சிறு துன்பங்களைச் சகித்துக் கொள்ள மறுத்த கல்லுதான் அது! முதல் நாளிலேயே ஆயிரத்துக்குமேல் அடிபட்டுவிட்டது

*(நன்றி - சிறீராமின் வெற்றிப்பாதை, இல. ச. ஒலிபரப்பு) தொகுப்பு - ச. மாட்டீன் டயஸ், பேசாலை*

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### நேர்வழிப் பாதை

நண்பனே
ஜொலியாக வாழ்வதில் தப்பில்லை
பின்நாளில் வலியாகாமல் பார்த்துக்கொள்
அழகும் பணமும் சந்தோஷமா?
இளமைதான் என்ன நிரந்தரமா?
இறந்திட்ட பின்பு பிறந்திட முடியாது
காலம் கடந்திட்ட பின்பு
அதற்குள் மீண்டும் நுளைந்திட முடியாது
அன்பு மட்டுமே அழியாதது
உன் காலம் முடிந்தபின்னும்
அதுதான் நிலையானது.
பிறந்தோம் இறந்தோம் என்றில்லாமல்
நல்மதிப்பை நிலைத்துவிடச் செய்.
ஒரு கணம் உன்னைப்பற்றி யோசி
நல்லதையே மனதில் நினைத்துக்கொள்
மற்றவையெல்லாம் ஈசி
உதயம் எல்லோருக்கும் உண்டு
இதயம் முக்கியமான ஒன்று
அதை அடகுவைத்துவிடாதே!
நேரம் மட்டுமே உனக்குச் சொந்தம்
அதில் நேர்மைதான் நேர்வழிபாதை
துணிந்து செல்... தொடர்ந்து செல்!
இலட்சியத்தில் இடறமாட்டாய்!

*அ. ராசேந்திரன், கீளியன்குடியிருப்பு.*

### விடுதலை கொடு

இயல்பிழந்த வாழ்க்கையிலே
இறுகிப்போன முகங்களை
கண்கூடாகக் கண்டும்
அவர்களைத் தேற்றிட மறுத்து
அவற்றைப்போல் நடிக்கும் படம் பார்க்க
தியட்டருக்கு அல்லவா போகின்றாய்?
கருகிப்போன உணர்வோடே
கலையாத கனவுகளை
கண்ணீரோடு கூறுவோரைக்
கேலி செய்துவிட்டு எங்கே போகின்றாய்?
கடவுளைத் தேட வந்த இடத்தில்
காதலியை - காதலனைத் தேடிவிட்டு
காணாத இடத்து சோகமாய் செல்கிறாயே?
நண்பா, தீய வழியில் செல்லும்
உன் பாதங்களைச் சற்றே நிறுத்து!
உன்னை நீ தேயாத பௌர்ணமியாக்கு!
பல்லாயிரம் விழிகள் உன்னை
படம் பிடிக்கக் காத்திருக்கின்றன!
இறைவனிடம் வா!
உன் விசுவாசம் ஆய்வு கூடமாக வேண்டும்
உனக்குள் உறங்கும் தீமைக்கு
விடைகொடு!

*மெரினா சகாயம்*
*திருக்குடும்ப விடுதிச்சாலை, மன்னார்.*

---

## தொடர் கட்டுரை - அங்கம் 22

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

பகுதி 1 வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்



### 10. வியாகுல பிரசங்கத்தில் நாட்டார் மரபுகள்

நாட்டார் வழக்கியல் என்பது நாட்டுப்புற மக்களின் அல்லது அதிகம் படிப்பறிவில்லாத மக்களின் அல்லது நகர்ப்புற நாகரிகத்தினால் தாக்கம் பெறாத மக்களின் வாழ்வின் அதிக கூறுகளை அல்லது விடயங்களை உள்ளடக்கியவையாகும். நாட்டார் வழக்கியல் நாட்டுப்புற மக்களின் வாழ்வின் அதிக விடயங்களை உள்ளடக்கிய காரணத்தினால் இது ஒரு பரந்துபட்ட விடயப்பரப்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இம்மக்களின் வாழ்வுடன் தொடர்புடையதாகப் படைக்கப்பட்ட அல்லது இம்மக்களால் ஆக்கப்பட்ட இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்கள் எனப்படுகின்றன.

எந்தவொரு மக்கள் குழுமத்தினால் அல்லது இனத்தினால் பேணப்படுகின்ற இலக்கியத்தின் வளர்ச்சி வரலாற்றில், அதில் தோன்றிய ஆரம்ப இலக்கியங்கள் நாட்டார் இலக்கியப் பண்புகளைக் கொண்டே ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆரம்ப காலங்களில் தோன்றியுள்ள இலக்கியங்கள் கர்ண பரம்பரை இலக்கியங்களாக அல்லது வாய்மொழிப் பாரம்பரிய இலக்கியங்களாகவே வழக்கில் இருந்துள்ளன. இவ்வாறு கர்ண பரம்பரையாக எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்கப்பட்டு வந்த இலக்கியங்கள் காலப்போக்கில் பல மாற்றங்களுக்குள்ளாகும் சாத்தியத் தன்மை அதிகமாகும். காலப்போக்கில் நாட்டார் வழக்கியலில் இருந்த விடயங்கள் ஆவண வடிவம் பெற்ற நிலையில் இவை மாற்றங்களுக்கு உள்ளாகும் நிலை குறைவு அல்லது முற்றாக மாற்றம் இடம்பெற முடியாது. ஆவண வடிவம் பெற்ற இலக்கியத்தின் வழியாக அதில் கூறப்படுகின்ற பொதுவான நாட்டார் பண்புகளோடு, குறிப்பிட்ட இலக்கியத்திற்கேயுரிய சிறந்த பண்புகளையும் வாசகர்கள் நேரடி அனுபவமாகப் பெறமுடியும்.

வியாகுல பிரசங்கத்தில் பல நாட்டார் இலக்கியப் பண்புகள் காணப்படுகின்றன. இதனை ஆக்கிய ஆசிரியரே இதை எழுத்து வடிவத்தில் ஆக்கிய காரணத்தினால் இவ்விலக்கியம் மாற்றங்களுக்கு உட்படும் நிலை ஏற்படவில்லை. எனினும் இது அச்சு வடிவம் பெற்றபோது வாசகர்கள் நலன் கருதி சில சொற்களைப் பிரித்து அச்சிட்டதாக அறியப்படுகின்றது.

வியாகுல பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ள விடயப்பொருள் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் காலத்திலுள்ள கிறிஸ்தவ மக்களுக்குப் புதிய விடயமல்ல. ஓரற்ரோறியன் சபைக் குருமாரின் வருகைக்குப் பல வருடங்களுக்கு முன்பே போத்துக்கேய நாட்டு மறைப்பணியாளர்கள் இலங்கையில் உள்ள மக்களுக்குக் கத்தோலிக்க மறையைப் பரப்பி, மறை தொடர்பான விசுவாச உண்மைகளைப் போதனைகள் வழியாகவும், நாடகங்கள் வழியாகவும் கற்பித்தார்கள். மேலும். யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் 1725 ஆம் ஆண்டு தேவ அருள் தேவ புராணம் என்னும் பெயரில் பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களை மொழிபெயர்ப்புச் செய்தார். மேலும் 1728இல் இதே ஆசிரியர் எழுதிய சுவிசேஷ விரித்துரை என்னும் நூல் ஞாயிறு தினங்களிலும் திருவிழா நாட்களிலும் திருப்பலியின்போது வாசிக்கப்படும் நற்செய்தி வாசகங்களுக்குரிய விளக்கமாகும். எனவே வியாகுல பிரசங்கத்தில் காணப்படும் விடயப்பொருள் இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களுக்குப் புதியதொரு விடயமல்ல. ஆனால் இந்த விடயம் அளிக்கப்பட்டுள்ள இலக்கிய வடிவம் முற்றாகப் புதியதாகும்.

புதிய இலக்கிய வடிவத்தில் ஆக்கப்பட்டுள்ள இவ்விலக்கியத்தில் நாட்டார் இலக்கியத்தின் பல பண்புகள் இடம்பெறுகின்றன. தமிழ் சிற்றிலக்கியப் பாரம்பரியத்தில் 96 வகையிலான இலக்கியங்களுண்டு. இவை பிரபந்தங்கள் என அழைக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் ஆக்கப்பட்ட கிறிஸ்தவ இலக்கியங்கள் (யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளின் வருகைக்கு முன்பு போத்துக்கேயர் காலத்தில் ஆக்கப்பட்டவை) ஏதோ ஒரு சிற்றிலக்கிய வடிவத்தை முழுமையாகத் தழுவியே ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆக்கப்பட்ட இலக்கியங்களாக நாடகம், வாசாப்பு, அம்மானை, பள்ளு, ஒப்பாரி இலக்கியங்களைக் குறிப்பிடலாம். ஆனால் வியாகுல பிரசங்கத்தின் ஆசிரியர் முன்பு ஆக்கப்பட்ட இலக்கிய வடிவங்களை அப்படியே முழுமையாக ஏற்று தமது இலக்கியத்தைப் படைக்கவில்லை. மாறாக நாட்டார் இலக்கியத்தின் சில கூறுகளையும், பண்புகளையும் உள்வாங்கித் தமது இலக்கியத்தை ஒரு தனித்துவமான விதமாக, நாட்டார் இலக்கியமாக அமைத்துள்ளார்.

நாட்டார் வழக்கியலில் பாடலும், பாடலின் தன்மைக்கேற்ப ஆடலும் பல நாட்டுப்புற மக்களையும் ஏனையோரையும் கவர்கின்ற முக்கிய கூறுகளாகும். ஆடல் அல்லது அரங்கியல் அல்லது புலக்காட்சி வழியிலான கற்பித்தல் முறை மக்களைக் கவர்கின்ற முறை என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. இக்கற்பித்தல் முறை நாட்டுப்புற மக்களை அதிகம் கவரும் முறையாக விளங்கியது. போர்த்துக்கேய மறைப்பணியாளர் காலத்திலிருந்தே பாசோ முறையிலான காட்சி வழிபாட்டுப் பாங்கு இலங்கையில் வழக்கில் இருந்திருக்கின்றது. (பாசோ பற்றி பிறதொரு இடத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது). மேலும் நாடகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊற்று வழிபாடே என்பது இங்கு கோடிட்டுக் குறிப்பிடப்பட வேண்டியது. மிக நீண்ட காலமாக வியாகுல பிரசங்கத்திற்கும், பாசோவிற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு நிலவியிருக்கின்றது. நாடகப்பாங்கை பிரதிபலிக்கும் பல சொற்களை வியாகுல பிரசங்கத்தின் ஆசிரியர் கையாண்டுள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

நாட்டார் இலக்கியத்தின் மற்றுமோர் பண்பு, கூறிய விடயத்தை மீண்டும் வேறு வகையில் கூறுவதாகும். இது பல்வேறு சொற்பதங்கள் வழியாக, வசன அமைப்புகள் வழியாக, சிந்தனைகள் வழியாக, விபரிப்பு வழியாக வியாகுல பிரசங்கத்தில் இடம்பெறுகின்றது. மனித இனத்தின் மீட்பிற்காக கிறிஸ்து மேற்கொண்ட கொடூரமான பாடுகள் பற்றியும், இதன் விளைவை மனிதர் முழுமையாக உணர்ந்து தம் பாவங்களுக்கான மனம் வருந்துதலை ஏற்படுத்தி, பாவத்திலிருந்தும், அதன் விளைவுகளில் இருந்தும் விடுதலை பெற பல்வேறு வழிவகைகளில் மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார் ஆசிரியர். கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய விபரிப்பை முன்வைத்து, அது பற்றிய சிந்தனைகளை வழங்கி, மனம் வருந்தலுக்கான செபத்தின் வழியாகத் தீர்க்கமான முடிவை முன்வைக்க மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

ஒரு நாட்டார் இலக்கியம் மக்கள் மத்தியில் எவ்வகையான வரவேற்பை பெற்றுள்ளது என்பதை நிர்ணயிக்கும் அளவுகோல் என்ன என நோக்கும்போது மூன்று விடயங்களைக் குறிப்பிடலாம். எந்த எண்ணிக்கையிலான மக்களால் அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது? எந்த அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது? இதன் பயன்பாடு எத்தனை ஆண்டு காலத்திற்கு நிலைக்கின்றது? இவ்வாறு மக்கள் மத்தியில் இது அமோக வரவேற்பை பெற்றுள்ளமைக்கு காரணம் என்ன? இது எந்த மக்களுக்காக ஆக்கப்பட்டதோ அந்த மக்களின் ஆன்மீக, உளவியல் தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது என்பதே இதன் பொருள்.

வியாகுல பிரசங்கத்தின் ஆக்கத்தில் நாட்டார் இலக்கிய வடிவங்களில் ஒன்றாகிய ஒப்பாரி இலக்கியம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் வியாகுல பிரசங்கத்தில் சில பகுதிகள் ஒப்பாரிப் பாடல்களின் வடிவத்தை முழுமையாக அடியொற்றியே எழுதப்பட்டு உள்ளது. கிறிஸ்து சிலுவை சுமந்து செல்லும் கொடூரமான காட்சி யோவான் வழியாக இயேசுவின் தாய் மரியாவிடம் அறிவிக்கப்பட்டபோது உடனடியாக கிறிஸ்துவைத் தேடி மரியா புறப்படுகின்றாள். செல்லும் வழியெங்கும் காண்போரிடம் தன் மகன் பற்றிய செய்தியை எவரேனும் அறிவார்களோவென ஒப்பாரிப்பாடல் வடிவத்திலே விசாரிக்கின்றாள். மற்றுமொரு இடத்தில், அதாவது, கிறிஸ்துவின் திரு உடல் சிலுவையில் இருந்து இறக்கப்பட்டு அவரது தாயார் மடியில் வளர்த்தப்பட்டபோது மரியாள் தனது துக்கப்பிரலாபத்தை ஒப்பாரிப் பாடல் வழியாக எடுத்து உரைக்கின்றாள்.

வியாகுல பிரசங்கத்தில் காணப்படும் நாட்டாரியற் பாங்கு என நோக்கும்போது இதனுடன் இணைந்துள்ள நாட்டார் இசைமரபு முக்கியமானது. வியாகுல பிரசங்கம் மௌனமாகப் படிப்பதற்குரிய இலக்கியமன்று. மாறாக இது துக்க இராகத்தில் உயர்ந்த தொனியில் பாடப்படுவது. ஆனால் இதனுடன் நெருங்கிய முறையில் தொடர்புடைய இசை மரபின் ஏனைய பண்புகளான எளிமை, இயற்கைத் தன்மை என்பனவும் இதிற் காணப்படுகின்றன. நாட்டார் இலக்கியம் எளிமையான நாட்டுப்புற மக்களுக்காக ஆக்கப்பட்டவை. இதனால் இவை இலகுவில் அதிக மக்களால் புரிந்துகொள்ளப்படும் தன்மையுள்ளனவாக இருக்கவேண்டும். இதனால் இதில் சிக்கலான உவமை, ஒப்புவமை, உதாரணங்கள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் இவ்விலக்கியத்தில் இடம்பெறும் சொற்பத்ங்கள் அன்றாடப் பாவனையில் அதிகம் இடம்பெறுகின்றவையாகவும், கொச்சைத் தமிழ் அல்லது பேச்சுத் தமிழைக் கொண்டவையாகவும் ஆக்கப்படுகின்றன. எல்லா நாட்டார் இலக்கியங்களும் பொழுதுபோக்கை இலக்காக்கொண்டு ஆக்கப்படுவதில்லை. மாறாக, சில நாட்டார் இலக்கியங்கள் உயர் இலட்சியங்களை அல்லது வாழ்க்கை மதிப்பீடுகளைக் கற்பிப்பதற்கே ஆக்கப்பட்டவை. வியாகுல பிரசங்கம் மக்கள் மத்தியில் மனமாற்றத்தையும், பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையையும் அளிப்பதற்கு ஆக்கப்பட்ட இலக்கியமாகும்.

(தொடரும்)


---

மன்னா

## சிறுகதை

# உழைப்பு

ம. கொன்சி,
ஆட்காட்டிவெளி



டாங்.... டாங் .... டாங்....

விடிகாலை ஆறு மணியைக்குறிக்கும் மாதா கோயிலின் மணியோசையைக் கேட்டு திடுக்குற்று விழித்துக் கொண்டான் பீற்றர். அருகே உறங்கிக் கொண்டிருக்கும் மனைவி அர்ச்சனாவையும் அவனது நான்கு சிறு குழந்தைகளையும் ஒரு வித பாசமும் ஏக்கமும் கலந்து பார்த்தான்.

"பாவம் பிள்ளைகள் மூன்று வேளையும் ஒழுங்காகச் சாப்பிட்டு எத்தனை நாட்களாகிவிட்டன" தனக்குள் முணுமுணுத்துக்கொண்டான். குழந்தைகள் ஒருவரை ஒருவர் அணைத்தவாறே உறங்கிக் கொண்டிருந்தனர். அதிகாலைப் பனியில் வெடவெடத்த உடம்மைப் சோம்பல் முறித்தவாறே எழுந்தான் பீற்றர்.

"இந்தக்குளிருக்கு ஒரு தேத்தண்ணி குடிச்சா இதமாக இருக்கும்" தனக்குள் எண்ணிக்கொண்டு மனைவியை நோக்கினான். கவலைகளை மறந்து அமைதியாக உறங்கிக்கொண்டிருந்த அர்ச்சனாவை எழுப்ப மனமின்றி, தானே அடுப்பை மூட்டி புகைந்த அடுப்பை கண்ணெரிய ஊதினான். என்னப்பா எழும்பிட்டீங்களா? என்னை எழுப்பியிருந்தா நான் தேத்தண்ணி வைச்சுத் தரமாட்டனா" கேட்டவாறே வந்த அர்ச்சனா ஒருவாறு அடுப்பினை ஊதிப்பற்றவைத்தாள். தேநீரை ஊற்றிக் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்தாள்.

பீற்றரின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது வசதியாக இருந்ததுதான். இடப்பெயர்வின்பின் அவர்கள் வன்னியில் வசிக்கின்றார்கள் விறகினை அன்றாடம் சைக்கிளில் கட்டி எடுத்துச் சென்று விற்றுக்கொண்டுவரும் பீற்றரின் சொற்ப வருமானத்திலேயே அந்த ஆறு ஜீவன்களும் தமது வாழ்க்கைப் பயணத்தை நடத்திக் கொண்டிருந்தன. தேநீரைக் குடித்தவாறே பீற்றர் மனைவியிடம் "இண்டைக்கு வேளைக்கு விறகுக்குப் போகவேணும். அசோகன் அண்ணையும் நேற்று விறகு கேட்டவர். வேளைக்கு வெளிக்கிட்டாத்தான் கொஞ்சம் கூட விறகைக் கொண்டு வரலாம். போன முறையும் மனுஷன் என்ன நல்லாத்திட்டிப்போட்டுது. 'நீ சும்மா ஓலையையும் சருகையும் இஞ்ச கொணந்து போட்டுட்டு சுளையா இருநூறு ரூபா வேண்டிக்கொண்டு போறாய். இது இரண்டு நாளைக்கே போதாமல் இருக்கு. அடுத்த முறை கூடக் கொணந்தாத்தான் உன்னட்ட வேண்டுவன்' என்று அசோகண்ணை பேசிப்போட்டார். அந்தாளைச் சொல்லிக் குற்றமில்லை. அவருக்கு எங்க விளங்கப்போகுது. இதைக் கொண்டு வந்து சேர்க்கிறதுக்கு மனுஷன் படுறபாடு" கூறிமுடித்த பீற்றர் தனது தடி கட்டிய பழைய சைக்கிளை முற்றத்துக்கு உருட்டினான்.

மனைவியிடம் கோடரியையும் வாங்கிக் கொண்டு "நான் போட்டு வாறன். எப்படியும் பத்து மணிக்கிடையில வந்திடுவன். அவ்வளவு நேரம் குழந்தைகள் பசி தாங்காது. பக்கத்து அந்தோனி கடையில பாணையும் வாழைப்பழத்தையும் வேண்டி பிள்ளைகளுக்குக் கொடு. அந்தோனி அண்ணைக்கும் ஆயிரம் ரூபாய்க்குக்கிட்ட குடுக்க வேணும்" கூறிய பீற்றர் தனது சைக்கிளை மிதித்தான். காலை எட்டு மணி கடந்தது. மரங்களை வெட்டிக் கொண்டிருந்த பீற்றருக்கு வியர்வை ஆறாக ஓடியது. வயிறு புகைந்தது.

வெட்டிய விறகைப் பார்த்தான். சிந்தனை தறி கெட்டு ஓடியது. "அரை லோட் விறகுகூட வராதுபோல கிடக்கு. இதைக் கொண்டுபோய் எப்படிச் சமாளிக்கப் போறன். இண்டைக்கும் அசோகண்ணையிட்டத் திட்டு வாங்க வேணும் போலத்தான் கிடக்கு"

தனக்குள் முணுமுணுத்த பீற்றர் சலிப்புடன் பார்வையை சுற்றிவர ஓட விட்டான். மரங்கள் வெட்டப்பட்டு வேர்களே கண்ணுக்கு காட்சியளித்தன. "மூத்தவளும் வசதிக்கட்டணம் கட்ட நாளைக்குத்தான் கடைசிநாள் எண்டு சொன்னவள். இதைக் கொண்டுபோய்க் கொடுத்தாத்தான் அதையும் கொடுக்கோனும்."

தனக்குள் முணுமுணுத்த அவன் எதேச்சையாக சுற்றிவந்து முட்கம்பி அடைக்கப்பட்ட அந்தக்காணியைப் பார்த்தான். வழமையாக விறகு வெட்ட வரும்போது அந்தக்காணியை பலமுறை அவன் பார்த்துக்கொண்டே போயிருக்கிறான். ஆனால் எவருமே அதற்குள் கால் வைத்தது கிடையாது.

'மிதிவெடிகள் கவனம்' என்ற மண்டை ஓட்டுக்குறியுடன் கூடிய பலகை, அதற்குள் மனிதர்கள் செல்வதைத்தடுப்பதுபோல் வெளியே காணப்பட்டது. முட்கம்பி வேலிக்கு அருகே நெருங்கிச்சென்று பார்த்தான். வேலிக்கு உட்புறமாக பெரிய பட்டமரம் ஒன்று குப்புறக் கிடந்தது.

"மிதி வெடியைத் தாக்கேக்க நடுவிலதானே கொண்டு போய்த் தாப்பாங்கள். மரம் கரையில தானே கிடக்கு. வேற மரங்களும் இல்லை உள்ளபோய் இதை வெட்டினா என்ன?" தனக்குள் சிந்தித்தான்

"இதைக்கொண்டு போனால் அசோகண்ணைக்கும் ஒரு லோட் குடுக்கலாம் பின்னேரமா வந்தா இன்னொரு லோட் கொண்டு போகலாம்போல கிடக்கு". முணுமுணுத்தபடி பீற்றர் முட்கம்பி சூழ்ந்த காணியின் வாசலை நெருங்கினான். "மிதிவெடிகள் கவனம்" என்ற அறிவிப்பு பீற்றரை சிறிது தயங்க வைத்தது. அசோகண்ணையும், அந்தோனி அண்ணையும் நினைவில் வர தயக்கம் மறைந்தது.

"நான் நேர்மையாத்தான் உழைக்கிறன் கடவுள் என்னைக் கைவிடமாட்டார்" சொல்லியவாறே முட்கம்பிகளை விலக்கிக்கொண்டு உட்புகுந்தான். உள்ளே நுழைந்த பீற்றர் சில அடிகள்தான் எடுத்து வைத்திருப்பான் 'டமார்.......' புதைக்கப்பட்ட மிதிவெடி ஒன்றில் பீற்றரின் கால் பட்டதும் அது வெடித்துச் சிதறியது. இரத்த வெள்ளத்தில் தூக்கி வீசப்பட்டான் அவன். ஆளரவம் அற்ற சூழலில் ஒரு கால் சிதைந்த நிலையில் துடிதுடித்துக்கொண்டிருந்த அவனது உயிர் இரத்தப்போக்கினால் மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருந்தது.

"அம்மா! அம்மா! அப்பா எப்ப வருவார்?" மூத்த மகள் தாயைக் கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தாள். "பொறு பிள்ள இப்பத்தானே ஒன்பது மணி, பத்துமணிக்கிடையில வந்திடுவார்" மகளுக்கு சமாதானம் கூறிக்கொண்டிருந்தாள் அர்ச்சனா. அவளையும் பிள்ளைகளையும் தவிக்க விட்டு விட்டு பீற்றர் மீண்டும் வர முடியாத இடத்திற்கு சென்று விட்டது அவளுக்கெங்கே தெரியப்போகுது?

# திருமறைப்பணி நிலையச் செய்தி மடல்

## மறைக்கல்வி கல்வி விவிலியப் பணிகள்

## தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளருக்கான பயிற்சி ஓர் பார்வை



மன்னார் மறைமாவட்டத்தில் பணியார்வமுள்ள இறைமக்களைத் தெரிந்தெடுத்து தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளருக்கான பயிற்சியும் தியானமும் இரண்டு வாரங்களாக (22.11.2004 - 06.12.2004) மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் ஏறக்குறைய 100 பேர் மட்டில் பங்கேற்றுப் பயனடைந்தனர். இந்தியாவிலுள்ள பாளையங்கோட்டை மறைமாவட்டத்தைச் சேர்ந்த புதுவாழ்வுத் தியானக் குழுவினர் இந்த இரண்டு வாரப் பயிற்சியை வழங்கினார்கள். தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை சேவியர் அடிகளார், மற்றும் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர் இருதயசாமி, மற்றும் சகோதரர் ஞானப்பிரகாசம் ஆகியோர் இப்பயிற்சியை சிறப்பாக வழங்கினார்கள். இரண்டு வாரப்பயிற்சியின்போது கிறிஸ்தவ கத்தோலிக்க விசுவாச உண்மைகளைப்பற்றிய பல்வேறு விடயங்கள் எடுத்துக்கூறப்பட்டன. இன்னும் பரிசுத்த ஆவியின் கொடைகள், கனிகள் பற்றியும் சொல்லப்பட்டது. இறைவார்த்தைப் பணியை முன்னெடுப் போருக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றியும் கூறப்பட்டது.

பயிற்சியின் இடையில் களப் பயிற்சிக்காக பங்குபற்றியோர் பல்வேறு பங்குகளுக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் தாம் சென்ற பங்குகளில் குடும்பங்களைத் தரிசித்து இறைவார்த்தை வழிபாடுகளை நடாத்தி இன்னும் பல்வேறு வழிகளில் தமது அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் இவர்கள் தமது பணிகள் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டனர். இப்பயிற்சியில் நிறைவில் மன்னார் மறைமாவட்ட சிறப்புப்பணி முதல்வர் அருட்பணியாளர் தேவறாஜா அடிகளார் தலைமையில் பேராலயத்தில் சிறப்புத் திருப்பலி இடம்பெற்றது. இதில் முழுமையாக பங்கேற்ற 80 பேருக்கு மன்னார் ஆயர் அவர்களினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### தன்னார்வ பணியாளர் பயிற்சியில் பங்கேற்றோர் தொகை

| | | | |
|---|---|---|---|
| மன்னார் | -20 | பண்டிவிரிச்சான் | -4 |
| பேசாலை | -13 | வவுனியா | -2 |
| பள்ளிமுனை | -12 | உயிலங்குளம் | -2 |
| வங்காலை | -6 | வஞ்சியன் குளம் | -2 |
| தோட்டவெளி | -5 | தாழ்வுபாடு | -2 |
| பம்பைமடு | -5 | விடத்தல் தீவு | -2 |
| செட்டிகுளம் | -5 | இலுப்பைக்குளம் | -1 |
| கற்கிடந்த குளம் | -5 | நானாட்டான் | -1 |
| தலைமன்னார் | -4 | தட்சனாமடு | -1 |

### பயிற்சி நிகழ்ச்சி நிரல்

1. உள்ளிருப்புத் தியான பயிற்சி 22.11.2004 திங்கள் மாலை முதல் 26.11.2004 செவ்வாய் இரவு வரை.
2. பணித்தளப் பயிற்சி 26.11.2004 வெள்ளி மாலை முதல் 29.11.2004 திங்கள் இரவு வரை.
3. சொந்த வீட்டில் பயிற்சி 30.11.2004 செவ்வாய் கிழமை
4. உள்ளிருப்பு தியானப் பயிற்சி - இரண்டு 01.12.2004 புதன் காலை 9.00 மணி முதல் 03.12.2004 வெள்ளி மாலை 2 மணிவரை
5. தன்னார்வ பணியாளர் குடும்ப முகாம் 03.12.2004 வெள்ளி மாலை 4 மணி முதல் 04.12.2004 சனி மாலை 4 மணி வரை
6. அர்ப்பண விழா - சான்றிதழ் வழங்கல் விழா 04.12.2004 சனி மதியம் 12- 2.00 மணிவரை

## தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர் பயிற்சியில் பங்கேற்றோருடைய அனுபவங்கள்

பாவசங்கீர்த்தனம் எமது வாழ்வில் எவ்வளவு முக்கியம் என்றும் எம்மைப் போன்று பாவத்தில் சிக்குண்டு மீள முடியாமல் தவிக்கும் ஒவ்வொரு ஆன்மாக்களையும் எப்படிப் பரலோகத்திற்குக் கொண்டு போகமுடியும் என்றும் உணர்ந்தேன். பரிசுத்த ஆவியானவர் என்னை வரங்களினாலும் கொடைகளினாலும் நிறைவாக நிரப்பியுள்ளார். அருட்சாதனங்களில் எப்படி நிலைத்திருக்க வேண்டும் என்றும் நாளாந்த செபம், குடும்ப செபம், தனிச்செபம், பரிந்துரைச்செபம் எப்படிச் செபிக்க வேண்டும் என்றும் அறியக்கூடியதாக இருந்தது. எம்மை ஒளியின் மக்களாக வாழ இப்பயிற்சி ஊக்கம் ஊட்டியுள்ளது. இங்கு வருவதற்கு முதல் மன்றாட்டு சொல்லக்கூட தெரியாத நிலையில் இருந்தேன். தற்போது வாய்திறந்து செபிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கின்றேன். இறைவார்த்தையை வாசிக்க வேண்டும் என்ற தாகம் ஏற்பட்டுள்ளது.

*செ. கெயினா தேக்கிளம்மா, தோட்டவெளிப் பங்கு*

கடவுள் என்னை பெயர் சொல்லி அழைத்து தனது பணியை தொடர அழைத்துள்ளார். நான் இந்த பயிற்சி அனுபவத்தில் முழுமையாக இயேசுவை அறிந்தேன். முன்பு எனது வாழ்வு ஓர் பாவம் நிறைந்த வாழ்வாக இருந்தது. இந்த பயிற்சி அனுபவத்தின் மூலம் நான் ஓர் புதிய உலகைப் பார்க்கிறேன். என் வாழ்நாள் முழுவதும் இயேசுவுக்கு பணி ஆற்ற என்னை அர்ப்பணிக்கின்றேன். நான் முழுமையாக பரிசுத்த ஆவியின் கொடைகளைப் பெற்றுள்ளேன். மிக முக்கியமாக நான் பொறுமையாக இருக்க பரிசுத்த ஆவியிடம் வேண்டி பொறுமை என்னும் கனியை பெற்றுக்கொண்டேன்.

*ஆர். சுபாசினி, கற்கடந்தகுளம் பங்கு*

நான் இந்த பயிற்சிக்கு வந்த இடத்தில் ஆண்டவரின் இறைவார்த்தைப் பணிக்கு அவரால் பெயர் சொல்லி அழைத்து வரப்பட்டுள்ளேன் என்பதனை ஆழமாக உணர்ந்துள்ளேன். இங்கே வந்து எங்களைப் பயிற்றுவித்துள்ள அருட் தந்தையர்கள் மற்றும் பெரியவர்களிடமிருந்து நிறைந்த அறிவுரைகளை, நிறைவுள்ள கிறிஸ்தவ வாழ்விற்கான படிப்பினைகளை ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டேன்.

இப்பயிற்சிக் காலத்தில் நடந்த ஆண்டவரின் குணப்படுத்தும் வழிபாடுகளின்போது என் ஆன்மாவிலும், உடலிலும் நிறைந்த சுகத்தையும், பலத்தையும் பெற்றுக்கொண்டதை உணர்ந்தேன். ஆண்டவரிடம் எங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து அவரிலேயே நிலைத்திருந்து ஆண்டவர் எங்களுள்ளும் நாங்கள் அவருள்ளும் நிறைந்திருந்து சீவிக்கக் கூடியதாக இருந்தது. பங்குத் தரிசிப்புக்களில் வீடுகளைத் தரிசித்து, மற்றவர்களின் சுக, துக்கங்கள், தேவைகள் என்பவற்றை விசாரித்து அறிந்து மற்றவர்களிற்காக ஆண்டவரின் பெயரால் அவரின் அருள் வேண்டி செபிக்கும் நல்ல வரத்தினை நிறைவாக அனுபவித்தேன். *அன்சில்லா ரஜனி, பம்பைமடு பங்கு*

நான் இந்தப் பயிற்சியின் மூலம் 'பெற்றுக்கொண்ட முதல் அனுபவம் யேசு என்னுடன் இருக்கின்றார் என்பதாகும். எனவே என்னாள் அவருடைய நாமத்தின் பொருட்டு இறைவார்த்தையை அறிவிக்கவும் இல்லங்களுக்குச் சென்று நற்செய்திப் பணி செய்யவும் மேலும் சிறுவர்கள் மற்றும் செபக்குழுக்களுக்குச் சென்று பணியாற்றவும் அன்பிய வலயங்களில் நான் பெற்ற பயிற்சியை பகிரவும் முடியும். மேலும் நான் இந்தப் 15 நாட்கள் பெற்ற அனுபவத்தின் மூலம் இதைச் செய்யும் ஆற்றலை இறைவன் தந்துள்ளார் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றேன்.

*சி. தியோஜினஸ் பீரிஸ் (நோயல்),தலைமன்னார்.*

இப்பயிற்சி முழுமையானதாக அமைந்திருந்தது. எமது இறைவார்த்தை பணிக்கு ஆனி வேராக அமைந்திருந்தது. இப் பயிற்சியின் மூலம் தன்னார்வத்தையும், விடாமுயற்சியையும் இறைவனுக்கு சேவை செய்ய வேண்டிய காரியங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. தூய ஆவியின் கனிகளையும் கொடைகளையும் வரங்களையும் பெற்றுக் கொண்ட அனுபவம் கிடைத்தது. இந்த பயிற்சியின் காலம் ஒரு நாளை போல் இருந்தது. தனி செபம், குழுச்செபம் போன்றவற்றின் அனுபவங்கள் சுவையாக இருந்தது. பங்குத் தரிசிப்பு குடும்பத்தின் ஊடாக பெற்ற அனுபவங்கள் அனைத்தும் நன்றாக இருந்தது. அத்தோடு பாவ அறிக்கையின் முழு அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

*செ. டன்சன் குமார், சின்னப்பண்டிவிரிச்சான்,மடுக்கோவில்.*

இப்பயிற்சிக்கு நான் அழைக்கப்பட்டபோது நான் தாகமாயிருந்தேன் இப்பணிகள் பங்கில் பணியாற்றி வருவதால் எனக்கு புதிய அனுபவங்கள் கிடைத்தது. தொடர்ந்து பள்ளிமுனை பங்கை நானே தேர்ந்து கொண்டேன் ஏனெனில் அப்பங்கு யூபிலி ஆண்டு விழாவை கொண்டாட இருப்பதால் அங்கு பணி செய்ய ஆசைப்பட்டேன். பணிகள் புரியக்கூடியதாக இருந்தது. தொடர்ந்து வதிவிடப் பயிற்சியும் பெற்றேன். இப்பயிற்சிகளில் பாவ மன்னிப்பாக பயிற்சி என் உள்ளத்தை தொட்டது. பரிசுத்த தனத்தையும் பரலோக ராசியத்தை அடையிர நிலைப்பாட்டை உணர்ந்தேன். தொடர்ந்து ஆவியின் கொடைகள், கனிகள் வாங்கி தெளிவு கிடைத்தது. ஆவியில் வரங்களும், கொடைகளாலும் கனிகளாலும் நிரப்பப்பட்டுள்ளேன் என்பதை உணரக்கூடியதாகவுள்ளது. பங்கிலும், பணித்தளங்களிலும் பணியாற்ற இப்பயிற்சி பெரிதும் அனுபவத்தை தந்துள்ளது. யேசுவை வாழ்வாக்கி என் நேரமும் நற்செய்தியை வாழ்வாக்கி கொள்ள மற்றவர்களுக்கு வாழ்ந்து காட்ட தன்னார்வ பயிற்சிமுகாம் எனக்கோர் புதிய அனுபவத்தை தந்துள்ளது. இயேசுவுக்கே புகழ், யேசுவுக்கே நன்றி, மரியே வாழ்க!

*- எம்.ஏ.ஜெயதாஸ், மன்னார் பங்கு*

### துறவியருக்கான ஒரு நாள் பயிற்சி முகாம்

கடந்த 30.11.2004 அன்று பங்குகளில் நற்செய்திப் பணியாற்றும் துறவியருக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சிக்கு மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் பல்வேறு துறவறசபைகளைச் சேர்ந்த 25 அருட்சகோதரிகள் வருகை தந்திருந்தனர். காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை இடம்பெற்ற இந்த முகாமில் நற்செய்திப் பணி சார்ந்த பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

### பணியாளருக்கான குடும்ப முகாம்

கடந்த 03.12.2004 வெள்ளி மாலை 4.00 மணி தொடக்கம் 04.12.2004 சனி மாலை 2.00 மணி வரை பணிவாழ்வில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கான குடும்ப முகாம் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இக்குடும்ப முகாமில் ஏறக்குறைய 450 பேர் பங்கெடுத்தனர். கணவன் அல்லது மனைவி பங்கில் பணியாளராக செயற்பட்டால் அக்கணவனுடைய அல்லது மனைவியினுடைய துணையாளரும் தம்பதிகளாக இதில் பங்கெடுத்தனர். தம்பதிகளாக பங்கெடுக்க முடியாதவர்கள் தனியாட்களாகவும் வருகை தந்திருந்தனர். இவர்களுக்கான உணவு தங்குமிட வசதி அனைத்தும் மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

### மறையாசிரியர் நிர்வாகக் கூட்டம்

டிசம்பர் மாதத்திற்கான மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றிய நிர்வாக சபைக்கூட்டம் டிசம்பர் மாதம் 17ம் திகதி மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது 2004ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட பணிகள் பற்றிய மீளாய்வும், 2005ம் ஆண்டிற்கான பணித்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

### மறையாசிரியர் ஒன்றியத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு

டிசம்பர் மாதம் 17ம் திகதி இடம் பெற்ற மறையாசிரியர் நிர்வாகக்கூட்டத்தின் போது 2005ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக கீளியன் குடியிருப்பு பங்கைச் சேர்ந்த திரு. ஜெபநேசன் அவர்களும், செயலாளராக மன்னார் பங்கைச் சேர்ந்த வெ. திருமகள் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த ஆண்டில் மறையாசிரியர் ஒன்றியத் தலைவராக பணியாற்றிய திரு. நிப்தன் பீரிஸ் (பேசாலைப் பங்கு) அவர்களுக்கும், செயலாளராக பணியாற்றிய பீலிக்ஸ் (மன்னார் பங்கு) அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் நிர்வாகக் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒரு தடவை இடம்பெறும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

### மறைக்கல்வி நிலையத்தின் வருடாந்த கிறிஸ்மஸ் ஒன்று கூடலும் நன்றி நவிலல் விழாவும்

கடந்த 18.12.2004 சனிக்கிழமை மறைக்கல்வி நிலையத்தில் கிறிஸ்மஸ் ஒன்று கூடலும் நன்றி நவிலல் விழாவும் இடம் பெற்றது. பங்கு மறையாசிரியர் ஒன்றியப் பிரதிநிதிகள், மறைக்கல்வி நிலையப் பணியாளர்கள், மன்னா பணியக பணியாளர்கள் மற்றும் எமது மறைக்கல்வி, கல்வி, விவிலிய, மன்னா பத்திரிகைப் பணியில் பல்வேறு வகையில் உதவி புரியும் நல்லுள்ளம் படைத்த அனைவரையும் ஒன்றிணைத்து இந்நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் மன்னார் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். ஆரம்ப வழிபாட்டைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் மன்னார் பேராலயப் பங்கினால் வழங்கப்பட்ட நடன நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது. பின்னர் சிறப்புரைகள் இடம்பெற்றன. அளவக்கைப் பங்குத்தந்தை சந்தியாகு அடிகளாரும் பேராலய பங்குத் தந்தை எமிலியானுஸ் பிள்ளை அடிகளாரும் உரையாற்றினார்கள். பின்னர் நன்றி நவிலலும் அன்பளிப்பு வழங்களும் இடம்பெற்றன. அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளுக்கான அன்பளிப்புகளை அருட்தந்தை எமில் அடிகளார் வழங்கி கௌரவித்தார். மன்னா பத்திரிகைப் பணிக்கு உதவிசெய்யும் அருட்சகோதரிகள், மற்றும் பொதுநிலைப் பணியாளருக்கான அன்பளிப்புகளை அருட்தந்தை யூட்குரூஸ் அடிகளார் வழங்கி கௌரவித்தார். மறைக்கல்வி நிலையம் மற்றும் மன்னா பணியக பணியாளர்களுக்கான அன்பளிப்புகளை மறைக்கல்வி நிலைய இயக்குனரும் மன்னா பதிப்பாசிரியருமான நேசன் அடிகளார் வழங்கிக் கௌரவித்தார். பின்னர் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றியத்தின் புதிய செயலாளர் செல்வி வெ. திருமகள் நன்றியுரை வழங்கினார். இறுதியாக அழைக்கப்பட்ட அனைவரும் மதிய விருந்தில் பங்கேற்றதோடு இவ்விழா நிறைவுற்றது.

தகவல் - டொமிற்றா

# இளைஞர் பொழிவு



## சிந்தனைத் தொடர் – 3

Fr. வின்னி யோசப் எழுதுகிறார்

**இன்றைய மாணவர்களின், இளைஞர்களின் சக்தி காட்டாற்று வெள்ளத்தைப் போன்றது. அதை அப்படியே விட்டுவிட்டால் வழி நெடுக அழிவை ஏற்படுத்திவிட்டு எந்த உபயோகமும் இல்லாமல் கடலில் கலந்துவிடும்.**

## தன்னம்பிக்கை

இந்த மாணவர்களை, இளைஞர்களை உங்களால் திருத்த முடியுமா? உங்கள் எழுத்து மூலம், அறிவுரை மூலம் இவர்களை மாற்ற முடியுமா? யார் வந்தாலும் இவர்களை மாற்ற முடியாது. இந்த சமுதாயத்தை திருத்த முடியாது. அது இன்னும் சீரழிந்து போய்க்கொண்டேதான் இருக்கும் என்று சொல்பவர்களுக்கு என்னுடைய பதில், முடியும். நம்பிக்கை இருந்தால் நம்பிக்கையோடு மலையைப் பார்த்து இடம்பெயர்ந்து செல் என்றால் அதுகூட நடைபெறும் என்கிறது விவிலியம்.

இன்றைய மாணவர்களின், இளைஞர்களின் சக்தி காட்டாற்று வெள்ளத்தைப் போன்றது. அதை அப்படியே விட்டுவிட்டால் வழிநெடுக அழிவை ஏற்படுத்திவிட்டு எந்த உபயோகமும் இல்லாமல் கடலில் கலந்துவிடும். ஆனால் அந்த வெள்ளத்தை அணை இட்டுத் தடுத்தால் அதை ஆக்கப்பூர்வமாக விவசாயம், குடிநீர் போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

அதைப் போன்றதுதான் இளைஞர்களின் சக்தியும். அதை ஆக்கபூர்வமாக நெறிமுறைப்படுத்தி தனக்கும் வீட்டிற்கும், நாட்டிற்கும் உபயோகமுள்ளவர்களாக மாற்ற வேண்டியது நமது கடமையாகும். அணையைக் கட்டாமல் தண்ணீர் வீணாகிறதே என்று புலம்புவதில் அர்த்தமில்லை. மாணவர்களை நெறிமுறைப்படுத்தாமல் அவர்கள் வாழ்க்கையும் சமுதாயமும் கெட்டுப்போகிறதே என்ற புலம்பலையும் விட்டுவிடுவோம். இவர்களை நெறிமுறைப்படுத்த வேண்டிய பெற்றோர்கள், ஆசிரியர்கள், குருக்கள், ஆட்சியாளர்கள் தங்கள் கடமையை செய்யத் தவறியதால்தான் இளைஞர்களின் வாழ்க்கை தடம் புரண்டு செல்கிறது.

மனிதனுடைய ஆற்றல் எல்லையற்றது. இந்த ஆற்றல் நம்முள்ளே புதைந்து கிடக்கிறது. இந்த ஆற்றலை நல்ல முறையில் அறிந்து தன் திறமையை வளர்த்துக்கொள்கிறவன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். தன்மேல் நம்பிக்கையற்ற தன்மையினாலும், எதிர்மறை சிந்தனைகளாலும், வாழ்க்கையில் தோல்வியை ஏற்கிறான். இன்று இளைஞர்கள் எதிர்மறையாகச் சிந்திக்கின்றார்கள். வாழ்க்கையைப் பற்றிய அவநம்பிக்கைவாதம் அவர்களிடம் அதிகமாக இருக்கிறது. எதிலும் குறையையும், குற்றத்தையும் தேடி கண்டுபிடிப்பது வாடிக்கையாகிவிட்டது.

"எனக்குப் பேசவராது, படிக்கவராது, பழகவராது, ஆங்கிலம் வராது, நடனம் வராது, பாடவராது, நான் ஒரு உதவாக்கரை" என்று நம்மைப்பற்றிய குறைகளை பெரிதுபடுத்திக்கொண்டு போனோமென்றால் நம்மையே நமக்குப் பிடிக்காமல் போகும். தன்னம்பிக்கை இழந்து தாழ்வு மனப்பான்மையுடன் வாழ ஆரம்பிப்போம். இந்த தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்படுபவர்கள் உயர்வதற்குப் பதிலாக மற்றவர்களை மட்டம் தட்டி உயரவிடாமல் பார்த்துக்கொள்வதிலேயே குறியாக இருப்பார்கள். நம்மிடம் உற்பத்தியாகும் எதிர்மறை கசப்புத்தான் சிறிய வயதிலேயே நம்மிடம் பாதிப்பையும், உடல் நலக்குறைவையும் ஏற்படுத்துகின்றது என்பது உளவியல் அறிஞர்கள் கருத்து.

இதற்கு மாறாக நல்ல எண்ணங்களும், இலட்சியங்களும்தான் வாழ்க்கையை உருவாக்குகிறது. நம்மைப் பற்றி நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைத்தான் உலகம் ஏற்றுக்கொள்கிறது. அதுதான் நமக்கு அந்தஸ்த்தைக் கொடுத்து உயர்த்தி விடுகின்றது. சுயகௌரவத்தில், தன்மானத்தில், தன்னைப் பற்றிய பெருமையில், தன்னைப் பற்றிய நிறைவில், தன்னம்பிக்கையில்தான் வாழ்வு மலர்கிறது. எண்ணங்கள் நல்லவைகளாக இருந்து நம்பிக்கையோடு விடாமுயற்சியுடன் செயல்பட்டால் தனி மனிதனும் உயரலாம், நாடும் உயரும்.

ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையை ஒருமுறை படித்தால் அவர் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டவிதம் புரியும். அவர் அமெரிக்க ஜனாதிபதியாவதற்கு முன்பு எவ்வளவு தோல்விகளை சந்தித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

1818 குடும்பத்தைக் காப்பாற்ற உழைக்க வேண்டிய கட்டாயம்
1818 அவர் தாய் மரணம், 1831 தொழிலில் தோல்வி
1832 சட்டசபைத் தேர்தலில் தோல்வி, 1832 பணி பறிப்பு
1834 மறுபடியும் தேர்தலில் தோல்வி, 1835 திருமண நிச்சயம் - ஆனால் நிச்சயிக்கப்பட்ட பெண் இறப்பு, 1838 சபாநாயகர் தேர்தலில் தோல்வி, 1843 காங்கிரஸ் தேர்தலில் தோல்வி,
1846 காங்கிரஸ் தேர்தலில் தோல்வி




1848 காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
1854 செனட் தேர்தலில் தோல்வி
1856 துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டு தோல்வி
1858 மூன்றாம் முறையான செனட் தேர்தலில் தோல்வி
1860 அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வு

உங்களுக்கும் எனக்கும் இந்த நிலை ஏற்பட்டிருந்தால் நாம் நிச்சயம் தற்கொலைதான் செய்துகொண்டிருப்போம். ஆனால் ஆபிரகாம் லிங்கன் தன்னம்பிக்கையோடு வாழ்க்கையின் சவால்களை ஏற்று வெற்றி பெற்றார். தன்னம்பிக்கையுடையோர் மகிழ்ச்சியும், வெற்றியும் அடைகிறார்கள். தன்னம்பிக்கையற்றோர் கவலைப்படுகின்றார்கள். உங்கள் நிலை என்ன?

நமக்குள் அளவற்ற ஆற்றலும், அறிவும் வெல்ல முடியாத சக்தியும் குடிகொண்டிருக்கின்றன. நாம் அமரத்துவம் பெற்ற ஆன்மாக்கள். அழியாத இறைவனின் திருவருளைப் பெற்றவர்கள். நாளைய உலகம் நம் கையில், நாம் தன்னம்பிக்கையோடு வாழ்ந்தால்.

(தொடர்ந்தும் பேசுவேன்)



# திருச்சபையின் நோக்கும் போக்கும்



## ஓர் விமர்சனக் கண்ணோட்டம்

**தொடர் 6**


அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அமதி)

திருச்சபை உறவுச் சமூகமாக மாற, உருமாற்றம் பெற எத்தகைய புதுப்பித்தல் தேவை என்பதை சிந்தித்து பார்த்தல் காலத்தின் கட்டாயமாகும். திருச்சபை 2ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் பின்பு தன்னை இறைமக்கள் திருக்கூட்டமாக அடையாளப்படுத்திக் கொண்டது. ஆனால் எவ்வளவு தூரம் இத்தகைய உருவகம் (image) அதனுடைய செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உய்த்துணருதல் அவசியமாகின்றது. இறைமக்கள் திருக்கூட்டம் என்றால் இறைவனை மையப்படுத்தி, அதனுடைய மக்கள் மத்தியில் சகோதரத்துவ உணர்வோடு, ஒரே இறைவனின் பிள்ளைகள் என்ற உணர்விலே ஒன்றித்து வாழ்வதையே கோடிட்டுக் காட்டுகின்றது. ஆனால் திருக்கூட்டம் என்பது கும்பலையோ அல்லது தொடர்புகளோ, உறவுகளோ அற்ற சமூகத்தையோ குறித்து நிற்கவில்லை. மாறாக சகோதரத்துவ உறவில், இறைவனின் மக்களாக, இயேசுவின் அன்புச் சகோதரர்களாக ஒருவரையொருவர் அன்பிலே ஏற்றுக்கொண்டு வாழ்வதையே குறித்து நிற்கின்றது. இத்தகைய இரத்த உறவிற்கு அப்பாற்பட்ட உயிர்த்த யேசுவின் பிரசன்னத்தில் இறைவார்த்தையின் ஊற்றிலிருந்து எழும் சமூகமாக உருமாற்றம் பெறுதல் இன்று அவசியமாகின்றது.

### சகோதரத்துவ சமூகமே திருச்சபை

திருச்சபை அமைப்பு ரீதியான பல மாற்றங்களைக் கடந்து வரலாற்றில் வாழ்ந்து வருவது உண்மையே. ஆனால் அமைப்பு ரீதியான மாற்றங்கள் மட்டும் உலகத்தில் இறையாட்சியை வேரூன்றச் செய்ய முடியாது. மாறாக உயிருள்ள சமூகமாக, சகோதரத்துவ சமூகமாக உருவெடுக்க ஆவன செய்யவேண்டியது இன்று திருச்சபை எதிர்கொள்ளும் சவாலாகும். திருச்சபையில் ஒழுங்கமைப்பு (uniformity) காணப்படுகிறதோயொழிய உண்மையான ஒன்றிப்பை (unity) காணமுடியவில்லை. இன்று திருச்சபையை ஒருமைப்பாட்டின் (communion) சமூகமாக அடையாளப்படுத்த அறைகூவல் விடுக்கப்படுகின்றது. ஒருமைப்பாடு சகோதரத்துவ உறவிலும், ஒன்றிப்பிலும், பகிர்விலும், மன்னிப்பிலும் ஒப்புரவிலுமே கட்டியெழுப்பப்பட வேண்டியதொன்றாகும். ஆலயங்களை வானளாவ உயர்த்திக் கட்டுவதாலோ, யூபிலி கொண்டாட்டத்திற்காக ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து அழகுபடுத்துவதாலோ தலத்திருச்சபையோ அல்லது பங்குத் திருச்சபையோ வளர்ச்சி கண்டுவிட்டது என்று கூறமுடியாது. தலத்திருச்சபைகளில் இறைமக்கள் மத்தியில் சகோதரத்துவ உணர்வும், உண்மையான ஒன்றிப்பும் அனுபவமாக மாறுமிடத்தில் தான் இயேசுவின் அன்புச் சமூகமாக, சீடத்துவ வாழ்வு சாட்சியமாகும் சமூகமாக மாற முடியும். இன்றும் வானளாவ உயர்ந்து நிற்கும் ஆலயங்களுக்கும், அமைப்புக்களுக்கும் பின்னால் மறைந்துகொண்டு கிறிஸ்தவம் வாழப்படமுடியாது.

கிறிஸ்துவின் போதனைகளும் வாழ்வும், இறைத்தந்தையை மையப்படுத்தி அனைவரையும் ஒன்றுசேர்க்கும் உறவுச் சமூகமாக மாற்றியமைக்க வழி சமைக்கப்பட வேண்டும். இன்னும் கிறிஸ்தவம் ஒரு வாழ்க்கை முறை (life style) என்பதை கிறிஸ்தவ சமூகம் புரிந்துகொண்டதாக தெரியவில்லை. கிறிஸ்துவை மூலைக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்ட திருச்சபையில் கிறிஸ்துவின் மனநிலை ஊடுருவிய வாழ்க்கைமுறை அமையாதது கவலைக்கிடமானது. சந்திகளில் சுரூபங்கள் வைத்து கிறிஸ்தவ அடையாளத்தை எண்பிக்கும் வகையில் காட்டப்படும் ஆர்வம், கிறிஸ்துவின் போதனைகளுக்கு ஏற்ப



வாழுவதில் இல்லை என்பது பகிரங்க இரகசியமாகும். எனவே திருச்சபையை புதுப்பிப்பது என்பது மீண்டுமொரு முறை திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து விசுவாசத்தின் ஊற்றுகளுக்கு இட்டுச் செல்வதாகும். தலத்திருச்சபைகளில், பங்குத்திருச்சபைகளில் எத்தனையோ வழிபாடுகள், புதுப்பித்தல் நிகழ்வுகள் இடம்பெற்றாலும், எவ்வளவு தூரம் அவைகள் மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி ஓர் உறவுச் சமூகமாக மாற்றியமைத்திருக்கின்றது என்பது கேள்விக்குறியே. இன்றும் பலி வாழ்வு இல்லாமல் பலிகள் தொடர்கின்றன. அன்பு வாழ்க்கையில் இல்லாத நிலையில் கொண்டாடப்படுகின்றது. கிறிஸ்தவத்தின் உண்மை முகம் சிதைக்கப்பட்ட நிலையில் போலியான கிறிஸ்தவ வாழ்க்கை தொடர்வதே நிஜமாகும். இன்னும் சடங்குகளுக்குள் புதையுண்டு போன கிறிஸ்தவத்தை மீட்டெடுப்பதே இன்றைய புதுப்பித்தலுக்கு விடுக்கப்படும் பாரிய சவாலாகும்.

### நற்கருணை சமூகமே இன்று தேவையானது

நற்கருணை ஆண்டு திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கிறிஸ்தவ சமூகம் நற்கருணையை மையமாகக் கொண்டு வாழ அழைக்கப்பட்டுள்ளது. நற்கருணை இயேசுவின் நிலைத்த பிரசன்னத்தையும், இறைவனை நோக்கிய பயணத்துணை ஆன்மீக உணவையும் குறித்து நிற்கின்றது. ஆனால் கிறிஸ்தவ சமூகம் நற்கருணையை வெறும் சடங்காக்கி வாழ்வோடு தொடர்பில்லாத வழிபாடாக மாற்றிவிட்டது. நற்கருணை குறித்து நிற்கின்ற ஒருமைப்பாடு, பகிர்வு, அன்பு போன்ற இறையரசு விழுமியங்கள் வாழப்படாத ஒரு நிலையே எமது சமூகத்தில் தென்படுகின்றது. உடைக்கப்பட்ட மக்களுக்காக உடைக்கப்பட்ட உடலாகவே நற்கருணை அடையாளப்படுத்தப்படும் பின்னணியில் பிறருக்காக துன்புறுவோருக்காக, ஆதரவற்றவர்களுக்காக உடைக்கப்படும் வாழ்க்கையை வாழுவதற்கு பதிலாக நற்கருணையை அர்த்தமில்லாமல் பெற்றுக்கொள்கின்ற வாழ்க்கை முறையையே இன்று காணுகின்றோம். ஆராதனைக்குரிய ஆண்டவராக இயேசுவை நற்கருணையைப் பேழையில் பூட்டிவைத்துவிட்டு, நாம் ஒருவருக்கொருவர் நற்கருணையின் குறியீடுகளாக வாழாது பிளவுகளும் பேதங்களும் மலிந்த ஒரு சமூகமாகவே வாழத் தலைப்பட்டிருக்கின்றோம். நற்கருணையின் பலித்தன்மை மறக்கப்பட்டு ஏதோ ஒரு சாதாரண விருந்துபோல கொண்டாடப்படுகின்றது. நற்கருணை என்ற அருளடையாளம் ஏற்படுத்தும் அன்பின் பகிர்வுகள் எங்களை பாதித்து உருமாற்றும் போதுதான் நடமாடும் கிறிஸ்துக்களாக நாம் ஒவ்வொருவரும் மாற முடியும். இன்றைய சூழலில் நவீன இயலும், நுகர்வுக் கலாச்சாரமும், போதைவஸ்துக்களையும், குடி போதையையும் முதன்மைப்படுத்தி வாழ முயலும் வேளையில், நற்கருணை உடல், உள நோய்களை தீர்க்கும் ஆற்றலுள்ள அருமருந்தாக நோக்கப்பட வேண்டும். நற்கருணை ஆன்மீகம் பற்றிய மறைக்கல்வி போதனை முக்கியத்துவம் பெறும்போது நற்கருணைச் சமூகமாக மாற ஏதுவான சூழல் உருவாக்கப்படுகின்றது. அத்துடன் நற்கருணை ஆராதனைகள் தனிப்பட்ட பக்தி முயற்சிகளாக அமையாது பலி வாழ்விற்கும், பகிர்விற்கும் கிறிஸ்தவ சமூகத்தைத் தூண்டுபவையாக அமைதல் இன்றியமையாதது. பங்குத் திருச்சபைகளில் வழிபாடுகளுக்கோ, பக்தி முயற்சிகளுக்கோ பஞ்சமில்லா நிலையைக் காணுகின்றோம். ஆனால் பலிவாழ்வும், பகிர்வும், மன்னிப்பிற்கும்தான் பஞ்சம் காணப்படும் நிலையை காணமுடிகின்றது. தியாக வேள்வியில் தன்னை கரைத்துக்கொண்ட இயேசுவின் சிலுவை மரணத்தை முன்னுணர்த்தும் அருளடையாளமான நற்கருணை வாழ்வாக்கப்பட திருப்பலிகள் தகுந்த ஆயத்தத்துடன் கொண்டாடப்பட வேண்டும். திருப்பலியில் அலங்காரங்கள், ஆரவாரங்கள், ஆராத்திகள், ஆசாரங்கள் மட்டும் திருப்பலியில் எம்மை பங்காளிகளாக மாற்ற முடியாது. முழுமையான ஈடுபாட்டுடன் கிறிஸ்துவோடு இணைந்து நாமும் எம்மை பலியாக்கும்போதுதான், திருப்பலி முடிந்த பின்பும் பலி வாழ்வு தொடர இடமுண்டு. நற்கருணை பக்தி முயற்சிகளை, திருப்பலி ஆயத்தங்களை மீளாய்வுசெய்து நற்கருணை ஆன்மீகத்தில் கிறிஸ்தவ சமூகத்தைக் கட்டியெழுப்ப ஆவன செய்யப்படுதல் காலத்தின் கட்டாயமாகும்.

### தீவிர புதுப்பித்தலே இன்றைய தேவை


காலத்தின் குறிகளை உய்த்துணர்ந்து தேங்கிக் கிடக்கும் சாக்கடையாக மாறாது பாய்ந்தோடும் நீரருவியாக திருச்சபையும், வழிபாடுகளும், கிறிஸ்தவ வாழ்வும் புதுப்பிக்கப்படுதல் அவசியமாகின்றது. கிறிஸ்தவ வாழ்வின் போலித்திரைகளை களைந்து, பழக்கப்படுத்திக் கொண்ட வழிபாடுகளுக்கு புத்துயிர் அளித்து, வாழ்வை மையப்படுத்திய ஒரு புதுவாழ்க்கை முறைக்கு கிறிஸ்தவர்கள் திரும்ப வேண்டும். ஆலயங்களை அகலமாக்கி வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டிடங்களாக மாற்றுவதில் மட்டும் அதீத ஆர்வம் காட்டும் அதேவேளையில், ஏழைகள், ஆதரவற்றவர்கள், துன்புறுவோர் மட்டில் இரக்கமும் கருணையும் காட்டும் இதயத்தில் ஈரமுள்ள மனிதர்களை கட்டியெழுப்ப வேண்டியதே இன்று மேய்ப்புப் பணியின் முதன்மையான சவாலாகும். நற்கருணை ஆன்மீகத்தின் அடித்தளத்தில் பலிவாழ்வை நோக்கிய வாழ்க்கை முறைக்கு இட்டுச்செல்லவும், பகிர்ந்து வாழும் மனநிலையை உருவாக்க வழிபாடுகளும் பக்தி முயற்சிகளும் உணர்வுகளுக்கு தீனிபோடும் மனநிலையிலிருந்து விடுபட்டு வாழ்வை பாதிக்கும் நிலைக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். மீண்டுமொருமுறை ஒரு 'பாஸ்கா' (கடத்தல்) இடம்பெறுதல் அவசியமாகின்றது. நற்கருணை ஆன்மீகத்தின் அடித்தளமான பாஸ்கா மறைபொருள் (பாடுகள், மரணம், உயிர்ப்பு) தினம் தோறும் இடம்பெறும் அனுபவமாக மாறும்போதே தலத்திருச்சபை நற்கருணையை உண்மையாக கொண்டாட முடியும்.

(கண்ணோட்டம் தொடரும்)

# நத்தாரும் நற்கருணையும்

எஸ். எம். சுஜாந்தினி,
அப்போஸ்தலிக்க கார்மேல் நவ சன்னியாசிகள் இல்லம், கம்பகா.

**அன்று உணவைப்போல் அதாவது தன் புனித நிலையை தாழ்த்தி முன்னிட்டியில் உறங்கிய குழந்தை, இன்று சிறை ஒன்றில் அடைக்கப்பட்டதைப்போல், தனது உன்னத நிலையை அப்ப வடிவில் மாற்றி உயிரூட்டும் உணவாக வாழ்வளிக்கும் தெய்வமாக நற்கருணைப் பேழையினுள் உறைகின்றது.**



இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தேறிய நிகழ்வே கடவுளின் தெய்வீகத் தன்மை மனித உருவாய் மண்ணில் உதித்தது. இந்த மனுமகனே தன் ஆருயிரை மானிடகுலமான நம் அனைவருக்காகவும் சிலுவையில் இரத்தப் பலி ஆக்கினார். இன்று நாமனைவரும் ஆயத்தமாகுகின்றோம் ஏன்? பாலனின் பிறப்பைக் கொண்டாடுவதற்கு, நம் அன்பு உள்ளங்களாகிய அயலவர்களுக்கு இந்த நற்செய்தியை அறிவிப்பதற்கு. நம் பிறமத சகோதரர்களுக்கு இயேசுவின் வருகையை மீண்டும் ஒருமுறை பறைசாற்றுவதற்கு.

இவ்வாறு இவையெல்லாம் குதூகலமாக நிகழும்வேளை எமது பரிசுத்த தந்தை தனது திருவாய் மலர்கின்றார். "என் அன்புக் குழந்தைகளே, இவ்வாண்டினை நற்கருணையின் ஆண்டாகப் பிரகடனம் செய்ததிற்கிணங்க, இதனை நம் வாழ்வில் வாழ்ந்து காட்டுவோம்" இதுவே நம் திருத்தந்தையின் வேண்டுகோள்.

பாலகனின் பிறப்பையும், எம் பரிசுத்த தந்தையின் செய்தியையும் இணைத்துப் பார்ப்போமானால் எம் அகவிழிகள் புத்துயிர் பெறுகின்றன. அதாவது "நற்கருணையும் நத்தாரும் ஒன்றே" அன்று 2000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தேறிய இவ்விரு புனித நிகழ்வுகளும் இன்று நம்வாழ்வில் இணைகின்றன.... ஆழமான கருத்தைத் தருகின்றன.

மந்தைகள், உறையும் தொழுவம்போல் சிறு குடிசையை நம் இல்லங்களில் அமைத்து, அதிலே அவற்றின் உணவான வைக்கோலைப் பரவி அன்னை மரியுடன் தந்தை சூசையை பாலகன் இயேசுவின் அருகாமையில் வைப்போம். இதுவே அன்று பெத்லெகேமில் நடந்தேறிய நிகழ்வு. ஆனால் மறக்க முடியாது ஒன்று. எம் பாலகன் இயேசுவை முன்னிட்டியில் கிடத்தினார்கள். இதன் அடையாளம் என்னவென அறிந்துகொள்ள யாராவது முனைந்தோமா?

குழந்தை பிறந்து அக்கணமே தன் வாழ்வின் நோக்கத்தையும், அர்த்தத்தையும், அதன் முடிவையும் அறிவித்தது. இதை மானிட மனங்கள் புரிந்துகொள்ளவில்லை. அதாவது முன்னிட்டியில் மாடுகள் மந்தைகளுக்கான உணவினை இட்டு வைப்பார்கள். ஆனால் இன்று அதே முன்னிட்டியில் வாழ்வளிக்கும் உணவு, அழியாத உணவு குழந்தை வடிவில் தவழ்கின்றது. இந்த செய்தியினை (பிறப்பின்) அறியும் பாக்கியம் பெற்றவர்கள் ஏழ்மையிலும், தாழ்மையிலும், உண்மையிலும் வாழ்ந்த இடையர்கள், ஞானிகள் மட்டுமே. காரணம் என்ன? எந்த மனித குலமும் இந்த முன்னிட்டியில் தவழும் குழந்தையை ஓர் வாழ்வளிக்கும் வள்ளலாக ஏற்கத் தயாராக இருக்கவில்லை. தொழுவமதில் பிறந்தவனை உலக மீட்பராக நம்ப முடியவில்லை. மாட மாளிகைகளிலும், உயர்ந்த கோபுரங்களிலும் உல்லாச வாழ்க்கை வாழ்ந்த அரச குல பரம்பரையினர், இந்த உயர் உண்மையை அறிந்துகொள்ளும் அளவிற்கு ஞானத்தில் திளைத்திருக்கவில்லை.

இன்று எம் சமுதாயத்திற்கு வருடாவருடம் இக்குழந்தை சுமந்து வருவதும் அதே செய்திதான். அன்று உணவைப்போல் அதாவது தன் புனித நிலையை தாழ்த்தி முன்னிட்டியில் உறங்கிய குழந்தை, இன்று சிறை ஒன்றில் அடைக்கப்பட்டதைப்போல், தனது உன்னத நிலையை அப்ப வடிவில் மாற்றி உயிரூட்டும் உணவாக வாழ்வளிக்கும் தெய்வமாக நற்கருணைப் பேழையினுள் உறைகின்றது.

அன்று தொழுவமதில் குழந்தை ஒன்று உலக மீட்பராக பிறந்திருந்ததை யூதகுலம் நம்பவில்லை, மதிக்கவில்லை, ஏற்றெடுத்தும் பார்க்கவில்லை என இன்று நம்மவர்கள் பலர் குறை கூறுகின்றோம். ஆனால் அதே யூதர்குலம் இன்று நம்மிடையே தலை தூக்கி வளர்ந்துள்ளதை எம்மால் காணமுடிகிறதா?

சிறு பேழையிலே அப்பவடிவில் வீற்றிருக்கும் தெய்வ மகனை நம்மில் எத்தனை பேர் விசுவாசக் கண்கொண்டு பார்க்கின்றோம்? பாவத்திலிருந்து எம்மை புதுவாழ்விற்கு மீட்டுச் செல்லும் உன்னத சாதனம் என்பதை எத்தனைபேர் நம்புகின்றோம்? எமக்காக தன் தூய வாழ்வை துறந்ததுமின்றி ஓர் காவலனைப்போல் இரவும் பகலும் காத்திருக்கின்றார் என்பதை எத்தனை பேர் உணர்கின்றோம்? ஏன் உள்ளத்தில் வரவேற்ற பின்பும் ஓர் கிறிஸ்தவன்போல் எத்தனைபேர் வாழ்கின்றோம்? இன்று ஏழ்மையில் பிறந்துள்ள பாலகன் மீண்டும் எமக்கு உறுத்துவது இதுவே. எப்போது எம் உள்ளங்கள் இடையர்கள், ஞானிகளின் உள்ளங்களைப்போல் மாற்றம் பெறுமோ அக்கணமே நம் உலக மீட்பரையும், வாழ்வளிக்கும் அழியாத உணவையும் எம்மால் காணமுடியும். "பூவுலகில் நல்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக" என்ற வானவர் கீதம் எம் நிலைவாழ்வில் நிஜமாக கூடி வரும்......!

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் விரைந்த உதவி

### வாழ்வுதய இயக்குனர் மன்னாவுக்கு பேட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)



வரலாறு காணாத சோக நிகழ்வுகளுக்குக் காரணமான இந்தோனேசியாவின் ஒரே ஒரு நிமிடப் பூமி அதிர்வு! எத்தனை மக்கள் பலியாகியுள்ளனர்! தொடரும் பேரழிவுகள்! மக்கள் அனாதைகளாகப் பரிதவிக்கும் அவலக் குரல்கள் எம்மைத் திகிலடையச் செய்கின்றன.

இந்நிகழ்வுகளின் சோகங்களில் பங்குகொள்ளும் நோக்கில் மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்கர் மாத்திரமல்லாது அனைத்து மதச் சகோதரர்களும் இணைந்து வாரி வழங்கிய பொருட்கள், மக்கள் உவந்தளித்த பணத்திற்கு வாங்கிய மருந்து வகைகள், மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், மன்னார் ஆதார வைத்தியசாலை வழங்கிய மருந்துகள் ஆகியவற்றை மூன்று லொறி நிரம்ப எடுத்துக்கொண்டு மன்னார் ஆயர் அதி வந்தணைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் தலைமையில் நானும் சில குருக்களும் இணைந்து கடந்த 28ந் திகதி அதிகாலையில் முல்லைத்தீவு நோக்கிப் பயணமானோம்.

கண்களையே நம்பமுடியாத பரிதாபக் காட்சிகள் அவலக்குரல்கள்! ஆசியாக்கண்டமே அதிரக் கூடிய வகையில் அரங்கேறிய பாரிய அனர்த்தங்களின் ஒரு பகுதியாக வளங்கொழித்த முல்லைத்தீவு தலைவிரி கோலமாக பொட்டிழந்து, பூவிழந்து பரிதாபக் கோலத்தில் காட்சியளித்ததைக் காணமுடிந்தது. உடமைகளை இழந்து, இல்லிடங்களை இழந்து, உடன் பிறப்புக்களை இழந்து, அந்தரித்துப் பதறித்துடிக்கும் அப்பாவி மக்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிய ஆயர் அவர்களது கண்களே நீர் சுரக்கும் வாவியாக மாறியது.

வழமையாக ஆலயத்திலே ஒப்புக்கொடுக்கப்படுகின்ற ஞாயிறு திருப்பலி ஏதோவொரு சக்தியின் உந்துதலால் ஆலயத்தில் இருந்து முக்கால் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புனித சூசையப்பர் திருச் சுரூபம் முன்பாக ஒப்புக்கொடுக்கப்படுமென கிறிஸ்மஸ் திருப்பலி வேளையில் பங்குத்தந்தை அறிவித்திருந்தார். சம்பவதினமன்று காலையில் 2000 மக்கள் மட்டில் திருப்பலியில் பங்கெடுப்பதற்காக ஊரில் நுழைவாயிலில் அமைந்துள்ள புனித சூசையப்பர் திருச் சுரூபத்திற்கருகாமைக்குச் சென்றபடியினால் தாம் உயிர்பிழைத்துக் கொண்டதாகப் பலர் கூறினர். வீடுகளில் தங்கியிருந்தவர்கள் மாலைத் திருப்பலியில் பங்கெடுக்கும் நோக்கில் இருந்ததாகவும் கூறப்பட்டது. திருப்பலி முடிவுறும் தருவாயில் "கடல் பெருகி வருது" என்ற அவலக்குரல் எழும்பிய வண்ணம் மக்கள் பலர் ஓடி வருவதை அவதானித்த பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் அடுத்த கணம் முல்லைத்தீவு நகரே கடலாகக் காட்சியளித்ததையும் தாம் திருப்பலி ஒப்புக்கொடுத்த பிரதேசம் சற்று உயர்ந்த தரையாக இருந்தபொழுதிலும் ஒரு வினாடிக்குள் முழங்கால்வரை தண்ணீர் ஏறியதாகவும் கூறினார்.

மன்னார் வவுனியா மாவட்ட மக்கள் இனமத பேதமின்றி உடனடியாகச் செயற்பட்டதைப் பாராட்டிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இச்செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்கிய மன்னார் ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் பொதுமக்களுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார். மன்னார் ஆயர் அவர்கள் கூறும்போது மன்னார், வவுனியா மக்களின் ஆதரவு தொடர்ந்தும் இருக்கும் என்றும் அனைத்துக் குருக்களும் இதற்காக பிரயாசைப்படுவதாகவும் கூறினார்.

விவிலியம் காணாத - பலர் அறியாத

## ஈராக் குறித்த புதிய தகவல்கள்

1. ஏதேன் தோட்டம் ஈராக்கிலேயே இருந்தது.
2. நாகரிகத்தின் தொட்டில் என அழைக்கப்பட்ட மொசெப்பெத்தோமியாவே தற்போதைய ஈராக்.
3. நோவாவின் பேழை ஈராக்கிலேயே கட்டப்பட்டது.
4. பாவேல் கோபுரம் ஈராக்கில் இருந்தது.
5. ஆபிரகாம் வாழ்ந்த 'ஊர்' எனும் ஊர் தென் ஈராக்கில் உள்ளது.
6. ஈசாக்கின் மனைவி ரபேக்கா நாகோரைச் சேர்ந்தவர் இது ஈராக்கில் உள்ளது.
7. யாக்கோபு ராக்கேலை ஈராக்கில் சந்தித்தார்.
8. யோனா நினிவேயில் பிரசங்கித்த இடம் ஈராக்கில் உள்ளது
9. இஸ்ராயேலரின் 10 கோத்திரங்களைக் கைப்பற்றிய இடம் அசீரியா ஈராக்கில் உள்ளது.
10. ஆமோஸ் இறைவாக்கினர் ஈராக்கிலிருந்தே கூக்குரல் இட்டார்.
11. ஜெருசலேமை அழித்த பாபிலோன் ஈராக்கில் உள்ளது.
12. தானியேல் இருந்த சிங்கக் குகை ஈராக்கில் உள்ளது.
13. தீச்சுவாலைக்கும் 3 எபிரேயப் பிள்ளைகள் காணப்பட்ட இடம் ஈராக்.
14. பபிலோனிய அரசன் பல்செசார் சுவரில் எழுதப்பட்டதைக் கண்ட இடம் ஈராக்.
15. பபிலோனிய அரசன் நபுக்கோதசனார் கைது செய்த யூதர்களை கைதிகளாகக் கொண்டு சென்ற இடம் ஈராக்.
16. இறைவாக்கினர் எசேக்கியேல் பிரசங்கித்த இடம் ஈராக்.
17. மூன்று ஞானிகளும் ஈராக்கிலிருந்தே வந்தனர்.
18. பேதுருவானவர் பிரசங்கித்த இடம் ஈராக்.
19. திருவெளிப்பாட்டில் சொல்லப்பட்ட 'மனித சாம்ராஜ்யம்' பபிலோனைக் குறிக்கிறது அது ஈராக்கில் காணப்பட்ட ஒரு நகரம்.

விவிலியத்தில் இஸ்ராயேல் நாடுதான் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. இரண்டாவது இடமாக விவிலியத்தில் குறிப்பிடுவது ஈராக். ஆனால் ஈராக் என்று நேரடியாக விவிலியத்தில் குறிப்பிடுவது இல்லை. பபிலோன், சீனார், பிரதேசம், மொசப்பத்தோமியா என்றும் குறிப்பிடுகின்றது. மொசப்பத்தோமியா என்றால் இரண்டு ஆறுகளுக்கிடையில் என்று சொல்லப்படும். ரைக்கிறிஸ் - யூப்பிறட்ரிஸ் ஆகிய இரண்டு ஆறுகளுமாகும். ஈராக் ஆழ்ந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட நாடு. இஸ்ராயேலுக்கு அடுத்ததாக மற்றைய நாடுகளைவிட வரலாறும் தீர்க்கதரிசனமும் சம்பந்தப்படுத்தப்பட்டுப் பேசப்பட்ட இடம் ஈராக் என்பதே உண்மை.

## கடலன்னையின் சீற்றம்... 1ம் பக். தொடர்.

அதேவேளை இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காணமல்போயுள்ளனர். பல்லாயிரக்கணக்கானோரின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல இலட்சக்கணக்கான மக்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். நிவாரணம் மற்றும் மீள் நிர்மாணப் பணிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் உதவிகள் விரைந்துகொண்டிருக்கின்றன. வடகிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எதிர்பாராத இந்த திடீர் அனர்த்தத்தால் இலங்கையின் பொருளாதாரம் ஆதாள பாதாளத்திற்கு சென்றுள்ளது.

## யுத்தம் அழிவிற்கு ...... 3ம் பக்.தொடா

தொடர்ந்து 3வது தடவையாக நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். 05.12.2004ல் மன்னார் நகர மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஏறத்தாழ 700 குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அடுத்துப் பேசிய வன்னிப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் இழப்புக்களை சந்தித்து விரக்தியில் வாழும் குடும்பங்களை இவ்விதமாக கௌரவிப்பது அவர்களுக்கு ஓரளவிற்கு ஆறுதல் கொடுக்கின்றது. இப்படியான நிகழ்வுகளை மன்னார் வாழ்வுதய நிறுவனம் வருடாவருடம் நினைவுகூருவது ஒரு சிறப்பான அம்சமாகும். அடுத்து உரையாற்றிய வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவசக்தி ஆனந்தன் அவர்கள் போருக்குப் பலியான இப்பொதுமக்களை வடகிழக்குப் பகுதியில் மன்னாரில் மட்டுமே இந்நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. இம்மக்கள் மிகவும் கொடூரமாக கடந்த யுத்த சூழலில் சித்திரவதை செய்யப்பட்டும் மற்றும் குண்டு தாக்குதலுக்கு இலக்காகியும் தம்முயிரை துறந்தவர்கள். வருடாவருடம் இம்மாமக்களை நினைவுகூருவது ஒரு முக்கியமான விடயமாகக் கருதுகின்றேன் என்றார்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. சூசைதாசன் சோசை அவர்கள், மற்றும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விநோதராதலிங்கம் (வினோ) ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர். சர்வமத வழிபாட்டுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மும்மத தலைவர்களும் இணைந்து மாமக்களின் நினைவுச் சுடரினை ஏற்றி வைத்தனர். இந்நிகழ்வின் இறுதியில் மன்னார் திருமறைக் கலாமன்றத்தினரால் அவலங்கள் எனும் உணர்வினை ஏற்படுத்தக்கூடிய சிறப்பு நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வுகளை வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி பி. யேசுராஜா அடிகளார் தலைமைதாங்கி நிறைவேற்றி வைத்தார்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

## விறு விறுப்புத் தொடர் 12

எழுத்துருவாக்கம்
சொல்லின் செல்வர்
அமுது

### இந்திராவின் இதயத்தில் இனித்த செபம்

இறைவனே,
என்னை உமது அமைதியின் கருவியாக ஆக்கியருளும். வெறுப்புள்ள இடத்தில் நான் அன்பை விதைப்பேன். மனக் காயம் உள்ள இடத்தில் மன்னிப்பையும், சந்தேகம் உள்ள இடத்தில் உறுதியையும், ஏமாற்றம் உள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், கவலை உள்ள இடத்தில் ஆனந்தத்தையும். நான் பரப்ப அருள் தாரும்.

தெய்வீக குருவே,
நான் ஆறுதலைத் தேடாமல் மற்றோர்க்கு ஆறுதலையும் நான் மற்றோரால் புரிந்துகொள்ளப்படுவதை விட்டு நான் மற்றோரைப் புரிந்துகொள்ளவும், பிறரின் அன்பை எதிர்பாராமல் நான், பிறரில் அன்பு காட்டவும் அருள்புரியும்.

ஏனெனில் கொடுப்பதால்தான் பெற்றுக்கொள்கிறோம், மன்னிப்பதால்தான் மன்னிப்பை அடைகிறோம். மரணிப்பதால் தான் முடிவற்ற வாழ்வுக்குப் பிறக்கிறோம்.

- பிரான்சீஸ் அசிசியார்

இந்த செபத்தை அந்த நூலின் முதலாம் பக்கத்தில் காணலாம். அந்த நூலை எழுதியவர் ஒரு சிறந்த எழுத்தாளர். நூலின் பெயர் "அன்னை திரேசாவும் அவருடைய பணிகளும்" நூலாசிரியர் டெஸ்மன் டேயிக் - (Desmond Doig) சந்தனம், பன்னீரின் நறுமணம் கொண்டவை அவருடைய எழுத்துக்கள். வெண்ணிலாவின் தண்ணொளி அவர் பேனா நுனியில் நுரை தள்ளும். ஆனந்த நகரம என்னும் கல்கத்தாவுக்கு அவரும் அவருடன் சில நண்பர்களும் படப்பிடிப்பாளரும் வந்தனர். பல காலம் அன்னை திரேசாவுடன் பழகி, அன்புப் பணியாளர் சபையின் பணிகளைக் கண்டு. பரவசம் அடைந்து கல்கத்தாவில் வெளிவரும் மிகவும் சிறப்பு வாய்ந்த (The Statesman) என்ற பத்திரிகைக்கு அன்னையின் தொண்டுகளையிட்டு எழுதினார்.

பின்னர் நூலை வெளியிட எண்ணினார். அதனை அறிந்த அன்னை அவர்கள். "என்னைப் பற்றி எழுதுவதை நான் விரும்பவில்லை. எனது சபையையிட்டும் அதன் பணிகளையிட்டும் உண்மைகளை எழுதலாம்" என்று கேட்டுக்கொண்டார். கேட்டவாறு "அன்னை திரேசாவின் பணிகள்" என்ற நூல் வெளிவந்தது. அன்னையைப் பற்றி வெளிவந்த முதலாவது நூல் அது. அந்த நூலுக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அணிந்துரை எழுதினார்.

#### அணிந்துரை

அடியார் பிரான்சீஸ் அசிசி அவர்களுடைய அழகான மனித அன்பு வழியும் செபத்துடன் இந்நூல் ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமானது. ஏனெனில் கருணை, அன்பு, இரக்கம் என்பவற்றை கதிர்வீசிப் பரம்புகின்ற அன்னை திரேசா என்ற மென்மையான உருவத்தினைச் சொல்லாற்றலுடன் இச்செபம் சுருக்கிக் காட்டுகின்றது. இந்தப் பரந்த உலகில் வேறு யார் கைவிடப்பட்டவர்களுக்கும், அவசிய தேவை உள்ளவர்களுக்கும் அன்பு, பாசத்துடனும், இலகுவாகவும் ஆற்றலுடனும் உதவி செய்யக் கைநீட்டுகின்றார்?

கவிஞர் தாகூர் குறிப்பிடுவது போல –
"அந்தக் காலடிகளில் ஏழைகளில் ஏழைகளும், தாழ்ந்த மட்டத்தில் உள்ளோரும் கைவிடப் பட்டோரும் ஆறுதலடைகின்றார்கள்."



அன்னை திரேசாவை அவ்விடத்திலேதான் காண்கிறோம்.
நிறம், சாதி, மொழி, நாடு என்ற வேறுபாடுகள் அவருடைய சிந்தனையில் கடுகு அளவு கூடக் கிடையாது.
செபமே பற்று, செபமே சேவை என்ற உண்மைக்குச் சாட்சியாக வாழ்கிறார். சேவைதான் அவருடைய இலக்கு. அவருடைய சமயம். அவருடைய மீட்பு, அவரைச் சந்திக்கும்போது பணிவின் முழு வடிவத்தையும் காண்கிறோம். இரக்கத்தையும், மென்மையையும், அதன் வல்லமையையும் உணருகிறோம். அன்பின் ஆற்றலை அறிகின்றோம்'

- இந்திரா காந்தி –

இந்தியப் பிரதமர் இந்திரா - இந்தியாவுக்கு ஒப்பிடப்பெற்றவர் இந்தியாவே இந்திரா என்றனர். அறிவு – ஆற்றல் - தாய்மை – என்பவற்றின் இமயம். பிரதமர் அன்னை திரேசாவைப் பற்றிய தன் கருத்தை மேலே குறிப்பிட்ட சொற் சித்திரங்கள் மூலம் காய்ச்சல் கம்பிபோல் அளந்து சொல்கின்றனர். அசிசியார் செபத்தில், இந்திரா அம்மையாரின் சுவை எழுத்துக்களில் தெறிக்கிறது.

இச்செபத்தையே நாள்தோறும் காலையில் கோயில் தளத்தில் அன்புப் பணியாளர் முதலாவது செபமாகச் சொல்லி அன்புச் சேவையின் பல்லவியை வாழ்வு வீணையில் மீட்டுகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு அந்த நூல் வெளிவந்து பாராட்டுப்பெற்றது. இதய நரம்புகளை இழுத்துப் பிடிக்கின்ற பளபளப்பான எழுத்தோவியம் என்று அதனைப் போற்றி இருக்கின்றனர். ஆனால் இந்த நூல் என்ற மகுடத்தில் இந்திரா அம்மையாரைக் கவர்ந்த இரத்தினக் கல்லு அசிசி அடிகளாருடைய வேண்டுதலே!

கீழ் வட்டத் தெருவில் அன்னையின் ஆச்சிரமம் உள்ளது. அங்கு ஒரு மரத்தின் கீழே கன்னி மரியாள் குழந்தை இயேசுவைக் கையில் வைத்திருக்கும் ஓவியம் ஒன்றைக் காணலாம். அதைப் பார்க்கும் கன்னியர்கள் ஆச்சரியப் படுவார்கள். நான் நீண்ட காலத்துக்கு முன்பு கல்கத்தாவில் சமுதாயப் பணி புரியும் ஒரு பெண்ணுடன் பக்கத்திலிருந்து உரையாடியபோது. "உங்களுக்கு அன்னை திரேசாவைத் தெரியுமா?" எனக் கேட்டேன். அதற்குப் பெண்மணி ஆச்சரியத்தோடு கண்களை அகல விரித்து "திரேசா புனிதர்கள் வரிசையில் உள்ள தூய்மையான பெண்மணி' என்றார். இவ்வாறு அந்த நூல் முற்றுப்பெறுகிறது.

(கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்கு தெரியுமா?

### மாணவர் மறையறிவுப் பகுதி இல.20

மூன்று நற்செய்தியாளர்களைப் பற்றியும் அவர்களின் நற்செய்திபற்றியும் ஏலவே நாம் ஆராய்ந்துவிட்டோம். இம்முறை நாம் யோவானைப் பற்றிப் பார்க்கப் போகின்றோம்.

இவர்தான் இரவுணவின்போது யேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர். இயேசுவின் அன்புச் சீடர் என அழைக்கப்பட்டவர். இயேசுவின் மரணத்தின்போது துணிவாக இயேசுவின் சிலுவையடியில் நின்றவர். (மற்றைய சீடர்கள் பயந்து ஓடிவிட்டனர்) அதனால் இயேசுவின் அன்னையை தாயாகப் பெற்றவர். அவர் வழியாகவே தேவதாய் நமது தாயானாள்.

இவர் இயேசுவால் அதிகமாக அன்புசெய்யப்பட்டவர் என்பது மட்டுமல்ல இயேசுவை அதிகம் அன்புசெய்தவர். இனி நமது வினாக்களுக்கு வருவோம்.

#### வினாக்கள்

1. யோவான் யாருடைய மகன்?
2. இவரை நாம் முன்பு எப்படி அழைத்தோம்?
3. இந்நூல் எழுதப்பட்ட நோக்கம் என்ன என்று இந் நற்செய்தி கூறுகின்றது?
4. இவரின் நற்செய்தி எந்த மொழியில் எழுதப்பட்டது?
5. எங்கு எழுதப்பட்டது
6. எப்போது எழுதப்பட்டது?
7. யோவான் நற்செய்தி எத்தனை அதிகாரங்கள் கொண்டவை?
8. இயேசு "நீ யோனாவின் மகன் சீமோன் இனி கேபா என அழைக்கப்படுவாய்" என்றார். கேபா என்பதன் பொருள் என்ன?
9. தொடக்கத்தில் வாக்கு இருந்தது எனத் தமது நற்செய்தியை ஆரம்பிக்கும் யோவான் 1ம் அத்தியாயத்தில் நிரூபிக்க விரும்புவது என்ன?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 18 இற்கான கேள்விக்கு 39 பேர் விடையளித்திருந்தனர்.

அவர்களுள் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடையளித்து பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்ட அதிஸ்ரசாலி

**ஜீ. றஜீவன்**
**பண்ணை வீதி,**
**கரம்பொன் கிழக்கு,**
**ஊர்காவற்றுறை.**

#### பாராட்டுக்குரியவர்கள்

1. அ. ஜெசிந்தா, புளியங்குளம், அடம்பன்.
2. செ. பிரமிளா மேரி, கந்தசேனை, நமுனுகுல.
3. தி. வெனிக்கலா மேரி, காகெல்ல, அப்புத்தளை.
4. பீ. மரிய நிலக்ஷி, 10, தியோகு வீதி, யாழ்ப்பாணம்.
5. ம. சாலினி, சூரிய கட்டைக்காடு.

#### *மாணவர் மறையறிவுப் பகுதி இல. 18 இற்கான சரியான விடைகள்*

1. சிரியா நாட்டு அந்தியோக்கியா நகரைச் சேர்ந்தவர்.
2. மனம் திரும்பிய புற இனக் கிறீஸ்தவர்களுக்காக.
3. கிரேக்க மொழியில்.
4. வரலாற்றுப் பின்னணியுடன் எழுதப்பட்டுள்ளது.
5. புனித யோவானின் பிறப்பைப்பற்றி அறிவிப்பதுடன் ஆரம்பமாகின்றது.
6. கிறீஸ்துவின் விண்ணேற்போடு.
7. கி.பி. 70ம் ஆண்டில்.
8. திருத்தூதர் பணி.
9. புனித பவுலுடன் இணைந்து பணியாற்றியமை.
10. 24.

*இப்போட்டி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை, கருத்துக்களை, ஆலோசனைகளை எமக்கு எழுதுங்கள்.* *(பதிப்பாசிரியர்)*

## மருத்துவப் பொழிவு

# அச்சப்படாதவர்களுக்கு அல்சர் இல்லை



ஸ்ரீமதிக்கு வயிற்றில் முடிச்சு முடிச்சாக விழுவது போன்ற உணர்வு. வயிறு விட்டுவிட்டு வலிக்க ஆரம்பித்தது. ஏதாவது கேட்டால் எரிந்து எரிந்து விழுந்தாள். சிலவேளைகளில் கைக்குக் கிடைத்ததைத் தூக்கிப் போட்டு உடைத்தாள். எதைப் பார்த்தாலும் பயந்து நடுங்குபவள், சாதுவாக இருந்தவள் இப்படி முரட்டுத்தனமாக நடந்து கொள்வதைப் பார்த்து பெற்றோர் பயந்துவிட்டார்கள்.

கட்டாயப்படுத்தி ஸ்ரீமதியை டாக்டரிடம் அழைத்துப்போனார்கள். டாக்டர் அவளது வயிற்றுப் பகுதியை எக்ஸ் - ரே எடுத்துப் பார்த்தார். "பயப்படாதீங்க. ஸ்ரீமதிக்கு வயிற்றில் அல்சர் வந்திருக்கு" என்று சொல்லிவிட்டு, மருந்து மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். திரும்பவும் இரண்டு மூன்று வாரங்களில் வலி முன்பைவிட அதிகமானது. மீண்டும் அதே மனநிலைக்கு ஸ்ரீமதி வந்துவிட்டாள். எரிச்சல், கோபம், ஆத்திரம் என்று நடந்துகொண்டதால் மீண்டும் டாக்டரிடம் போனார்கள். இம்முறை அவர் ஒரு மனநல மருத்துவரின் உதவியுடன் ஸ்ரீமதியைப் பரிசோதித்தார். பரிசோதனையின் முடிவில் மருத்துவர் சில உண்மைகளைச் சொன்னார். "ஸ்ரீமதிக்கு வயிற்றில் பிரச்சினை என்றதும் எக்ஸ் - ரே எடுத்துப் பார்த்ததில் அவரது ஜீரண மண்டலத்தை மட்டுமே அது படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. அல்சர் இருப்பதை உறுதிசெய்தது. அதற்கு மட்டுமே மருந்து கொடுத்திருக்கிறார் டாக்டர். ஆனால் குடல் புண் உருவாகக் காரணமான அச்சப்படும் மன நோயை அவர் கவனிக்கவில்லை. அதற்கு சரியான வைத்தியம் கிடைக்காததால்தான் ஸ்ரீமதிக்குத் திரும்ப திரும்ப அல்சர் வந்து கஸ்ரப்படுத்தியிருக்கிறது"

ஸ்ரீமதிக்கு அல்சர் வர மிக முக்கிய காரணம் அவரது அச்சம்தான். அதை அவர் வெளியில் காட்டாமல் அடக்கி அடக்கி வைத்ததால், அவரது ஜீரண மண்டலங்கள் பாதிக்கப்பட்டு, அதன் முற்றிய நிலையாக குடலில் புண்கள் ஏற்பட்டு அவரைத் தாறுமாறாக நடக்க வைத்திருக்கிறது.

### அச்சமும் அல்சரும்

ஒருவருடைய குடல் அமைப்புத்தான் அவருடைய முழு உடல் நிலையையும் பிரதிபலிக்கின்றது. வயிறு மந்தமானால் மனித உணர்வுகள் பாதிக்கப்படுவதை பலர் உணர்ந்திருக்கக்கூடும். மனிதனுக்குள் எழும் உணர்வுகள் தான் ஒவ்வொரு நோய்க்கும் பின்னணியில் இருக்கின்றன. அந்த வகையில் குடல் புண்ணுக்குக் காரணம் அதிகக் கவலையும் அச்சமும்தான் என்கிறார்கள். அதிகப் பொறுப்புகளை வகிக்கும் ஒருவருக்குக் கவலையும் அதிக நெருக்கடியும் தொடர்ந்து இருக்குமானால் அவருக்கு அல்சர் வர அதிக வாய்ப்புகள் உண்டு என்கிறார்கள்.

### அச்சத்தால் வரும் அல்சர் அறிகுறிகள்

சிறு குழந்தைகள்போல் நடந்துகொள்வார்கள். சிலர் முதிர்ச்சியடைந்தவராகப் பேசுவார்கள். கொஞ்சம் பேர் முரட்டுத் தனமாக நடந்துகொள்வார்கள். அதே சமயம் அதீத சுறுசுறுப்பு உள்ளவர்களாகவும் சிலர் நடந்துகொள்ளக்கூடும்.

தன்னையே எல்லோரும் கவனிக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பார்கள். தன்னைவிட மற்றவர்களைக் கவனிப்பதை விரும்பமாட்டார்கள். தனக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதில் கவனம் செலுத்துவார்கள். இவர்களுக்கு எல்லாமே சரியாக நடக்க வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் கோபம் தலைக்கு ஏறும். ஆத்திரத்தில் [illegible]தையாவது தூக்கி எதிராளி மேல் வீசிவிடுவார்கள்.

சிலர் பலவீனமாக இருப்பார்கள். பயந்து பயந்து சாவார்கள். ஆனால் இவை எதையும் வெளியில் காட்டிக் கொள்ள விரும்பாமல் நடிப்பார்கள். அந்த நடிப்பே அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும்.


### அல்சரிலிருந்து விடுபட வழிகள்

1. தேவையில்லாததற்கெல்லாம் அச்சப்படவோ, பயப்படவோ கூடாது. மிதமிஞ்சிய அச்சம் எழும்போது சம்பந்தப்பட்டவருடன் மனம்விட்டுப் பேசினால் அச்சத்தின் அளவு குறையும். அச்சப்படாதவர்களுக்கு அல்சர் இல்லை.
2. அடிக்கடி கோபப்படுபவர்களின் இரத்தத்தில் ஹார்மோன் அதிகம் கலந்து ரசாயன மாற்றம் நிகழும். இதனால் உடல் நச்சுத் தன்மையை அடைந்து குடல் சார்ந்த நோய்கள் வரக்கூடும். கோபமும் அச்ச உணர்வுகளும்தான் வயிற்றுக் கடுப்பு போன்ற பல கோளாறுகள் வரக்காரணம் என்கிறார்கள்.
3. ஒருவருக்கு வாந்தியோ, பேதியோ, தும்மலோ வந்தால் அவர் வெறுக்கும் எதோ ஒரு விஷயம் அவர் மனதிற்குள் போய்விட்டது என்று பொருள். அதை இனம் கண்டு அவற்றைத் தவிர்த்தாலே குடல் சம்பந்தப்பட்ட பல நோய்களில் இருந்து தற்காத்துக் கொள்ள முடியும்.
4. குடல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு யோகா சிறந்த சிகிச்சை என்கிறார்கள். முறையான யோகா பயிற்சியால் அச்சம் மனதைவிட்டும் உடலைவிட்டும் வெளியேறும்.
5. அல்சர் வந்தவர்களை குடும்பத்தார்தான் முதல் மருத்துவராக இருந்து பாதுகாக்க வேண்டும். அச்சத்தால் அல்சர் வந்தவர்கள் ஒரு குழந்தையைப் போல நடந்து கொள்வார்கள். அவர்களை அந்தப் போக்கிலேயே விட்டு, அவர்கள் மனநிறைவு கொள்ளும் வகையில் பேச வேண்டும். அவர்கள் கோபப்படும் போதும் முரட்டுத்தனமாக நடந்துகொள்ள முயலும்போதும், அவர்களை எதிரியாக பாவிக்கும் தன்மையை விட்டு, பொறுமை காத்து உண்மையை எடுத்துச் சொல்லி சமாதானப்படுத்த வேண்டும்.
6. மகிழ்ச்சியான குடும்ப சூழலில் வாழ்பவர்களுக்கு அல்சர் போன்ற நோய்கள் வராது என்கிறார்கள். பிக்னிக், விளையாட்டு, பொழுது போக்கு நிகழ்ச்சிகள், உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்ள வைத்தல் என்று குடும்பத்தைச் சந்தோஷ சூழலில் வைத்திருந்தால், குடும்பமே நமக்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்ற நம்பிக்கையில் அச்சம் போன்ற உணர்வுகள் எழாது. அதனால் அல்சர் அண்டாது.
7. மனநிலைக்கு ஏற்றபடிதான் உணவுகளை நம் உடல் ஏற்கும். வேண்டாததை வம்பாக திணித்தால் கேடு நிச்சயம். மனம் வெறுக்கும் எந்த உணவையும் யார் கட்டாயத்திற்காகவும் உண்ணக்கூடாது. எளிதில் ஜீரணமாகும் எளிய உணவுகள் அல்சர் வராமல் உதவும் என்பது யாருக்கும் தெரிந்த உண்மை.
8. அல்சர் வந்தவர்கள் மனநல மருத்துவர்களின் ஆலோசனைகளையும் கேட்பது நல்லது. நம் ஜீரணமண்டலங்கள் உடல் - மனோ நிலை சம்பந்தப்பட்டது என்பதால், உடல் நோய்க்கு மட்டும் மருந்து எடுத்துக்கொண்டு மன நோய்க்கு சிகிச்சை இல்லாமல் போகும்போது, அல்சர் போன்ற நோய்கள் நிரந்தரமாக தங்கி விடுவதற்கு சாத்தியம் உள்ளது.


# திருத்தந்தையின் பிரதிநிதி மன்னார் வருகை

## நெஞ்சில் நிழலாடும் நினைவுப் பதிவுகள்

## 04. 12. 2004



மன்னார் நகரில் பாப்பரசரின் பிரதிநிதியை மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை வரவேற்கின்றார்.




மன்னார் நகரில் பாப்பரசரின் பிரதிநிதியை மன்னார் அரசாங்க அதிபர் திரு. விஸ்வலிங்கம் வரவேற்கின்றார்.



தள்ளாடி சந்தியில் இருந்து மன்னார் நகரை நோக்கி மோட்டார் பவனியாக அழைத்து வரப்படுகின்றார்.








மன்னார் நகரில் பாப்பரசரின் பிரதிநிதி மன்னார் ஆயர் சகிதம் குருக்கள்,பொதுமக்கள் புடைசூழ அழைத்து வரப்படுகின்றார்.







மன்னார் நகரில் பாப்பரசரின் பிரதிநிதி மன்னார் ஆயர் சகிதம் திறந்த வாகனத்தில் அழைத்து வரப்படுகின்றார்.










புனித செபஸ்ரியார் பேராலய வளாகத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் தேவராஜா அடிகளார் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்.



மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய வளாகத்தில் பாப்பரசரின் பிரதிநிதி நற்கருணை ஆசீர் வழங்குகிறார்



பாப்பரசரின் பிரதிநிதி மன்னார் மறைமாவட்ட குருக்கள் துறவிகளோடு உரையாடுகின்றார்.

# பெரியப்பா பதில்கள்

கே. சுனாமி அலையின் தாக்கம் பற்றி.....?

*- ஆ. தர்சன், மன்னார்.*

ப. கடற்கோளின் கோரத்தாண்டவம் கண்களில் நீரை வருவிக்கின்றது. கடற்கரையிலே பிறந்து கடலோடு வளர்ந்து கடலோடு ஒட்டி உறவாடிய கரையோர மக்களுக்கு கடல் இப்படி மோசம் செய்து விட்டதே என்பதை நினைக்கும்போது வயிறு பற்றி எரிகிறது.

கே. பெரியப்பா, நான் திருமணமாகி 40 வருடங்கள். இன்னும் என் மனைவிமீதுள்ள அன்பும் பாசமும் குறையவே இல்லையே?

*முருகானந்தம், முள்ளியவளை.*



ப. சந்தோசம். இந்த ‘நற்செய்தி’ உங்கள் மனைவிக்குத் தெரியுமா?

கே. பெரியப்பா, மதங்கள் தோன்றியது எதற்காக?

நி. சின்னராசு, வவுனியா.

ப. நீங்களும் நானும் திருந்த வேண்டும் என்பதற்காக!

கே. பெரியப்பா உங்களிடம் ஒரு குறுக்கு விசாரணை. வாழ்க்கையிலே என்ன செய்தாலும் முன்னேற முடியவில்லையே?

*- சுதாகரன், செட்டிகுளம்.*

ப. மனமிருந்தால் மார்க்கமுண்டு.

கே. சிந்திக்க ஒரு தத்துவம் சொல்வீர்களா?

*- அழகக்கோன், அநுராதபுரம்.*

ப. நாம் எவ்வளவு அறியாமையில் இருந்தோம் என்பதை நமக்கு அளந்து கொடுக்கிற கருவிதான் ‘அறிவு’

கே. தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் பார்ப்பீர்களா?

*அ. கௌரி, கட்டையடம்பன்.*



ப. சும்மா இருங்க. மூச்சு விடவே நேரமில்லை. அதற்குள் மூக்கைச் சிந்த (அதாவது தொடரைப் பார்த்து அழ) எங்கே நேரம்?

கே. பெரியப்பா அவர்களே, திருச்சபை நியமித்த விக்கினங்கள் என்றால் என்ன?

*பா. றெஜிஸ், சூரிய கட்டைக்காடு.*

ப. மற்றவர்கள் பதில் சொல்லக்கூடிய இது மாதிரியான கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்வதில்லை. எந்த ஒரு பங்குத்தந்தையும் இதற்குப் பதில் சொல்வார். கேட்டுப் பாருங்கள்.

கே. நீங்கள் பாடசாலையில் பரீட்சையின்போது கேள்விகளுக்கு பதில் எழுதியதற்கும் இப்போது வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் எழுதுவதற்கும் என்ன வித்தியாசம்?

*- மோகன்றாஜ், வவுனியா.*



ப. பரீட்சையில் ஏறுக்கு மாறாக பதில் எழுதினால் சைவர் போடுவார்கள். ஆனால் வாசகர்களின் கேள்விகளுக்கு அப்படி பதில் எழுதினால் வாசகர்கள் ரசிக்கிறார்கள் - சிரிக்கிறார்கள்.

கே. பெரியப்பா, இல்லற வாழ்வில் புனித வாழ்வு வாழ முடியுமா?

*- ஆ. பேள்சினி, வெளிக்குளம், வவுனியா.*

ப. ஏன் முடியாது? இல்லறவாசிகள் பலர் புனிதர்களாக இருக்கிறார்களே! புனிதத்துவம் என்பது ஒரு சிலருக்குத்தான் என்ற குறுகிய மனப்பான்மையிலிருந்து நாம் விடுபடவேண்டும்.
அன்னை திரேசாவைப்பற்றி உயர்ந்த நல்லெண்ணம் உடையவர்கள் அவரிடம் பலமுறை ஒரே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.
ஒரு பத்திரிகை நிருபரும் திருப்பிக் கேட்டார். “உங்களை வாழ்ந்து வரும் புனிதர் என்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”
“என்னிலே நீங்கள் யேசுவைக் கண்டால் உண்மையில் நான் சந்தோசப்படுவேன். ஏனெனில் உங்களில் நான் அவரைக் காண்கிறேன். புனிதத்துவம் ஒரு சிலருக்கே சொந்தமானதன்று. அது எல்லோருக்கும் உரியது. ஐயா அது உமக்கும் பொருந்தும்” என்றார் அன்னை திரேசா.

கே. யேசு தமது பணிக்கு பாமர மக்களையும் பாவிகளையும் தெரிந்தார். ஆனால் இன்று பணிக்காக பரிசுத்தமானவர்களை எதிர்பார்ப்பது நியாயமானதா?

*- எஸ். சோனா, சின்னக்கடை, மன்னார்.*

ப. பணிக்கு பரிசுத்தமானவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்பது தவறு. பணியில் உள்ளவர்கள் பரிசுத்தமானவர்கள் என்றும் அர்த்தமல்ல. ஆனால் .... வெளிப்படையான துன்மாதிரிகை இல்லாதவர்களாக... தமது அழைப்பின் குறிக்கோளில் உறுதி உடையவராக..... இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். இது நியாயமானதுதானே.
புனித பவுல் அடியாரும் ஒரு பணியாளர் எப்படியானவராக இருக்க வேண்டும் என்பது குறித்து தீத்து மற்றும் திமொத்தேயுவுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிடுகின்றார்.
எடுத்துப் படித்துப் பாருங்கள்.

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவு




மலர்வு 10 - 02 - 1946

உதிர்வு 06 - 02 - 2003

**திருச்செல்வம் தாவீது**
**(முருங்கன் கமம், முருங்கன்)**

ஆறாத வேதனையில் எம்மை
ஆழ்த்திவிட்டு - நீங்கள்
அமைதியாய் துயில் கொண்டு
வாழ்வதென்ன?
ஆண்டுகள் இரண்டான
போதும் தந்தையே - உங்கள்
அன்பையே தினமும்
ஆண்டவனிடம் ஆசிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி பெறவும்
ஆண்டவர்தாழ் பணிகின்றோம்.
என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்
*குடும்பத்தினர்.*
*முருங்கன் கமம், முருங்கன்.*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 03 - 1909

உதிர்வு 20 - 01 - 2004

**திருமதி.மேரி அருளம்மா முருகுப்பிள்ளை**
**(மன்னார்)**

அருளம்மா! அன்புதான் அருளம்மா! கடவுளன்பும் கண்டிப்பும் கலந்த கலவையம்மா வெண்ணாடை உடுத்தி வெள்ளை அப்பத்தில் யேசுவை எதிர்நோக்கி காத்திருப்பது எம் நெஞ்சை விட்டு அகலவில்லை. அம்மா சின்னாச்சி என்று வரும் போதெல்லாம் நீங்கள் தரும் இனிப்பு எங்கள் நாவை விட்டு நீங்கவில்லை இறைவனோடு இறைபுகழ் பாடி துதிக்கும் உங்களை நன்றியோடு நினைக்கின்றோம்.

*உங்கள்*
*பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்*
*கிறிஸ்ரினி பெனடிற்.*

## 6ம் மாத நினைவு



மலர்வு 20 - 01 - 1947

உதிர்வு 18 - 07 - 2004

**ப. அந்தோனிப்பிள்ளை**
**(இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்)**

[K U q f d ]

அன்பின் திரு உருவே ஐயா, உங்கள் அன்பையெல்லாம் பண்பாய் எமக்கு ஊட்டி பாசமுடன் எம் பசி போக்க உம் உடல் உருக்கி உள்ளத்தை மெழுகாக்கி வளர்த்த தந்தையே! நெடுநாள் வாழ்வீர் என நினைத்திருந்தோம். இடைவழியில் எம்மைத் தவிக்க விட்டு உம் பணி முடித்து தந்தை வீடு சென்று விட்டீர். தவிக்கின்றோம் இவ்வுலகில் நாம், தவறாது நல்வழி நடக்க தனித்துவமாய் உதவிடுவீர். உங்கள் ஆன்மா அமைதி பெற வேண்டுகின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.*

## 15ம் ஆண்டு நினைவு



மலர்வு 24 - 12 - 1971

உதிர்வு 02 - 01 - 1990

**செல்வி றொ. ஜெயந்தி**
**(பெரிய பண்டிவிரிச்சான்)**

இல்லத்தின் ஒளிவிளக்காய் அனைவருக்கும் இனியவளாய் ஆண்டவன் அருளாலே ஆண்டு பத்தொன்பது இம்மண்ணில் அனைவருக்கும் பாசச்சுடராய் வாழ்ந்தாயே, ஆண்டு பதினைந்து வந்தாலும் உம் நினைவும், மலர்ந்த உள்ளமும் எம்மை விட்டு அகலவில்லை. பாரெங்கும் தேடி கண்ணீர் சிந்துகின்றோம். இறைவா நீ தந்தாய் நீ எடுத்தாய் உன் நாமம் என்றும் போற்றும் வரத்தை எம் அருமை செல்விக்கு அளித்திட வேண்டி உம் பாதம் சரணடைகின்றோம்.

*பெற்றார், சகோதரர், பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோயில்*

## 4ம் ஆண்டு நினைவு



மலர்வு 02 - 10 - 1937

உதிர்வு 27 - 01 - 2001

**திருமதி ஞானம் ஆரோக்கியம்**

அம்மா எங்களின் அன்புத் தெய்வமே, நீங்கள் உங்களையே அர்ப்பணித்து வளர்த்த பலன் எங்களை தலைநிமிர்ந்து வாழ வைக்குதம்மா, உடலால் பிரிந்து நாலு ஆண்டுகள் ஆனாலும் எங்கள் இதயத்தில் உங்களை நாம் என்றுமே அழியாமல் காக்கின்றோம். நீங்கள் இறைவனோடு இருக்கின்றீர்கள் அம்மா.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன் பிள்ளைகள்,
மருமக்கள், உற்றார், உறவினர்
(தகவல்
- ஆ. றொபேட் யேசுதாசன்,
ஜேர்மனி)


**மன்னா**

சந்தாதாரர்களே
உங்கள் சந்தாக் காலம்
முடிவடையும் மாதம்
உங்களுக்கு தபால் மூலம்
அனுப்பப்படும் மன்னாவில்
உங்கள் முகவரிக்குக்
கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.
அதைப்பார்த்து உங்கள்
சந்தாவை உரிய
காலத்தில்
புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா**

தனிப்பிரதிகளுக்கான
ஆண்டுச்சந்தா
உள்நாடு - 300 ரூபா
வெளிநாடு - 15 யூரோ


# நீங்காத நினைவுகள்

## 14ம் ஆண்டு நினைவு



மலர்வு 29 - 08 - 1924

உதிர்வு 11 - 01 - 1991



# நீங்காத நினைவுகள்

## 6ம் மாத நினைவு



மலர்வு 09 - 04 - 1928

உதிர்வு 21 - 07 - 2004

**திரு. சந்தான் பாவிலு (புலவர்)**
**(முருங்கன்)**

**திருமதி பா. சந்தாக் குட்டி**
**(முருங்கன்)**

ஆண்டவரைப் பற்றிய நல்லறிவை அன்போடு ஊட்டிய தெய்வங்களே
தாண்ட முடியவில்லை எம் துன்பத்தை தவிக்கின்றோம் உம் பிள்ளைகள் இத்தரணியில்
வறுமையின் பிடியில் நாம் வாடினாலும் உம் வற்றாத அன்பை நாம் மறப்போமா?
சிறுமைகள் எம்மை அணுகாமல் சிறப்போடு எம்மை வளர்த்தீரே
தளராத மனதோடு இறுதிவரை நீர் தயங்காமல் பணிகளைச் செய்தீரே
பின்தூங்கி முன்னெழுந்து எங்களை பேணியே வளர்த்திட்ட பெருந்தகையே
சான்றோர்கள் வரிசையில் நாம் இருக்க நீர் சத்திய வழிகளைச் சொல்லித்தந்தீர்.
அன்பிற்கு இலக்கணமானவரே ஆண்டவர் அருகில் அமைதி கொள்ளுங்கள்

பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள். தகவல் - பா. ஆசீர்வாதம் செல்லத்துரை (மூத்த மகன்)

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல. 33
## விடுதலைப் பயணம் 1 - 13

உங்கள் விடைகளை 10. 02. 2005 க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | 02 | | | | 03 |
| 04 | | | | | | | 05 | * | | 06 |
| | | | | | 07 | | 08 | | | |
| * | 09 | | | | | | | | | |
| 10 | | 11 | | | | | | | 12 | |
| | | | | * | 13 | | | 14 | | |
| | | | | * | | | 15 | | | |
| | | * | 16 | | | | 17 | | | |
| | 18 | | | * | | | | | | |
| | 19 | | | | | | | | | |
| 20 | | | | | 21 | 22 | | | | 23 |

### இடமிருந்து வலம்
1. பார்வோன் தன் ………………… சூனியக்காரரையும் வரவழைத்தான்.
4. ஏனெனில் நீ என் மக்களை அனுப்பிவிட மறுத்தால் நாளைய தினமே உன் எல்லைகளுக்குள் ……………கள் வரச்செய்வேன்.
8. ஏனெனில் …………………… இல்லாத வீடு எதுவுமே இல்லை.
9. இவ்வாறு எகிப்தியரை இவர்கள் ……………
10. நீங்கள் புளித்த …………… உண்ணலாகாது.
18. இது உன் ………………………… அடையாளமாகவும் உன் கண்களுக்கிடையில் சீட்டுப் பட்டமாகவும் அமையட்டும்.
19. பாலைநிலத்தில் மூன்று நாள் வழிப்பயணம் செய்து எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலியிடுமாறு எங்களை நீர் …………………
20. …………………… கையாலும் மாபெரும் தண்டனைத் தீர்ப்புக்களாலும் நான் உங்களுக்கு மீட்பளிப்பேன்.

### மேலிருந்து கீழ்
2. உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு நீங்கள் பாலைநிலத்தில் …………… நான் உங்களைப் போகவிடுவேன்.
6. இந்த விழா உங்களுக்கு நிலையான ……………… இருப்பதாக.
10. தலைப்பேறு அனைத்தையும் எனக்கு ……………… செய்
11. இதோ இஸ்ராயேல் மக்களினம் நம்மைவிடப் பெருந்தொகையதாயும் ஆள் …………………… வாய்ந்ததாயும் உள்ளது.
12. ………………… அப்ப விழாவை நீங்கள் கொண்டாடி வரவேண்டும்.
13. அதன் மேல் அவள் ………………… கொண்டாள்.
14. மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம் மலையில் கடவுளை ……………….கள்.
17. அவர்கள் …………………… அடிமைப்படுத்துவதிலிருந்து விடுவிப்பேன்.

### வலமிருந்து இடம்
3. என் கையிலுள்ள கோலால் நானே ……………… நீரை அடிப்பேன்.
7. எகிப்து நாட்டில் என் ……………….கள் பெருகிட இது ஏதுவாகும்.
12. ஏழு நாள்களாக உங்கள் வீடுகளில் ……………… காணப்படவே கூடாது.
14. ஏனெனில் அவர்கள் ……………… கொண்டவர்கள்.
15. நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன் என்று ……………… அவள் அவனுக்கு மோசே என்று பெயரிட்டாள்.
17. நீ பேச வேண்டியதை ………………..க் கற்பிப்பேன்.
21. ஆனால் ஆரோனின் ………………….. அவர்கள் கோல்களை விழுங்கி விட்டது.
23. ஆனால் அம் முட் ……………….. தீய்ந்து போகவில்லை.

### கீழிருந்து மேல்
5. அதில் எதையுமே விடியற்காலை வரை …………… வைக்க வேண்டாம்.
12. இதுவரை இருந்திராததும் இனி இருக்கப்போகாததுமான பெரும் …………… எகிப்து நாடெங்கும் கேட்கும்.
15. உனக்குக் ………………. கொடுப்பேன் என்றாள்.
16. அவனுக்காகக் கோரைப் ………………….. பேழை ஒன்று செய்து அதன் மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள். (இறுதி எழுத்து முதல் எழுத்தின் முன்னே நிற்கிறது)
18. ஆண்டவர் தம் ……………… யால் அடிமை வீடாகிய எகிப்திலிருந்து எம்மை வெளியேறச் செய்தார்.
22. பெரும் தண்டனைத் தீர்ப்புக்களை நிறைவேற்றியபின் என் மக்களாகிய இஸ்ரயேல் என்னும் படைத் ……………… எகிப்து நாட்டிலிருந்து வெளியேறச் செய்வேன்.
23. "ஏனெனில் நீ நின்றுகொண்டிருக்கிற இந்த இடம் ……………… நிலம்" என்றார்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 32ற்கான முடிவுகளை பெப்ரவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## விதவைகளை வாழ வைக்கும்...... வாழ்விழந்தவர்களுக்கு ........

14ம் பக்கத் தொடர்ச்சி

குடும்ப புனர்வாழ்வு நிலைய யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் திரு. சிதம்பரநாதன் அவர்கள் பேசுகையில், இத்திட்டத்திற்கு நாம் கடனாக வழங்கும் ரூபா 8,000/= வங்கியில் இந்தப் பெண்களின் சேமிப்புக் கணக்கில் இடப்படுகின்றது. இவர்கள் இப்பணத்தைப் பெற்று சுயதொழில் மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்வர். மூன்று மாதங்களின்பின் 300/= க்கு குறையாத தொகையினை தொடர்ச்சியாக தமது சேமிப்பில் இடுவர். குறிப்பிட்ட காலப் பகுதியின்பின் இவர்கள் தமது சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்தில் 7,000/= வை இன்னுமொரு விதவைக்கு அளித்தல் வேண்டும். இத்திட்டம் நல்ல முறையில் அமுலாக்கப்பட்டால் முன்பின் தெரியாத விதவைகள் பலர் தமக்கிடையே ஒன்றுபட்டு தன்னம்பிக்கையுடன் வாழும் நிலை ஏற்படும். வழமையாக செயற்படுகின்ற வெளிக்கள அலுவலரின் தலையீடுகள் எதுவும் இன்றி தாமே இத்திட்டத்தை பரவலாக கொண்டுசெல்ல முடியும். நாம் மேற்பார்வைப்பணியை மட்டுமே செய்யலாம். இதற்கு நேர்மையும் வறுமையிலும் செம்மையாக வாழுகின்ற பண்பும் குடும்பத்தை நல்ல முறையில் வளர்த்தெடுக்கின்ற திறனும் தாய்மாருக்கு அவசியம் தேவை எனக் கூறினார்.

அடுத்து மாவட்ட உதவிச் செயளாலர் திருமதி. ஏஸ். மோகநாதன் உரையாற்றுகையில், தாய்மார்களாகிய நீங்கள் நாம் கைவிடப்பட்டுள்ளோம் என்ற உணர்வை உதறித் தள்ளிவிட்டு தன்மான உணர்வுடனும் தன்னம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதுடன் சமுதாயத்தில் விதவைகளுக்கும் ஒரு தனிப்பெருமை உண்டு என்பதையும் நல்லமுறையில் வாழ்ந்து காட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வாழ்வுதய நிறுவனம் சார்பாக நிர்வாக அலுவலர் திரு. அந்தோனிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். வவுனியா குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் (FRC) சார்பில் செல்வி. துக்சாயினி அவர்கள் நன்றி உரை வழங்கினார்.


14ம் பக்கத் தொடர்ச்சி

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக வருகைதந்திருந்த மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் பேசுகையில் இன்றைய சூழலில் இச்சேவையானது மிகவும் முக்கிய சேவையாக உள்ளது என்றும் இப்பணியானது மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்லாது இது பரவலாக்கப்பட்டு ஏனைய மாவட்ட மக்களுக்கும் நடமாடும் சேவை மூலம் உதவுவதோடு பதுளை போன்ற பிரதேசங்களிலும் நடமாடும் சேவை விரைவாக இடம்பெறப்போவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருவாளர் நீக்கிலாப்பிள்ளை அவர்கள் தமது உரையில் வாழ்வுதயமானது இன்று இதுபோன்ற பற்பல பணிகளை ஆற்றிவருகின்றதைப் பற்றி தான் பங்கெடுக்கும் முக்கிய கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூறிவருவதாகக் கூறினார். இக்கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதிவழங்கிய யுனிசேவ் நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் திரு. கனொக் பார்லேஜி அவர்கள் தமது உரையில் வாழ்வுதயம் CTF போன்ற நிறுவனங்களின் பணிகளைப் பாராட்டினார். மிதிவெடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கக்கூடிய வழிவகைகளை மன்னார்ப் பிரதேசத்தில் CTF நிறுவனமும் மிதிவெடிகளுள் அகப்பட்டு கால்களை இழந்தவர்கட்கு செயற்கைக்கால் பொருத்தி அவர்களை நடமாடவைப்பதில் வாழ்வுதயமும் அயராது செயற்படுவதைப் பாராட்டினார்.

வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுராஜா அடிகள் இந்நிகழ்வுக்கு தலைமைதாங்கினார். அருட்தந்தை அவர்கள் தமது உரையில் 2001இன் ஆரம்பப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவின் செயற்பாட்டினால் இன்றுவரை 425 பேருக்கு மேற்பட்டோர் செயற்கைக்கால்களைப் பெற்றுள்ளனர் என்றும் கால்களை இழந்து உளவியல் ரீதியாகவும் பாதிப்படைந்த நிலைமைகளில் வாழ்ந்துகொண்டிருந்த இவர்கள் இன்று புத்துணர்வுடன் சமுதாயத்தில் தோன்றுவதோடு தத்தமது குடும்பங்களைப் பராமரிப்பதிலும் சமுதாயத்திற்கு உதவுவதிலும் ஈடுபட்டு வருவதைச் சுட்டிக்காட்டி, [illegible]து வாழ்வுதய நிறுவனத்திற்கு உறுதுணையாக இருந்துவரும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கும், உதவி செய்யும் SEDEC நிறுவனத்திற்கும், கனேடிய தூதரகம் மற்றும் கொழும்பு கிழக்கு றொட்டரி கழகத்தினர் அனைவருக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன் எனவும் கூறினார்.

## அனைத்துத் தொடர்புகளுக்கும்



The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's St.
Mannar,
Sri Lanka.



பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார்
பேராலய வீதி
மன்னார்

## பெரியப்பா பதில்கள்

பலர் இப்பகுதிக்கு உப்புச் சப்பற்ற கேள்விகளை அனுப்புகின்றார்கள். அப்படி அனுப்பிவிட்டு "ஏன் எனது கேள்வியை பிரசுரிக்கவில்லை?" என முறையிட்டு கடிதங்கள் எழுதுகிறார்கள். உங்கள் கேள்விகள் தரமானதாக – அறிவுத்தேடல் நிரம்பியதாக – நகைச் சுவையாக இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். அப்படி இல்லாத கேள்விகளை பெரியப்பா நிராகரித்துவிடுவார். (பதிப்பாசிரியர்)

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 31ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
றொஷிங்கா, A1, F20,
புளுமென்டோல் தொடர்மாடி,
கொட்டாஞ்சேனை.

*இரண்டாம் பரிசு.*
எஸ். பஸ்ரி றஜித்,
இல.171, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

*மூன்றாம் பரிசு*
தே. ஜெகன் பீரிஸ்,
தலைமன்னார் மேற்கு,
தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 103 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 85 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 31ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

### பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. நமிட்டா பர்னாந்து, 653/3 புளுமென்டோல் வீதி, கொழும்பு-15.
2. பா. மியூளினி, அன்பின் சகோதரிகள் இல்லம், செட்டிகுளம்.
3. பி. சிந்துஜா, அன்புக்கன்னியர் இல்லம், செட்டிகுளம்.
4. திருமதி. பிலிப் பெர்ணடேற், முருங்கன் பிட்டி, முருங்கன்.
5. பீ. ஒகஸ்ரினா, இல.25/1, ராணி மில் வீதி, இறம்பைக்குளம்.
6. ஆ. றதனா, A7 மடுக்கோவில், மடு.
7. கி. தயாலினி டலிமா, திருக்குடும்ப கன்னியர் இல்லம், மன்னார்.
8. அ. லீலா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
9. மு. சசிகலா, கற்கிடந்த குளம், முருங்கன்.
10. க. றோசி சோசை, அக்னேஸ்புரம், 100வீட்டுத்திட்டம், வங்காலை.
11. முருகேஸ் தனமோகன், நெடுங்கண்டல், அடம்பன்.
12. ஆ. லக்ஸனா, A.7, மடுக்கோவில், மடு.
13. நெ. மேரி யோசவின், கடைவீதி,, நானாட்டான்.
14. பா. இருதயநாயகி (றஜி) கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
15. வெ. மேரி தனுஜா, 19 புதுக்குடியிருப்பு, பாஷையூர், யாழ்ப்பாணம்.
16. திருமதி. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
17. திருமதி. பற்றீசியா சில்வேஸ்ரர், பிரான்ஸ்.
18. செ. யல்சி லெம்பேட், கோவிலடி, 10ம் வட்டாரம், வங்காலை.
19. இன்பராஜ் லெம்பேட், அஞ்சலகம், பண்டத்தரிப்பு.
20. நீ. அனெற்றா, பரிகாரிகண்டல், முருங்கன்.
21. லீ. டெய்சி, செபஸ்ரியார் கோவில் வீதி, பெற்றா, மன்னார்.
22. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
23. தி. வெனிக்கலா மேரி, காகெல்ல, அப்புத்தளை.
24. ஜெ.ஏ. பிறிற்ரோ, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
25. வி. டனோசனா, இல. 46, பெரியுதம்பனை, வவுனியா.
26. நவரட்ணம் பற்றிமா றோஸ், புதுக்கமம், உயிலங்குளம்.
27. மி. நிரோஷன் குரூஸ், பறப்பாங்கண்டல், பெரிய குளம்.
28. யோ. அனுஷியா, 250 ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்
29. அ. டனுஸ்ரா, மடுக்கரை, நானாட்டான்.
30. சீ. குமார், வாழ்க்கைப் பெற்றான் கண்டல், முருங்கன்.
31. நீ. மடுச்செல்வி. பரிகாரிகண்டல், முருங்கன்.
32. ஜெயராஜ் லெம்பேட், அஞ்சலகம், உயிலங்குளம்.
33. திருமதி. ராஜினி ஜெயராஜ், சித்திவிநாயகர் ம.ம.வி. மன்னார்.
34. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
35. செ. றூபன் டயஸ், கற்கிடந்தகுளம், முருங்கன்.
36. ம. றெஜினோ கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
37. ஜீ. றஜீவன், பண்ணை வீதி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
38. ம. லின்ரா, பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.
39. எஸ்.எஸ். காஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
40. தி. அஜிதா, காத்தான் குளம், உயிலங்குளம்.
41. தி. மதன், காத்தான் குளம், நானாட்டான்.
42. அ. மேரி மெக்ரலின், நறுவிலிக்குளம், வங்காலை.
43. சீ. மெடோனா, இல. 9, 3ம் குறுக்குத்தெரு, வவுனியா.
44. சி. சௌமியா குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
45. கு. நிசாந்தினி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
46. ஆ. பேள்சினி, வெளிக்குளம், வவுனியா.
47. ம. கிறேஸ் வினோதினி, திருக்குடும்ப மடம், நானாட்டான்.
48. யோ. பிறைன்சி மரடானோ குலாஸ், பேசாலை.
49. யோ. பிறைற்றன் குலாஸ், 100 வீட்டுத்திட்டம், இல.86, பேசாலை.
50. ஜெ. சிந்துஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.

## சரியான விடைகள்
### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 29
### *தொடக்க நூல் (அதி. 17 – 32)*

**இடமிருந்து வலம்**
1. விருத்த சேதனம் 21:4
3. புத்துணர்வு 18:5
7. நி (ல) ப்பகுதி 22:2
9. கையோடு 24:10
12. நடத்தி 24:48
15. முகர்ந்து 27:27
18. விட்டகன்று 26:22

**மேலிருந்து கீழ்**
1. விளங்கும் 21:12
2. காலத்தில் 17:14
6. நானூறு 23:14
7. நிலத்தை 23:4
10. விதிமுறை 26:5
11. மனிதரை 24:61
12. நடந்தனர் 22:8
13. நிகழ்ந்த 27:20
15. முனையில் 31:26

**வலமிருந்து இடம்**
2. காட்டும் 22:2
4. புளிப்பற்ற 19:3
5. மரபு 21:12
6. நாடுகளுக்கு 17:4
8. வாயிலை 22:17
10. விடை 24:56
11. மனைவி 24:56
13. நினைவு 19:29
17. கூழும் 25:34

**கீழிலிருந்து மேல்**
10. விலைக்கு 17:13
12. நகைப்பு 19:14
13. நிலத்தில் 19:25
14. வெட்டுமறு 22:10
16. சுவையான 27:4
17. கூழில் 25:30
18. விண்மீன் 26:4
19. தண்ணீர் 29:7
20. மறைந்து 28:11

## திருச்சபையில் எக்காலத்தையும்விட இக்காலத்தில்

# நற்செய்தி அறிவிப்புப் பணி அவசரத் தேவை

### திருத்தந்தை கூறுகின்றார்

கத்தோலிக்க திருச்சபையில் எக்காலத்தையும்விட இக்காலத்தில் நற்செய்தித் தூதுப்பணி உடனடித் தேவையாகின்றது. இப்பணியைச் செய்வதற்கு கிறிஸ்துவோடு நெருங்கிய ஆழமான உறவில் வாழ்வது இன்றியமையாதது என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் தெரிவித்துள்ளார். *கிறிஸ்துவின் அரசு* எனப்படும் சர்வதேச அப்போஸ்தலிக்க இயக்கத்தின் சுமார் 4ஆயிரம் உறுப்பினர்கள் வத்திக்கானில் திருத்தந்தையைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். "*கிறிஸ்துவின் சேனைகள்* என்று அழைக்கப்படும் இயக்கத்தினராகிய நீங்கள் நற்கருணைமீது ஆழ்ந்த பக்தி உள்ளவர்களாக செயற்படவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். 1949ல் அருட்தந்தை மார்சியல் மாசியஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் குருக்கள், தியாக்கோன்கள், ஆண்கள், பெண்கள் என 30ற்கும் மேற்பட்ட நாடுகளில் 65 உறுப்பின[illegible]ளும், 3 இலட்சத்து 40 ஆயிரம் தன்னார்வப் பணியாளர்களும் உள்ளனர். 22 பல்கலைக்கழகங்கள், மற்றும் 158 பாடசாலைகளையும் இவ்வியக்கம் உலகெங்கும் நடத்துகின்றது. கிறிஸ்தவ அழைத்தலை ஊக்குவிக்கும் பிரசாரத்தையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.




## வளனகத்தின் விசேட சலுகை!

## மலிவு விலையில் பாடசாலை கொப்பிகள்

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி குறைந்த - மலிவு விலையில் தரமான பாடசாலை உபகரணங்களை மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இயங்கும் வளனகம் விற்பனை நிலையம் வழங்குகிறது. பாடசாலை மாணவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமக்குத் தேவையான கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள் உட்பட அனைத்துப் பாடசாலை உபகரணங்களையும் வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த விசேட சலுகையைப் பயன்படுத்த இன்றே வளனகத்திற்கு விரையுங்கள். உங்கள் பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


## மறைக்கல்வித் தேர்வு – 2004

### விகிதாசார அடிப்படையில் அதிக சான்றிதழ்கள் பெற்ற முதல் 15 பாடசாலைகள்

| பாடசாலை பெயர் | மா.தொகை | சான்றிதழ் | சராசரி |
|---|---|---|---|
| 1. மன்/ கோவிற் குளம் அ.த.க. பா. | 04 | 03 | 75% |
| 2. மன்/ புதுக்கமம் அ.த.க.பாடசாலை | 25 | 17 | 68% |
| 3. மன்/ தம்பனை அ.த.க. பாடசாலை | 09 | 06 | 66% |
| 4. மன்/ தலைமன்னார் பியர் அ.மு.க.பாடசாலை | 25 | 16 | 64% |
| 5. மன்/ இசைமாலைத்தாழ்வு றோ.க.த.க.பாடசாலை | 17 | 11 | 64% |
| 6. மன்/ அச்சங்குளம் அ.த.க.பாடசாலை | 30 | 19 | 63% |
| 7. மன்/ அடம்பன் றோ.க.த.க.பாடசாலை | 14 | 08 | 57% |
| 8. மன்/ சூரியகட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை | 69 | 39 | 56% |
| 9. மன்/ கொக்குப்படையான் றோ.க.த.க.பாடசாலை | 27 | 15 | 55% |
| 10. மன்/ பெரிய முறிப்பு அ.த.க.பாடசாலை | 12 | 06 | 50% |
| 11. வவு/ கற்காரங்குளம் இந்து வித்தியாலயம் | 08 | 04 | 50% |
| 12. மன்/ இலகடிப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை | 77 | 37 | 48% |
| 13. வவு/ இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம் | 471 | 228 | 48% |
| 14. மன்/ சிறுக்கண்டல் றோ.க.த.க.பாடசாலை | 30 | 14 | 46% |
| 15. மன்/ சிறுத்தோப்பு றோ.க.த.க.பாடசாலை | 41 | 19 | 46% |

## உருளும் உலகில் ஊடுருவும் கிறிஸ்தவம்

## வாழ்விழந்தவர்களுக்கு வாழ்வளிக்கும் வாழ்வுதயத்தை வாழ்த்துகின்றேன்

### ஜெ.ஏ. ஹமீட்

கடந்த 20 வருடகால யுத்த அனர்த்தங்களினால் அவயவங்களை இழந்து அல்லலுறும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்துக்கொண்டிருக்கும் மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் சேவை மகத்தானது. இச்சேவையானது தொடர்வதை ஆசித்து பணிசிறக்க வாழ்த்துகின்றேன் என யுனிசேவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட வாழ்வுதயத்தின் உதவிக்கரம் பிரிவின் கட்டிடத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திருவாளர். ஜெ. ஏ. ஹமீட் அவர்கள் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில், மிதிவெடிகள் மூலம் பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் கால்களை இழந்து செயலிழந்து வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். இவர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்பதென்றால் அதற்குக் காரணம் மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனமும் அதற்குக் கரம்கொடுக்கும் ஏனைய அமைப்புக்களுமே என்றார். (தொடர்ச்சி 13ம் பக்கம்)

## பேச்சுக்களை நடத்த சம்மதம் தெரிவித்துள்ளோம்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



இடைக்கால நிர்வாக சபை பற்றிய திட்டத்தின் சில கூறுகளை நாம் ஏற்காவிடினும் அதன் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த சம்மதம் தெரிவித்துள்ளோம் என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை ஆயர்களிடம் தெரிவித்துள்ளார். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆண்டிறுதிக் கூட்டத்தில் தடைப்பட்டுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்து உரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை ஆயர்கள் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் மேலும் தெரிவிக்கையில், பேச்சுக்களுக்கு நாம் உடன்படுகின்றோம் என்ற எமது சம்மதத்தை நேரத்துடனே ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளோம். நாம் எமது முழு ஒத்துழைப்பையும் நல்கி இதனை முன்னெடுக்க ஆயத்தமாக உள்ளோம். மேலும் பேச்சுக்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட நல்லிணக்க கவுன்ஸிலுக்கு பிரதிநிதிகளையும் அனுப்பிவைத்துள்ளோம். எமது கட்சி இன்னும் பேச்சுக்களில் உறுதியாகவே இருக்கின்றது. இடைக்கால நிர்வாக சேவைபற்றிய திட்டத்தின் சில கூறுகளை நாம் ஏற்காவிடினும் அதன் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த சம்மதம் தெரிவித்துள்ளோம்.

## உரோமில் சர்வதேச மரண தண்டனை எதிர்ப்பு நாள்

உலகில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை எதிர்க்கும் நடவடிக்கைக்கு உரோம் உட்பட 300 நகரங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. உரோமில் உள்ள கத்தோலிக்க பிறரன்பு அமைப்பினரின் முயற்சியினால் அண்மையில் ஆம்ஸ்ரடம், நயுயோர்க் புவனஸ், அயர்ஸ், பேளின், கிரோசிமா, பரீஸ் உட்பட 300 நகரங்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இத்தாலியின் தஸ்கனி பிரபு 1786ம் ஆண்டு நவம்பர் 30 திகதி மரண தண்டனையை நிறைவேற்றும் முறையை முதன் முதலாக நிறுத்தினார். அந்த தினத்தை நினைவு கூரும் முகமாக உலகெங்கும் மரண தண்டனைக்கு எதிரான ஊர்வலங்களும் கருத்தரங்குகளும் நடைபெற்றன.

கடந்த நவம்பர் 30ந் திகதி சர்வதேச மரண தண்டனை எதிர்ப்பு நாள் ரோமில் அனுசரிக்கப்பட்டது. பல நாடுகளிலிருந்து கலந்துகொண்ட மரண தண்டனைக்கு எதிரான பேரணியில் மரண தண்டனைச் சட்டங்களை நாடுகள் மாற்றவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இத்தாலியில் உள்ள தூய இஜிதியோ அமைப்பினரின் தலைவி செபானியா சாலி தலைமையில் உரோமை வரலாற்று சின்னமான சொலோ சேபில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## விதவைகளை வாழ வைக்கும் கனவு நனவாகிறது

### விதவைகளுக்கு கடனுதவி வழங்கும் வைபவத்தில் மன்னார் ஆயர்



மன்னார் வாழ்வுதயமும் வவுனியா குடும்பப் புனர்வாழ்வு நிலையமும் (FRC) இணைந்து ஏற்பாடு செய்த 30 விதவைகளுக்கு கடன் உதவி வழங்கும் வைபவம் அண்மையில் மன்னார் வாழ்வுதய மண்டபத்தில் இடம்பெற்றபோது பிரதம அதிதியாக கலந்து உரையாற்றிய மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் இனமத பேதமின்றி இன்று ஒருங்கே இப்பெண்களை இணைந்திருக்க வைத்த இச்செயற்றிட்டத்தை நான் பாராட்டுகின்றேன். இதுவரை காலமும் தமிழ் மக்களாகிய நாம் குப்புற விழுந்து கிடந்தோம். குறிப்பாக விதவைத் தாய்மார் தாங்கொணாத கஸ்ரங்கள் மத்தியில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து வாழ இவ்வுதவித்திட்டம் வழிவகுப்பதுடன், தம்போன்று கஸ்ரப்படும் ஏனைய விதவைகளுடனும் பரஸ்பர நல்லுறவை பேணும் வகையிலும் இது அமுல்படுத்தப்படவுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்விதமான ஒரு அரிய செயற்றிட்டம் வெற்றிகரமாக செயற்பட வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன் என்றார். (தொடர்ச்சி 13ம் பக்கம்)

## கத்தோலிக்க எழுத்தாளருக்கு விருது

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தின் 20ஆவது ஆண்டு விழா அண்மையில் பொரளை அக்குவானஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது, தேசிய பத்திரிகைகளில் கிறிஸ்தவ மஞ்சரியை சிறப்பாக வடிவமைத்து பிரசுரித்ததற்கான விருது தினகரன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த திருமதி பற்றிஷியா ஆரோக்கியநாதருக்கு வழங்கப்பட்டது. கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதி.வண. கலாநிதி ஓஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையிடமிருந்து அவர் இவ்விருதினைப் பெற்றுக்கொண்டார்.

1981ம் ஆண்டு முதல் வீரகேசரிப் பத்திரிகையில் பணியாற்றிய திருமதி பற்றீசியா ஆரோக்கிய நாதர் 1994ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் தன் பணிகளை ஆரம்பித்தார். தினகரன் பத்திரிகையின் கத்தோலிக்க மஞ்சரியை 1994ஆம் ஆண்டு பொறுப்பெடுத்த இவர் அதை சிறப்பான விதமாக வடிவமைத்து இன்று வரை வெளியிட்டு வருகிறார். இப்பணிக்காகவே இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு அக்குவானஸ் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாருக்கு மன்னா பத்திரிகை சார்பாக எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## அஞ்சலிக்கின்றோம்



மன்னார் மரியாயின் சேனையிலே பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்து பல்வேறு பணிப்பொறுப்புகளை வகித்த திரு. மரியதாஸ் அவர்கள் அண்மையில் மன்னாரில் மாரடைப்பால் காலமானார். அன்னாருக்கு மன்னா தனது அஞ்சலிகளைத் தெரிவித்து நிற்கின்றது. அவரது ஆன்மா ஆண்டவரில் அமைதிபெற வேண்டுகிறோம். (பதிப்பாசிரியர்)

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை [illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.